கழக வெளியீடு— ௬0௫

சிந்தாமணிக் கதை

திருவாளர் வித்துவான் முருக இலக்குவனர் அவர்கள்
எழுதியது.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை.

First Edition, November 1945.

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI :: MADRAS.

Printed at the Sengunthа Mithran Press, Madras. Q.H.M.S./95-B.

பதிப்புரை.

தமிழ் மொழியில் பழைய காப்பியங்கள் ஐந்தனுள் திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட 'சிவக சிந்தாமணியும்' ஒன்று. இக்காப்பியமே, தற்காலத்துக் கிடைத்திருக்கும் பழந் தமிழ் நூல்களை நோக்கு மிடத்துத், தமிழில் எழுந்த முதல் காப்பியமாகத் தெரிகிறது. தமிழில் பின் எழுந்த காப்பியங்களுக்கெல்லாம் இக்காப்பியமே வழிகாட்டியாக அமைந்தது. கம்பர் தமது இராமாயணத்தில் பல இடங்களில் இக்காப்பியத்தைத் தழுவியிருப்பதைத் தமிழ் வல்லார் அறிவார்.

மேலும் இந்நூல் முற்காலத்துத் தமிழ் நாட்டில் பரவியிருந்த சைனமதக் கோட்பாடுகளையும் ஆங்காங்கு கூறிச் செல்வதால் இந்நாட்டின் முற்காலச் சமய நிலையின் ஒரு பகுதியை உணர்தற்கும் இஃது ஒரு கருவியாகும்.

இந்நூல் சீவகன் என்னும் ஓர் அரசன் பிறந்ததுமுதல் வீடு பெற்றது இறுதியாகக் கூறுவதாய், அரசியலின் தன்மையும், காதல் வாழ்க்கையின் தன்மையும் சிறப்பாக வெளிப்படப் படிப்போர்க்கு ஆராத இன்பம் ஊட்டுவதாய்ச் செந்தமிழ் நடையில் சிறந்ததாய் அமைந்துள்ளது.

இத்தகைய சிறந்த நூலின் தன்மையினைத் தமிழ் மக்கள் யாவரும் உணரவேண்டி, அக்காப்பியச் சுவைமாறுத உரைநடையில் இயற்றப்பட்ட 'சிந்தாமணிக் கதை' என்னும் இந்நூலைத் தமிழுலகம் விரும்பி ஏற்குமாக.

— சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்.

சிந்தாமணிக் கதை

க. நாமகள் இலம்பகம்

சரயு என்னும் மாநதி பாய்ந்ததால் வளஞ்சிறந்து விளங்கிற்று ஏமாங்கதம் என்னும் நாடு. அந்த நாட்டில் வாழையும், கமுகும், தாழ்குலைத் தெங்கும், மாவும், பலாவும், பிறவும் ஆகிய பல்வகை மரங்கள் செழித்து வளர்ந்து சிறந்த பயன் தந்தன ; ஒன்று விதைக்க ஆயிரமாகப் பெருகி விளைந்தன செந்நெல் ; இனிய சாறுமிகுமாறு கணு முற்றித் தழைத்தன கரும்பு ; பூவிலுள்ள தேனைப் பருகி மகிழ்ச்சி மிகுந்தன வண்டுகள் ; வயல்களும், குளங்களும், ஆறுகளும் சோலைகளும் நெருங்கிக் கிடந்து இனிய காட்சியைத் தந்தன. குயில்கள் கூவவும், கிளிகள் மிழற்றவும், மயில்கள் ஆடவும், வண்டுகள் பாடவுமாய்க் குளிர்ந்த பூஞ்சோலைகளெல்லாம் நாடக சாலைகளாக விளங்கின ; அறநெறி, கலைநெறி, பொருள் நெறி, இன்பநெறி முதலிய பல்வகை நெறிகளிலும் நிற்பார்க்கு ஏற்றதாய் அந்நாடு மிளிர்ந்தது.

இராச மாபுரம் என்னும் நகரம் அந்நாட்டிற்கு முகம் போலச் சிறந்து விளங்கிற்று. அந்நகர் உயர்ந்த வலிய மதில்களால் சூழப்பட்டிருந்தது ; பகைவரை வாட்டுதற்குரிய பல்வகைப் பொறிகள் அம்மதிலின்மேல் அமைக்கப்பட்டிருந்தன ; மலை தழுவிக் கிடக்கும் கடல்போல அம்மதில் தழுவிக்கிடந்த பேரகழி அந்நகருக்கு அரணும் அழகும் செய்து நின்றது ; இளமரச் சோலையும், நறுமலர்ப் பொய்கையும்

சூழ விளங்கிற்று; செந்நிறப் பொடியினையும், நறுமணச் சாந்தினையும், சந்தனத்தொடும், பனிநீரொடும் கலந்து தெருக்களில் தெளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் நகரத்தார்! அவ்வாறு தெளிக்கப்பட்டவை மண்ணிடை வீழ்ந்த வானவில் போலத் தோன்றும்; இளஞ்சிறார் தெருக்களில் நடைத்தேர் உருட்டி விளையாடுவர்; பூசிப் புலர்ந்த சாந்தும், சூடிக்கழித்த மாலைகளும், கோழி ஒட்டிய காதணிகளும் தெருவிற் கிடந்து செல்வாரைத் தடை செய்தன; விழா எடுக்குநர் ஓசையும், புதிய நாட்டை வென்ற மன்னவனது முரசின் முழக்கமும், பலவேறு பண்டங்களைக் கொள்வாரும் கொடுப்பாரும் செய்யும் பேரார்ப்பும், விளையாட்டு, களியாட்டு முதலியவற்றின் ஒலியும் நிறைந்து கடல்போலக் கௌவை மல்கியது அம்மாநகர்.

அதனை ஆண்டுவந்த மன்னவன் சச்சந்தன் (ஸத்யந்தரன் = வாய்மையுடையான்) என்பான். அவன் நட்டார்க்கு நலஞ்செய்வதில் அமுது போன்றவன்; பகைவர்க்குத் தீமை செய்வதில் நஞ்சு போன்றவன்.

வண்கை யாற்கலி மாற்றிவை வேலினாற்
றிண்டி றற்றெவ்வர் தேர்த்தொகை மாற்றினான்
நண்க லைக்கிட னாய்த்திரு மாமகள்
கண்க ளுக்கிட னாங்கடி மார்பனே.

கோதை வித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலாற்
றாதை யேயவன் றாணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே.

தனது மாமனும் மன்னனுமாக விளங்கிய தத்தன் மகள் விசையை என்பாளை அவன் மணந்துகொண்டான். இளமையும், அழகும் கனிந்தவள் விசையை. அவளை மணந்து

கொண்ட பின்னர் மன்னவன் அரசியற் செயல்களை மறக்க லானான். அவளைவிட்டுப் பிரியாது கூடிக் களிப்பதற்கே பிறந்ததாக நினைத்தான். நாளுக்கு நாள் பெருகி முதிர்ந்த மயலால், மன்னவன் அரசாளும் கடன்மையை அறவே விட எண்ணினான்.

அவனுக்குத் தலைமை அமைச்சர் மூவர் இருந்தனர். நிமித்திகன், உருத்திர தத்தன், கட்டியங்காரன் என்னும் பெயரினர் அவர். அவருள் நிமித்திகனும், உருத்திர தத்தனும் அமைச்சுநெறி மாறாது கடமை ஆற்றி வந்தனர்; அறிவு திரிந்து முறை பிறழ்ந்த காலத்து மன்னவனுக்கு அறிவுரைகளை உறுதி யுண்டாகக் கூறிவந்தனர். கட்டியங் காரனோ பக்கத்திருந்தே பழுதெண்ணும் மந்திரியாயினான். எப்படியாவது அரசாட்சியைக் கவர்ந்துகொள்ள வேண்டும் என்ற தீய ஆசை அவன் உள்ளத்தில் உறைந்துகிடந்தது. தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக, மன்ன வனுக்கு மிகவும் இனியான்போல நடித்து வந்தான். மன் னவன் அதனை உணர்ந்தானல்லன். தன்மனம் போனவா றெல்லாம் போகுமாறு செய்கின்ற கட்டியங்காரனே அமைச் சருட் சிறந்தவன் என எண்ணினான். முன்னம் நடந்த பல சண்டைகளில் கட்டியங்காரன் அரசனுக்கு வெற்றிகள் பல தேடிக் கொடுத்திருந்தான். அவற்றை நினைத்த மன்ன வன் கட்டியங்காரனிடம் முழு நம்பிக்கையும் வைத்தான்.

ஒருநாள் மன்னவன் கட்டியங்காரனை அழைத்து, "கட்டியங்கார! அரசாளும் கடன்மையை விட்டு விலகி யிருக்க விரும்புகின்றேன் யான்; ஆதலால் அரசர்க்குரிய சிறப்புகளுள், குடையும், முடியுந் தவிர ஏனைய வெல்லாம் பெற்று நீயே அரசாண்டு வருவாயாக" எனப் பணித்தான். அதனைக் கேட்ட கட்டியங்காரன், ஆட்டுக் கிடைக் காவல்

பெற்ற நரிபோல உள்ளம் களித்தான். ஆயினும் களிப்பினை வெளிக்காட்டாது, "வேந்தே! யானையின்மேல் இடத் தகுவ தவிசினை நாயின்மேலிடுவதை யொக்கும் இச்செயல்; நாய்போன்ற எளியேன் தங்கள் அரசை ஏற்றுக்கொள்ளுதல் தக்கதாகுமோ?" எனப் பணிவு தோன்ற விளம்பினான். "நாய்போன்ற எளியேன்" என்று சொல்லியதை நினைத்தான் மன்னவன். அதனால் அவனை ஒரு சிறிதும் ஐயுற்றானல்லன். நன்றி மறவாதவன் இவனே என்று துணிந்தவனாகி, "எனது சொல்லை மறாது நீ ஏற்றுக்கொள்க" என்றான். கட்டியங்காரனது ஆணைக்குக் கீழ்ப்படியுமாறு நகரமாந்தர்க்கும் முரசு அறைவித்தான். அதனைக் கேட்ட அமைச்சர்களும், மாந்தர்களும் துணுக்கமும், துயரமும் உற்றனர்.

"தையலார் மயலில் மூழ்கி நாடாட்சியைப் பிறர்க்கீதல் தகுவதன்று" என நிமித்திகன் அரசனுக்குக் கூறினான். அது கேட்ட மன்னவன், தன்மனம் புண்படுமாறு ஒன்றையும் கூறவேண்டா எனக் கடிந்துகொண்டான். "அறிகொன்றறியானெனினும் உறுதியுழையிருந்தான் கூறல் கடன்" என்பதை உணர்ந்த நிமித்திகன் பின்னும் மன்னவனை நோக்கி, "வேந்தர் வேந்தே! திலோத்தமையை விரும்பிய பிரமன் விண்ணுலகத்தை யிழந்தான்; அதுவுமன்றி அழியாப் பழிச் சொல்லையும் பெற்றான்; மலையரசன் மகளை ஒரு பக்கத்தே வைத்தது மதிசூடும் அண்ணலார்க்குப் பெரும் பழியாயிற்று; தொழுநை யாற்றின்கண் நீராடிய மகளிரின் பல துகிலையும் கவர்ந்து, மாயோன் பெற்றது மாறாப் பழியேயன்றோ; காமங்கனிய நின்ற ஓர் ஆண் கழுதையைக் கண்டு தான் ஒரு பெண் கழுதையாகச் சென்று அதனைக் கூடினான் புத்தன்; இங்ஙனம் செய்த அச்செயல் சுடுகாட்டில்

விழுந்த பூமாலை போல இழிந்திடப்பட்டதன்றோ! தருமனை முதல்வனாகக் கொண்டார் ஐவரும் ஒரு பெண்ணை வைத்திருந்தமையால் நிலைத்த பெரும் பழியினை இன்றளவும் போக்கினார் யார்; இவற்றை யெல்லாம் அறிந்துவைத்த நீயோ இவ்வாறு அறிவிழப்பது?" என மனங்கொள்ளக் கூறினான்.

கேட்ட மன்னவன் வாளா விருந்தது கண்டு உருத்திரதத்தன் என்னும் அமைச்சன் அரசனை யணுகி, "அரசரேறே! விண்ணவர் கோமானும் அமைச்சர் சொல்லை இகழ்ந்து ஒதுக்குதல் செய்யான். அவனை யொத்த பேரறிவினனாகிய நீ அமைச்சர் சொல்லை மதியாதிருப்பது என்னோ?" எனக் கூறினான். அவற்றை யெல்லாம் கேட்ட மன்னவன், "இவ்வுலகத்திற் பிறந்தார் ஒவ்வொருவரின் போகமும் வாழ்நாளும் அவரவர் கருப் பதியும் காலத்திலேயே அளக்கப்பட்டுள்ளன. அந்த அளவிற்கு மாறாக இவ்வுலகில் ஒன்றும் நிகழ்வ தில்லை என்னும் உறுதியுடையேன் யான். எனக்கு நீவிர் அறிவு புகட்ட வேண்டா,' என்று கூறினான். அமைச்சர் செயலற்றுத் திரும்பினர். மன்னவனது தவறுபாட்டைக் காணப்பெறாத நிமித்திகன் துறவு பூண்டான்.

விசையைபால் கொண்ட மோகத்தில் அழுந்திபவனாய் மன்னவன் காலங் கழித்து வந்தான். ஒருநாள் விடியற்காலையில் விசையை தீய கனவு ஒன்று கண்டாள். கண்டதும் அஞ்சி நடுங்கினாள். உடனே எழுந்து கண் கழுவிக் கொண்டு அருகதேவன் திருவடிகளை வாழ்த்தி வணங்கினாள். பின்னர்த் தனது நாயகனை எழுப்பி "நாயக! தீய கனவு ஒன்று கண்டேன்; கடை யாமத்திற் கண்ட கனவு பத்து நாளிற் பலிக்கும் என்பது கனா நூல் முடிபு. ஆதலால் தனியும் அஞ்சுகின்றேன். அக்கனவுதானும் மூன்று

பிரிவினை யுடையது. ஒன்று, ஒரு அசோக மரம் தான் இடமாகத் தழைத்து மலிந்த பூங்கொத்துக்களைக் கேடுறச் செய்தது. மற்றொன்று, பின்னர் அவ்வசோகுதானும் அடியற்று வீழ்ந்தது. பிறிதொன்று, அதன் வழியிலே தோன்றிய ஓர் முளையானது எட்டு மாலைகளை உடைய தொரு முடிக்கு இருப்பிடமாக நட்டுவைத்தாற்போல ஓங்கி வளர்ந்தது. இவற்றின் பயன் யாதோ?" என வினவினள். மன்னவன் கனவின் பயனைச் சிந்தித்து உணர்ந்தான். அசோகமரம் அரசனையும், பூங்கொத்துக்கள் அவனது சுற்றத்தாரையும் குறித்தது. அவற்றின் வீழ்ச்சி அவர்களுடைய வீழ்ச்சியை முன்னர்க் காட்டிற்று. அதன் வழியிலே தோன்றிய முளை சிவகனவான். எட்டு மாலைகள் அவன் மணக்க இருக்கும் மகளிர் எண்மரையும், முடி அவன் அரசாட்சியைப் பெறுதலையும் குறித்து நின்றன. இவையே கனவின் பயன். இவ்வுண்மையைச் சொன்னால் தேவி அவலமுறுவாள்; அவலமுறுதலால் அவள் வயிற்றிலுள்ள கருவிற்குக் கெடுதல் நேரிடும் என மன்னவன் எண்ணினான். ஆதலால் கனவின் முதற் பகுதியின் பயனை மறைத்துவிட்டு, "காதலி! நினது வயிற்றில் ஒரு சிறந்த புதல்வன் தோன்றுவான். அவன் எட்டுப் பெண்களை மணந்து புகழுடன் அரசாள்வான். இவையே நின் கனவின் பயனாகும்" எனக் கூறி முடித்தான்.

பின்னர்த் தனியிடத்திற்கு வந்தான் மன்னவன். தான் எதிர் நோக்கவேண்டிய தீமைகள் பல உள என்பதை அக்கனவு முன்னதாகக் காட்டிற்று என்பதையும் கருதினான். தனக்கு வரும் தீங்குகளை எண்ணிச் சிறிதும் கவலையுற்றானில்லை. நிரம்பிய கருப்பத்தோடிருக்கும் தேவியை என் செய்வது? தேவிக்கு ஒரு தீங்கும் நேராவண்ணம்

எவ்வாறாயினும் பாதுகாத்தல் வேண்டுமேயென எண்ணிக் கலங்கினான். கண்ணீர் உகுத்தான். பின்னர் ஒருவாறு தெளிந்தவனாகிக் கைவல்ல தச்சன் ஒருவனை அழைத்து, மயில்போலும் வடிவமுள்ள வானவூர்தியொன்று அமைக்குமாறு ஆணையிட்டான். தச்சனும் மிகச் சிறந்த ஊர்தியொன்றினை விரையச் செய்து கொண்டுவந்து அரசன் முன்னிலையில் வைத்தான். அப்பொறியினை வலப்புறமாகச் சுழற்றினால் மேலெழுந்து பறக்கும். இடப்புறமாகச் சுழற்றினால் மெல்லக் கீழிறங்கிக் கால்குவித்து நிற்கும். தச்சனது கைவன்மையைக் கண்ட காவலன், அதற்குத் தக்கவாறு சிறப்புச்செய்து அவனை யனுப்பினான். பின்னர் அப்பொறியினை ஊர்ந்து செலுத்துமாறு தேவியைப் பயிற்றுவித்தான். விளையாட்டுப்போலப் பயின்ற தேவியும் பொறியை ஊர்ந்து செலுத்த வல்லவள் ஆயினாள்.

அரசனைக் கொன்றுவிட்டால் அரசாட்சி தனக்கே உரியதாகிவிடும் எனக் கட்டியங்காரன் கருதினான். தனது உறவினர் பலரையும் அரசியல் வினையில் அமர்த்தி, அரசியற் கட்டுப்பாட்டையும் தேடிக்கொண்டான். ஒருநாள் அவன் அமைச்சர்களை நோக்கி, ' நமது மன்னவனுக்குப் பகையாயதொரு தெய்வம் உளது ; அத்தெய்வம் அவனைக் கொல்லுமாறு என்னை நாள்தோறும் நலிகின்றது; அவனது அரியணையில் என்னையே அமருமாறு தூண்டுகின்றது ; இது பற்றிய நுங்கள் கருத்து யாதோ ?'' என வினவினான். அதனைக்கேட்ட அமைச்சர்கள் அனைவரும் திடுக்குற்றனர்.

தருமதத்தன் என்பவன் எழுந்து நின்று, ' கட்டியங்கார ! காரிகையார் மோகமென்னுங் கடலில் மூழ்கினான் காவலன். காவலனது கேட்டைக் காணப்பெறாத நிமித்திகனே துறவு பூண்டான். கடல்சூழ்ந்த இவ்வுலகமும்

பிறவும் நினைதே யினி. இதற்குக் கவலையுறவும் வேண்டுமோ? தன்னை உயர்த்திய மன்னவனைக் கொல்லப் புறப்படும் கொடியோனைவிட்டுக் குலமும், திருவும் மெல்லப் புறப் பட்டுவிடும்; மன்னவனது ஆக்கத்தையே கருதுவோர் நிலைத்த புகழைப் பெறுதலும் தவறாது. மன்னவன், ஆசிரியன், தாய், தந்தை, தம்முன் என்ற ஐவருக்கும் தீங்கு சூழ்ந்தவன் நிரையத்துள் அழுந்தியேவிடுவான். அமைச்ச னாக இருந்து அரசு வெளவியோருள் யாரே வாழ்ந்தனர்? இவற்றையெல்லாம் சிந்தித்து நடப்பாயாயின் நன்மையும் புகழும் பெறுவாய்" என இடித்தும் விளக்கியும் கூறினான்.

மதனன் கட்டியங்காரனது அமைச்சருள் ஒருவன்; மைத்துனனும் ஆவான். மதனனுடைய தீய உள்ளத் திற்குத் தருமதத்தனுடைய நீதி மொழிகள் கொதிப்பை உண்டாக்கின. சினம் மிகுந்தவனாகி எழுந்து நின்று, "தோள் வலியோடு எதிர்க்கும் பகைவர்களின் தலை சிதறும் படி வாளினாற் பேசுவேன் அல்லது வாயினாற் பேசுதலறி யேன்; நீதிகளைச் சொல்லிப் பொரிக்கறிகளைக் கூட்டி உண் ணும் கைகள் வாளெடுக்கும்போது வழுவழுக்கும்," எனக் கூறினான். இவற்றை யெல்லாம் கேட்டிருந்த கட்டியங்கார னும் மிகுந்த சீற்றம் கொண்டான். அவனது உடம்பெல் லாம் முத்து நிரைத்ததுபோல வியர்த்தது; புருவங்கள் குறித்தன; கண்கள் நெருப்பைக் கக்கின; கைகள் கட கத்தை உடைத்தன. இவ்வாறு வெகுண்டவன் வெடி படச் சிரித்து, "மன்னவனை வானுலகாள அனுப்பி, யானே அரசை மேற்கொள்வேன்; பொன் மிகப் பெருகுமாறு இம் மண்ணுலகைக் காத்தலும் செய்வேன்; நின்னைப்போலும் உற்றார்க்குக் கேடு சூழ்வார் ஒருவரும் இல்லை; என்னைப் போல் பொறுமையுடையாரும் இவ்வுலகத்தில் இல்லை,"

என்று கூறினன். அறிவிழந்த அரசனுக்கு அக்கேடு தகுவதே என எண்ணித் தருமதத்தன் வெளியேறினன். அரசனுடைய சுற்றத்தாரை யெல்லாம் கட்டியங்காரன் சிறையிலடைத்தான். தன்னை ஆதரித்த தீயோர்களைத் துணைகொண்டு போருக்கும் எழுந்தான்.

வாயில் காவலர் அரசனிடம் சென்று, கட்டியங்காரன் போர்தொடுத்து வந்திருப்பதை அறிவித்தனர். முன்பு போலத் தனது ஆணையின்கீழ் நாடு இருப்பதாக மன்னவன் நினைத்தான். வீரர்களைக் கூவி, “வீரர்காள்! கோட்டை வாயிலின் வலிய கதவுகளைத் திருத்தமுறத் தாழ் இடுங்கள்; யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் போருக்குத் தயார் செய்யுங்கள்; மதிலைக் காக்கும் வீரர்கள் விரைந்து போருக் கெழுங்கள்” என்று விண்ணகத்திலிருந்து இடி இடிப்பதுபோல முழங்கிக் கூறினன். தனது ஆணைவழி நிற்பார் யாரு மின்மையை வேந்தன் கண்டான். உடனே புலிக்கோடிட்ட உறையினுள் இருந்த தனது வாளை உருவினன். அவ்வாளினைக் கையேந்தி நின்று, “கட்டியங்காரனது வலியினைக் காண்போம்” என்று கூறிப் பல் முழுவதும் விளங்கச் சிரித்தான். சிரித்து வாளோடு நடந்து வேந்தன் தேவியை அணுகி, “மாதராய்! நீ கண்ட கனவு பயன்தரத் தொடங்கிவிட்டது; கருவில் இருக்கும் மகனைக் காத்தல் நினது கடன். இந்நொடியே நீ வெளியேறுதல் வேண்டும்” என மொழிந்தான். தேவி நெஞ்சம் குமுறித் துடித்தாள்; ஆ! ஆ! என அலறினள்; கதறினள். மன்னவன் தேவியை எடுத்து மார்போடணைத்து, “நல்லாய்! நன்மையும் தீமையும் மாறி மாறி வருதல் உலகியல்பு; அதற்காக வருந்துதல் அறிவுடையார் செயலன்று; நீ செயலற்றுக் கலங்குவது உனது வயிற்றிலுள்ள கருவிற்குக் கேடு தருவ

தாரும்; மனதைத் தேற்றிக்கொண்டு மயிற்பொறியை ஊர்ந்து தாயகம் செல்; காலம் தாழ்த்தாதே" என்று கூறிக் கண்ணீர் வடித்து நின்றான். தேவி பின்னும் கலங்கியவளாகி, "காலன்வாய்க் களிக்கின்ற நும்மை விட்டுப் பிரிந்து தனியே சென்று வாழ்தலும் கூடுமோ! கருவிலுள்ள மகவினுக்காக உயிர் தாங்கி நிற்கவேண்டும் தீவினையே னுயினேன்; இன்பத்தான் மயங்கி அறிவிழந்தார் யாவராயினும் துன்பத்தாலும் மயங்கி அறிவிழக்க வேண்டும் போலும்; யான் என்னிலையாவேன் என்று என்னால் உணர முடியவில்லை; சாகலா உயிர் தாங்கிச் செல்கின்றேன்" என்று கண்ணீர் பெருக அழுதுகொண்டே மயிற்பொறியை ஊர்ந்து செலுத்தினாள்.

மன்னவன் தன் கையகத் திருந்த வாளை நோக்கி, உயிர்த் துணையாம் கூர் வாளே! அறிவும், உறவும், அமைச்சும் முதலிய அனைத்தும் என்னைக் கைவிட்டகாலத்தும் நீயே எனக்குத் துணையாகி நின்றனை. பகைவன் வாள் என் மார்பிற் பாயாது நீயே காக்கவல்லாய்; நின்னைக்கொண்டே பகை வலியையும் என் வலியையும் அளந்து காண்பேன் எனக் கூறி வீர நகையோடு வெளிப்போந்து எதிர்ப்பட்டார் அனைவரையும் வாளுக் கிரையாக்கினான். முடிவில் தானும் அவ்வாளினுக்கே இரையாகி மடிந்தான். மன்னவன் இறந்தான் என்பதைக் கண்டோரும் கேட்டோரும் ஆறாத் துயரத்துள் அழுந்தினர்! கட்டியங்காரன் தானே அரசன் என்பதைப் பறைசாற்றித் தெரிவித்தான். அதனைக்கேட்ட நகர மாந்தர் அனைவரும் இன்னும் எக்கொடுமைகள் நிகழுமோ என்று அஞ்சி அரற்றினர். மயிற் பொறியில் சென்ற விசையை கட்டியங்காரனது முரசொலியைக் கேட்டாள். "நாயகன் இறந்து பட்டான்போலும்" என

எண்ணிக் கலங்கினாள். கலங்கிச் சோர்ந்து தன்னையும் மறந்து கொடிய துன்பத்துள் மூழ்கிவிட்டாள் விசையை. பொறியை வலப்புறமாகச் சுழற்றவும் தவறினாள். அப்பொறி இடப்புறமாகச் சுழன்று ஒரு சுடுகாட்டில் இறங்கிக் கால் குவித்து நின்றது.

சிறிதே தெளிந்து கண்விழித்துப் பார்த்த விசையை, தான் ஒரு சுடுகாட்டில் கிடப்பதை அறிந்தாள். மீண்டும் நெஞ்சம் பதறியவளாகி, "மன்னவன் மகளாகப் பிறந்து மன்னவன் தேவியாக வாழ்ந்த யானே இன்று இச்சுடுகாட்டில் கிடக்கின்றேன். உயிர்கட்குக் கொடிய தீவினை உண்டென்பதை விதியார் என் மூலமாக உலகிற்குக் காட்டினார்; இதுவரை அதனைக் காணாதார் என்னைக் கண்டு தெளிந்து கொள்வீர்களாக" என்று கூறிப் புலம்பினாள். புலம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்திலேயே வயிறுளைந்து வருந்தி இள ஞாயிறு போன்ற ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தாள். பெற்றெடுத்த அப்புதல்வனுடைய தாமரை போன்ற கையும், காலும், கண்ணும், முகமும் முதலியவற்றை நோக்கி நோக்கிப் பேரின்பக் கடலுள் மூழ்கித் துன்பத்தையும் தன்னையும் மறந்திருந்தாள். "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்" என்ற செம்மொழி அவளிடத்திலும் காணப்பட்டது. அறிவையும் உணர்வையும் விழுங்கி எழுந்த கொடிய துன்பத்தால் ஆடை குலைந்ததும் அறியாமல் ஆவி போன உடல்போலக் கிடந்த அவ்வளவு துன்பத்தையும் ஒருநொடியில் மறந்து மகிழ்ந்த அவளது சேயன்பை என்னென்பது.

மின்னல் தோன்றி மறைந்த உடனே வானம் இருண்டு இடி இடித்துக் குமுறும். அதுபோல விசையை உள்ளத்தில் தோன்றிய மகிழ்ச்சியாகிய மின்னல் மறைந்தது. நினைக்கவும்

இயலாத கொடிய துன்ப நிலைகள் அடுக்காகத் தோன்றி அவள் நெஞ்சம் குமுறிப் பதைக்குமாறு செய்தன. ஈன்றெடுத்த இளம் புதல்வனைக் கண்ணீராட்டிக் கழுவி, விசையை; "அந்தோ! மகனே! நீ கருவில் இருந்த காலத்து மன்னவர் மன்னனாக இருந்தனை; இன்றோ பகைவனது சுடுகாட்டில் கிடக்கின்றாய். நின்னை இந்நிலையில் கண்டு வைத்தும் யான் இன்னும் சாவாது நிற்கின்றேன். இதனை விட வலிய கொடிய விதி வேறும் உண்டோ! கொடிய வாயினையுடைய நரிகள் எல்லாம் ஊளையிடுகின்றன ஒருபக்கம்; கொள்ளி வைக்கப்பட்ட பிணங்களெல்லாம் கொழுந்துவிட்டெரிகின்றன மற்றொருபக்கம்; திரும்பிய பக்கமெல்லாம் கோட்டான்கள் நின்று குமுறுகின்றன; நிழல்போலும் தோற்றத்தினையுடைய பேய்களெல்லாம் பிணநாற்றத்திற்கு மகிழ்ந்து தலைவிரித்தாடுகின்றன; முரசு முழங்க, முழவதிர, மங்கலம் தழைய, மகிழ்ச்சி தழையப் பிறக்கின்ற நீ, பாராட்டும் வாழ்த்துரையும் வழங்கப் பிறக்கின்ற நீ, சிறைக்கோட்டமும் பண்டாரமும் திறந்துவிடுமாறு பிறக்கின்ற நீ இன்று இவ்வாறு பிறப்பதோ! ஐபகோ! உலகமெல்லாம் உடையோனே! நின்னை வளர்க்கவும் வழியறியேன்; உலகத்தில் உள்ள துன்பங்கள் எல்லாம் என்பாலே வந்து சேர்ந்தனவோ; . அருகதேவன் துணைசெய்வான் என நங்கை கூறினார்; "இன்று துன்பத்தைத் தவிரத் துணையாயினார் ஒருவருமில்லை" என்று பலவாறு புலம்பிக் கண்ணீர் வடித்தனள்.

பற்றாமன்னன் நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்றா ரில்லாத் தமியேனால் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிந் ஞாலம் உடையாய்நீ வளருமா றறியேனால்
எற்றே இதுகண் டேகாதே இருத்தி யாலென் இன்னுயிரே.

பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பால் துயர்க்கடலைப் போக்கும் புணைமற் றுனக்கால்
சிறந்தா ருளாரே லுரையாயால் சிந்தா மணியே கிடத்தியால்
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின் வருந்துகோ.

பேயும் கலங்கிக் கண்ணீர் பெருக்கும் அவளது புலம்பலைக் கேட்டதொரு தெய்வம் அவளுக்குத் துணைசெய்ய வந்தது. விசையையின் தோழியாகிய சண்பகமாலை வடிவத்தோடு அணுகிய அத்தெய்வம், விசையையைப் பார்த்துக் கண்ணீர்விட்டு, "அன்னாய்! நின்னை இந்நிலையில் காண்பது யாங்கள் செய்த தீவினையே போலும்" என இயம்பிற்று. அதுகேட்ட விசையை தனது தோழியே வந்துவிட்டாள் எனக் கருதிக் கலங் கவிழ்ந்த காலத்துக் கைப்புணைப் பெற்றார் போல மகிழ்ந்து, "தாயே, எனது துன்பத்துக்கு நீயே துணையாயினை. நினது அன்பே சிறந்த அன்பாகும்! அருகதேவனே நின்னை அனுப்பிவைத்தான்போலும்" எனக் கூறிச் சிறிதே தேறித் தெளிந்தாள். எனினும் செய்வதறியாது பின்னும் திகைத்தாள். சண்பகமாலை தேவியை நோக்கி, "தாயே! நீ இன்னவாறு தனித்துப் புலம்புவது தக்கதன்று. நினக்குப் பிறந்தவனும், முருகனைப் போன்றவனுமான இந்நம்பி உலகத்தையெல்லாம் அடக்கி ஆளுவான்; அன்றியும், கட்டியங்காரனை வதைத்து வெல்லுவதற்காக இப்பொழுதே இவனை ஒருவன் எடுத்துச் செல்வான். நாம் இருவரும் மறைந்திருத்தல் நல்லது" என்று கூறினாள்.

இவற்றைக்கேட்ட தேவி ஒருவாறு ஆறுதலடைந்தாள். அடையினும் பெற்ற உடனே மகனைப் பிரிதல் வேண்டுமே எனக் கலங்கினாள். மகனை எடுத்து மார்போடணைத்துச் சுரந்து பொங்கிய பாலமுதத்தை ஊட்டினாள். "மலைபோன்ற தன் வலிய தோளில் ஏந்தி மகிழானுய் நின்

தந்தை நின்னைக் காணாதே பிரிந்தான்; நின்னைக் கண்ணுற்றுப் பிரிகின்றேன் யான்; பெற்றெடுக்கும் பேறு பெற்றேனன்றி வளர்த்தெடுக்கும் பேறு பெற்றிலேன்; நஞ்சினை அயில்வார்போல இத்தீமைகளை மென்று விழுங்குகின்றேன்; மகனே! நீ தீதின்றி விளங்குவாயாக" என்று கூறினாள். சண்பகமாலை வந்து அம்மகவினை எடுத்து மரத்தடியிலே ஒரு பள்ளியிற் கிடத்தி, "மன்னவன் மகனே! பகைவர்கள் செய்யும் தீமையெல்லாம் நின்னைச் சூழாதிருப்பனவாக; அருகதேவன் திருவருள் நினக்குத் துணை செய்வதாக" எனக் கூறித் தேவி கையிலிருந்த மோதிரத்தை அணிந்து விலகினாள்.

நல்வினை செய்தி லாதேன் நம்பிநீ தமியை யாகிக்
கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ என்று விம்மாப்
புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்த தேபோல்
ஒல்கியோர் கொம்பு பற்றி ஒருகணா னோக்கி நின்றாள்.

தனது இறந்த மகனைப் புதைப்பதற்காகக் கந்துக்கடன் என்னும் வணிகன் ஒருவன் அங்கோரத்து வந்து சேர்ந்தான். இறந்த புதல்வனைப் புதைத்த பின்னர் அம்மருங்கே இள ஞாயிறுபோலப் பேரொளி பரப்பிக் கிடந்த இளங் குமரனைக் கண்டான். நல்ல புதல்வன் ஒருவனைக் கந்துக்கடன் அடைவான் என முனிவர் ஒருவர் சொல்லியிருந்தார். அவ்வாறு சொல்லப்பட்ட புதல்வன் இவனே போலும் எனக் கந்துக்கடன் எண்ணினான். எண்ணி அம்மகவை அணுகி அதன் கைம்மலரிற் கிடந்த ஆழியால் மன்னவன் மகனாதலை உணர்ந்து அவ்வாழியினை மறைய வைத்து மகவினை வாரியெடுத்தான். அக்குழந்தை தும்மியது. தெய்வம் "சீவ" என வாழ்த்திற்று. இவ்வாறு அம்மகவினை எடுத்துச் சென்றவன் தன் மனைவியை

அழைத்து, "நங்காய்! இறந்த நின் புதல்வன் நீதிலனுய் மீண்டும் பிழைத்தனன். பெற்று வளர்த்து வருவாயாக" எனக் கூறி மகவைத் தந்தான்.

கந்துக்கடன் சென்றபிறகு, சண்பகமாலை தேவியை அழைத்துக்கொண்டு இருட் போர்வையில் மறைந்து பகைவனது நாட்டைக் கடந்தாள். ஆறும், மலையும், காடும் கடந்து நடந்ததால் மிகவும் களைப்புற்ருள் தேவி. அதனுல் இருபுறமும் ஆறு சூழ நடுவே அமைந்ததொரு சோலையிற் படுத்து இளைப்பாறினுள். பொழுது புலர்ந்து கதிரவனும் தோன்றினுன். மாதரார் பலர் அச்சோலையில் தவஞ் செய்துகொண்டிருந்தனர். அத்தவ மாதர் அனைவரும் தேவியை மகிழ்ந்து வரவேற்றனர். அவர்கள் அறிவுரையினைக்கேட்ட தேவி தானும் துறவுக் கோலம் பூண்டாள். சண்பகமாலையும் தவமாதரும் சூழக் கவலையின்றி வாழ்ந்து வந்த தேவிக்கு ஒருநாள் மகனைப்பற்றிய நினைவு வந்தது. சண்பகமாலையை அழைத்து இராசமாபுரம்சென்று, மகனைப் பற்றிய செய்திகளை அறிந்துவரும்படி சொன்னுள். சண்பகமாலையாக வந்த தெய்வம் தானும் மறைந்துசெல்ல எண்ணிற்று. தேவியை வஞ்சித்து மறைய மனமில்லாமல் தயங்கித் தவமாதர்களை நோக்கி, "அருந்தவம் புரியும் மடந்தைமீர்! இம்மாதராள் உங்கள் அடைக்கலம். இவளைக் காத்தல் உங்கள் அனைவரது கடமையும் ஆகும்' என்று கூறி மறைந்தது.

இழந்த புதல்வனைப் பெற்றதற்காகத் தாய் மகிழ்ந்தாள். மன்னன் மகனைப் பெற்றதற்காகக் கந்துக்கடன் மகிழ்ந்தான். அவர்கள் இருவரும் தங்கள் மகிழ்ச்சியைப் பெரிய விழாவாகக் கொண்டாடிக் களித்தார்கள். அவ்வுண்மையைக் கட்டியங்காரன் அறியவில்லை. தனது அர

சாட்சிக்கு மகிழ்ந்து விழாக் கொண்டாடியதாக அவன் நினைத்தான். அதனால் கந்துக்கடன் வீட்டிற்கு அளவிறந்த பொன்னும் மணியும் முதலியவற்றைத் தானாகவே கட்டியங்காரன் அனுப்பிவைத்தான். குழந்தையை எடுத்தபோது ஒரு குரல் "சீவ" என வாழ்த்திற்றாதலால் சீவகன் எனப் பெயரிட்டு அக்குழந்தையை வளர்த்துவந்தான். பிறரறியாமல் குழந்தையை வளர்ப்பதிலும், கட்டியங்காரனைத் தொலைப்பதற்குரிய வழிகளைத் தேடுவதிலும் கந்துக்கடன் தன் கருத்தைச் செலுத்திவந்தான். சீவகன் வந்த சில காலத்திற்குப் பின்னர்க் கந்துக்கடனுக்கு மற்றோர் ஆண் மகவு பிறந்தது. நந்தட்டன் என்னும் பெயரிய அக்குழந்தையும் சீவகனோடு வளர்ந்தது. உரிய காலத்தில் இருவரும் கல்வி கற்பிக்கப்பட்டனர். சச்சந்தனுக்கு நண்பராயினர் பலர் வழியிலும் தோன்றிய பலரும் சீவகனுக்கு நண்பராயினர்.

அறிவு நூற் கலையிலும் படைக்கலக் கலையிலும் சீவகன் தேர்ச்சி பெற்றான். அவையேயன்றி இசை நாடகக் கலைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றான். ஆசிரியர் கூறிய அற உரைகளைக் கூர்ந்து செவியேற்ற சீவகன் துறவறத்தை விழைந்தான். அதனை உணர்ந்த ஆசிரியர் சீவகனைத் தனியிடத்தே அழைத்துச் சென்றார். தான் கூறுவனவற்றைக் கேட்பார் யாருமிலர் என்பதைச் செவ்வையாகத் தெரிந்து கொண்டார். பின்னர், "சச்சந்தன் என்னும் மன்னவன் ஒருவன் மந்திரி ஒருவனால் வஞ்சிக்கப்பட்டு அரசையும் உயிரையும் இழந்தான்; அவன் மனைவி விசையை என்பாள் சுடுகாட்டில் ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தாள்; தான் யார் என்பதையே தெரிந்துகொள்ள முடியாமல் அப்புதல்வன் வளர்கின்றான்" என்று படர்க்கையால் வைத்து அவன்

வரலாற்றைக் கூறினர். கேட்ட சீவக நம்பி நெஞ்சம் பதைப்புற்று, "ஐயாவே! அப்புதல்வன் யாரோ தான்; எளியேனுக்குச் சொல்லி யருளுவீராக" என இரங்கிக் கேட்டான். அதற்கு ஆசிரியர் "நீயே" எனச் சுட்டிக் கூறினார். தந்தையின் வீழ்ச்சியும், தாயின் துன்பமும், தனது தாழ்வும் ஒருங்கு தோன்றித் தன்னை நலியவே சீவகன் கீழே விழுந்து மூச்சடங்கினன். சிறிது நேரத்திற்கெல்லாம் தெளிந்து எழுந்து சிங்க ஏறுபோலச் சீறிச் சினந்தான். "கட்டியங்காரன் முடித் தலையை இப்பொழுதே துணிப்பேன் எனப் பொங்கி எழுந்தான். அவனது சீற்றத்தைக் கண்ட ஆசிரியர் "நம்பீ! மன்னவன் மகனுதல நன்குணர்த்தினை; நீ சொல்லியவாறு செய்யவேண்டியது நின் கடமையே; எனினும் ஓராண்டுக்குப் பின்னரே நீ அச்செயலில் ஈடுபடவேண்டும். அதுவரை நினது சீற்றத்தையும் உண்மையினையும் வெளிக்காட்டாதே" என்று கூறித் தணித்தார். பின்னர் ஆசிரியர் தனது வரலாற்றை உணர்த்தக்கருதி, "சீவக! வாரணவாசி மன்னவன் யான்; உலோக மாபாலன் என்ற பெயரினேன்; யானைத்தீ என்னும் நோயால் பற்றப்பட்டுக் கந்துக்கடன் வீட்டிற்குவந்து சிறிது நீங்கப் பெற்றேன்; நின்னைக் கண்டதும் முழுவதும் நீங்கி நலமுற்றேன்; நினக்குக் கலைகளைப் பயிற்றவேண்டி இதுவரை இங்கிருந்தேன்; இனித் தவஞ்செய்ய யான் கானகம் செல்கின்றேன்; கொக்குப்போல நீ காத்திருந்து தக்க காலம் வந்ததும் பகைவனை அடர்த்து அரசுபெற்று வாழ்வாயாக" என்று கூறிச் சென்றார். அறிவு, ஆண்மை, அழகு, வீரம் முதலியவற்றால் சிறந்து விளங்கினன் சீவகன்.

உ. கோவிந்தையாரிலம்பகம்

இராசமாபுரத்துப் பசுக் கூட்டங்கள் பக்கத்திலுள்ள மலைச்சாரலில் சென்று மேய்ந்து வருவது வழக்கம். அம் மலையில் வேட்டுவர் பலர் வாழ்ந்துவந்தனர். கொள்ளை யடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்கள் சச்சந்தன் வேந்தனாக இருந்தவரை அவன்பால் வைத்த அச்சத்தினாலும், அன்பினாலும் பசுக் கூட்டங்களை ஒன்றும் செய்யாமல் மலை விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்து வந்தார்கள். சச்சந்தன் இறந்துபட்டான் என்பதும், கட்டியங்காரன் அரசனாயினன் என்பதும் அவர்கட்குத் தெரியவந்தன. ஒருநாள் அவ்வேட்டுவர் அனைவரும் மலையகத்துக் கூடினர். "மன்னவனது பசுக் கூட்டங்கள் மேய்வதற்காக இன்று இங்குவரும்; வந்தால் அவற்றை நாம் கொள்ளையடித்தல் வேண்டும்" என முடிவு செய்தனர். அக்கூட்டத்தினுள் நிமித்திகன் ஒருவன் இருந்தான். அப்போது பறவைகள் கூறிய குரலின் குறிப்பை அவன் உணர்ந்தான். உணர்ந்தவன் "வேட்டுவர்களே! நாம் ஆனிரையைப் போய்ச்சேருவோம்; கோவலர் ஓடிவிடுவார்கள். அரசனது படைகள் குடையினையும் பிச்சத்தினையும் போட்டுவிட்டு முதுகுகாட்டி ஓடும்; அதன் பின்னர்த் தேரேறி ஒருவன் வருவான்; அரசன் சேனையை வென்றிகண்ட நாம் அவனுக்கு முதுகிட்டு ஓடநேரிடும்; நெருப்புச் சுடுதலாலே தேனீக்கள் பறந்தோடுமாறுபோல நாம் விரைந்தோட நேரிடும்" என்று கூறினான். வேடுவர் அவற்றைக் கேட்டுச் சிறிது மயங்கி நின்றனர். அப்போது ஒருவன் எழுந்து நின்று, "எமது வேட்டுவர்களே! தானும் தேருமாகத் தனியே வருகின்ற வீரன் ஒருவனே; அவன் கூற்றமே ஆயி

னும் ஆக; பெருங் குழுவாயிருக்கின்ற நம்மை என் செய வல்லான் ?" என்று எள்ளிக் கூறினன்.

உடனே வேட்டுவர் அனைவரும் வண்டுகள் மொய்க்கும் புளித்த கள்ளினை மாந்தினர். கொள்ளையடிக்கப் போவதைக் குறிக்கும் தொண்டகப் பறையினையும், துடியினையும் கொட்டி ஆரவாரித்தனர். குறிஞ்சிக் கடவுளான முருகனைப் பரவிய பின்னர்க் கொற்றவையை நோக்கி வெற்றி தருமாறு வேண்டினர். இவையெல்லாம் செய்துமுடித்துப் புலிக் கணமும், சியமும், போர்க்களிறும் போலக் கூட்டமாகப் புறப்பட்டு ஆனிரையை நெருங்கினர். ஆனிரையைக் கோவலர் காத்து நின்றனர். அங்கிருந்த நிமித்திகன் ஒருவன் கோவலரை விளித்து, "அடிக்கடி கோட்டான்கள் கூப்பிடுகின்றன; அது நன்னிமித்தமல்ல; ஆனிரைக்குக் கேடு நேரினும் நேரலாம்; ஆதலால் எள்ளாது போற்றி ஆனிரையைக் காப்பீர்களாக" என்று கூறினன். இதற்குள், வானகமெல்லாம் பரந்து தோன்றும் மீன்களைப்போலக் கானகமெல்லாம் பரந்து நின்ற ஆனிரையை வேட்டுவர் சூழுகி வளைந்து கொண்டனர். வில்லை வளைத்து நாணேற்றி மழைபோல அம்புகளைச் சிந்தினர்கள். வேடுவர்களின் கூரிய அம்புகளைத் தாங்கமாட்டாத ஆயர்கள் மத்தாற் கடையப்பட்ட தயிர்போலச் சிதறி ஓடலாயினர். புல்லாங்குழலையும், கோடரியையும் போட்டுவிட்டு உயிர்தப்பி ஓடிய கோவலர் தங்கள் பாடிமுழுவதும் அறியுமாறு ஓலமிட்டு அழுதனர். தோள்முழுவதும் தயிர்ப்புள்ளி மொய்த்த ஆயர்மகளிர் வந்து நிரைகள் கவரப்பட்ட செய்தியை அறிந்தனர். வலையுட்பட்ட மான்போலவும், மயில்போலவும் வாய்விட்டு அரற்றி அழுதனர். முன்றிலிடத்தே கட்டியிருந்த கன்றுகளைக் கட்டித் தழுவிக்கொண்டு கண்ணீர் பெருகநின்று,

"எமது அன்னைமீரே நம்மன்னைமார்களை கோவ அதக்கி வெம்முனை வேட்டுவர் கொண்டுபோயினர்; இனி நீவிரெல்லாம் எங்ஙனம் வாழுவீர், அந்தோ! என்று புலம்பினர். ஆயர்பாடி முழுவதும் பெருங்கலக்கத்திற் குள்ளாகியது. அக்கொடுமையினைத் தாங்கமாட்டாத ஆயர்மக்கள் அனைவரும் மன்னவனிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர்.

கட்டியங்காரன் கோவலர் கூறியதை உணரானுப் பக்கத்தேயிருந்த மிலேச்சனைத் தீப்பொறி பறக்க விழித்து, வாயினுல் உரப்பிச் சினந்தான். அவன் அரசனல்லன் ஆதலால் எளியவனை மிலேச்சனிடத்துக் கடுஞ்சிற்றத்தைப் போக்கினுன். பின்னர் ஆயர் கூறியதை இன்னதென உணர்ந்து, நால்வகைச் சேனைகளையும் அனுப்பி "நிரை மீட்டு வருக" என இடியேறுபோல முழங்கிக் கூறினுன்.

கார்விளை மேகமென்னக் கவுளிழி கடாத்தவேழம்
போர்விளை யிவுளித்திண்டேர் புனைமயிர்ப் புரவிகாலாள்
வார்விளை முரசம்விம்ம வானுலாப் போர்தபேபோல்
நீர்விளை சுரிசங்கார்ப்ப நிலநெளி பரந்தஅன்றே

பரந்த நால்வகைச் சேனைகளும் உண்மையான நாட்டுணர்ச்சியில்லாமல், அரசனை வஞ்சித்த கொடியோன் ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டி வந்ததே என்ற வெறுப்போடு போர் செய்ததால் வெற்றி காணுது வேட்டுவர்க்கு அஞ்சி முதுகு காட்டி ஓடின. நிரைமீட்கப்படாமை கேட்டுக் கட்டியங்காரன் நெஞ்சம் புழுங்கி வருந்தினுன்.

நந்தகோன் என்பவன் ஆயர் தலைவன். எவ்வாறுவது ஆனிரையை மீட்கவேண்டுமென அவன் எண்ணினுன். அவனுக்குக் கோவிந்தை என்னும் அழகுமிக்க பெண்ணொருத்தி இருந்தாள். ஆனிரையை மீட்டுத்தரும் வீரனுக்கு அப்

பெண்ணை மணஞ்செய்துகொடுப்பதாக ஊர்முழுவதும்பறை யறைந்து தெரிவித்தான். குதிரைக்கு நால்வகைக் கதி யினையும் பயிற்றுவித்துக் கொண்டிருந்த சீவகன் இவற்றை யெல்லாம் உணர்ந்தான்.

தன்பான் மனையாள் அயலான் தலைக்கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின்ற கைப்பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார் பாலர் பார்ப்பார்
என்பா ரையோம்பேன் எனின்யா னவனாக வென்றான்.

என்று கூறிச் சீவகன் தேரேறிச் சிலைவளைத்து அம்புகளைத் தேர்ந்துகொண்டு புறப்பட்டான். தாவித்தாவிப் பாய்ந்த குதிரையின் குளம்புகள் எழுப்பிய புழுதியால் நிலப்பரப் பெல்லாம் இருளுற்றது.

இனி நல்ல நேரமல்ல. ஆதலால் இங்குநில்லாது போய் விடுதலே தக்கதென்று வேடுவர்க்கு நிமித்திகன் கூறினான். அதற்கு வேடுவர்கள், "ஆழ்ந்த நீரிடத்தே முதலையினும் வலியது பிறிதொன்று இருக்குமாயின் இக்காட்டுள் நம்மி னும் வலியார் இருத்தல்கூடும்; ஒருவரும் கலங்கவேண்டா' எனக் கூறினராய்ப் பசிமிகுத்த பாம்பு தான் கவ்விய இரை யினை விடாதவாறுபோல ஆனிரையை விடாராயினர். காவல னுடைய கடல்போன்ற சேனையைக் கெடுமாறு வென்ற கூற் றம் அனைய எம்மைக் குறுகாது அறிவுடையீர் தப்பிப் போமின்" எனக் கூறுவதுபோலச் சங்குகளை ஊதினர். நிரைமுன் வந்து சேர்ந்த சீவகன் குதிரையை நனியும் விரை வாய்ச்செலுத்தித் தேரால் வேடுவர்களை வளைத்துக் கொண் டான். காற்றுடிபோலச் சுழன்று பறந்த தேரின் விரைவு மிகுதியால் எங்குபார்த்தாலும் தேர்கள் நிற்பதுபோல வேடர்களுக்குத் தோன்றியது. ஒரே தேர்தான் வருமென்று நிமித்திகன் பொய் கூறினான். வெள்ளக்கணக்கான தேர்கள்

நம்மை வளைத்துக் கொண்டனரே இனி என் செயவல் லேம்" என்றுகூறிப் பொறிகலங்கி நின்றனர். சிவகனது தேரொலியையும் நாணொலியையும் கேட்டபோதே இடியே றுண்ட நாகம்போல ஒடுங்கித் தப்பியோட வழி பார்த்த தனர் அவர்கள் பாற்கொண்ட இரக்கத்தாலும், தான் செய்கின்ற இக்கன்னிப் போரில் ஒருவரையும் கொல்லுதல் கூடாது என்ற எண்ணத்தாலும் வேடுவர்களை வெருட்டி ஆனிரையை மீட்டுத் தந்தான்.

நிரை மீண்ட செய்தியைக் கேட்ட நந்தகோன் அள விறந்த மகிழ்ச்சிகொண்டான். நகரமெல்லாம் அம்மகிழ்ச்சி யால் மிகவும் ஆரவாரித்தன. கற்புடை மங்கையர் அனை வரும், மணம்பெருகும் புகை தவழச்செய்து, வாசனைச் சுண்ணம் தூவி, மலர்மாலைகளை நாலவிட்டு, நறுமண நீர் தெளித்துத் தாமும் சந்தன முதலிய மங்கலப் பொருள்களை அணிந்து நின்று, "விசயனை ஒத்த வீர! நின் பொலிவு மிகுவதாக" என்று வாழ்த்தினர். சீவகன் மதயானைபோல வீதி வழியே நடந்து சென்று நந்தகோன் இல்லத்தை யடைந்தான். நந்தகோன் அவனை எதிர்கொண்டழைத் துச் சென்று கண்ணோறு கழித்து மகிழ்ந்தான். பின்னர் நந்தகோன் சிவகனை நோக்கி, "நம்பி! இதனைக் கேட்டு மறப்பாயாக; விசையைபாற் கொண்ட ஆராத மோகத்தால் நின் தந்தை நாட்டைக் கட்டியங்காரனிடம் ஒப்புவித்தான்; தானிருந்தே நாட்டிற்குக் கேடு சூழ்ந்த அவ்வேந்தன் அமைச்சனாற் கொல்லப்பட்டான்; அறிவறை போகிய நின் தந்தை தெரிமாறிபபோதே மலையேறி வீழ்ந்து உயிர் துறக்க எண்ணினேன்; ஆலம் வித்துப்போல மன்னன் வழி முத லாக நீ ஒருவன் இருப்பதை எண்ணி இதுகாறும் உயிர் வாழ்ந்தேன்; என் பெயர் நந்தகோன் என்பது. கோதா

தாவிரி என்பாள் என் மனையாட்டி; எம்மிருவர்க்கும் பிறந்த அழகு மிக்க இளநங்கை கோவிந்தை என்பாள்' அவளை ஏற்றுக்கொள்ளும் மணமகனாக விளங்குவாயாக" என்று கூறினான்.

மணவினைகள் முறையே தொடங்கப்பட்டன. கோவிந்தையை அழைத்துப், பசுவின் கன்று தின்றொழிந்த புல்லாலே படியினுள் இருந்த நெய் யிழுதைத் தோய்த்து அவள் தலையிலே இட்டுப், "பசுவும் தொழுவும்போல வழி தோறும் நீயும் நின் கணவனும் சேர முப்பீராக" என்று கூறிக் குளிர நீராட்டினர். பின்னர் நெய் விற்ற விலையாற் பெற்ற பசும்பொன்னால் செய்த தோட்டினையும், ஒளிவிடுகின்ற குழையினையும் களைந்து, மங்கலமான காதணியையும் மாலையையும் இட்டனராய்ச் சந்தனத்தைப்பூசி அழகு செய்தனர். மங்கல நல்லணிகளோடு மணக்கோலம் கொண்ட கோவிந்தையின் பொங்கி மிளிரும் பேரழகினைக்கண்டு ஆய்ச்சியரும் திகைத்து நின்றார். ஏறுகோட் பறை முழங்கக் கோவிந்தையினை எடுத்துக்கொண்டு நகர் முழுவதும் சுற்றி விழாப்போலக் கொண்டாடிக் கந்துகன் மனையிலே புகுந்தனர். புகுந்தபின் மங்கல முரசங்களும் வாச்சியங்களும் ஒலிக்கக் கோவிந்தன் கலசத்தை எடுத்து நீரைச் சொரிந்து கோவிந்தையினைத் தந்தான். பாறுகொள் பரிதி வை வேல் பதுமுக குமரற்குக் கோவிந்தை உரியவளாக" என்று சொல்லிச் சிவகன் நீரேற்றான். மன்னவர் மரபின் வந்த தான் ஏனைய மரபுப் பெண்ணை முதலில் மணப்பது கூடா தாதலால் அவ்வாறு செய்தான் சிவகன். கோவிந்தன், ஈராயிரம் பசுக்களையும், பசும்பொற் பாவை எழினையும் சீதனமாகக் கொடுத்தான். கோவிந்தையும் பதுமுக குமரன் காத லன்பாற் பிணைக்கப்பட்டுக் கூடி வாழ்ந்தனர்.

௩. காந்தருவதத்தையா ரிலம்பகம்

இவர்கள் இவ்வாறிருக்க இராசமாபுரத்தில் சிதத்தன் என்று ஒருவணிகன் இருந்தான். பதுமை என்பாள் அவன் மனையாட்டி. பெரும் பொருளுடையனுயிருந்த அவன், பழ வினைப் பயத்தால் அவையெல்லாம் கெட, ஒரே கப்பலும் தானுமாய் எஞ்சியிருந்தான். குலத்தொழிலாகிய பொரு ளீட்டுதலைச் செய்யாது மடிந்திருத்தல் அறனன்று எனக் கருதினன். "அம்பி மிதந்துவிடுவதும் சுரை ஆழ்ந்து விடு வதும்போல உயர்ந்தோர் தாழ்தலும், தாழ்ந்தோ ருயர்தலும் உலக இயல்பு. அறஞ்செய்த லொன்றே போதியது; வருந்தி முயன்றாலும் வாராத வாரா என்று சொல்லிக்கொண்டு தமது தீவினைக்கு நொந்து சோம்பி யிருத்தல் ஆண்மை யன்று. இம்மியளவுடைய நுண்பொருள்களைச் சேர்த்தும் மலைபோன்ற பொருள் குவித்தல் கூடும். குன்றாத ஊக்கத் தோடு முயல்வானுயின் ஒரு நாளே பெரும் பொருள்தேடி விடுதலும் கூடும். முயலாது வாழ்வானுயின் அவனுடைய பகைவர்கள் தலையெடுத்து நிற்பர். ஆதலால் கலங்கிக் கையற்று நில்லாமலும், மடிந்து வாளாது உறங்காமலும் பொருள்தேட வேண்டுவதே முதற் கடமையாகும். பகை வரை அறுத்தொழிக்கும் வாள் அதனைத் தவிரப் பிறி தில்லை. அறத்தையும் இன்பத்தையும் தருவதும் அதுவே," என்றிவ்வாறெல்லாம் எண்ணிப் பொய்யில் பொருளே பொருள் எனக் கொண்டான் சிதத்தன். அதனைத் தேடித் தன் குடி. தையவருகின்ற காலத்து வீழ்போல ஊன்றி நின்று அதனைத் தாங்குதல் தன் தலையாய கடமை எனவும் உணர்ந் தான்.

எஞ்சியிருந்த வங்கம் ஒன்றினையும் நடத்திப் பொருள் தேடப் புறப்பட்டான். கொடியணிந்த கூம்போடு சங்கும் பறையும் முழங்க நன்னாளில் கப்பல் புறப்பட்டது. பவளக் கொடிகளை அறுத்துக்கொண்டு, நெடிய திரைகளைக் குறுக்கே பிளந்துகொண்டு ஒடுகளிறுரைப்ப இனி தோடியது அக்கப்பல். காற்று முகக்கும்படி குழையக் கட்டின பாய்மரங்கள் மூன்றுடன் ஓடிய அக்கப்பல் அழகிய மகளிரால் சிறந்த தீவு ஒன்றனை அடைந்தது. அத்தீவினுள் இறங்கி அழகிய மங்கையரின் ஆடல் பாடல் முதலியவற்றைக் கண்டும் கேட்டும் களித்தான். அத்தீவிலேயே தான் கொணர்ந்த பொருளை விற்றுப் பொன்னாக்கிய பின்னர், அவ்விடத்து மன்னவனிடத்தே பிரிவு சொல்லிக்கொண்டு நன்னாளாகிய இரேவதியில் வியாழவோரை தனு உதயமாகப் புறப்பட்டான். சொந்த நாட்டிற்கு ஒரு யோசனை பக்கலில் கப்பல் வந்து சேர்ந்தது. நல்லவாறு பொருள் தேடி முடித்து மீண்டோம் என்ற களிப்பில் மூழ்கிக் கப்பலில் இருந்தார் அனைவரும் தம்மை மறந்திருந்தனர். அதுவரை ஐந்நூறு காவதம் தடையின்றி விரைந்தோடி வந்த மரக்கலம் ஞெரேரெனநின்றது. காற்றும் அசையவில்லை. கரிய மேகக் கூட்டம் எழுந்து வானமெல்லாம் பரந்து மூடிக்கொண்டது. புயற்காற்று சீறி அடிக்கத் தொடங்கியது. பாய்மரங்கள் எல்லாம் தடதடவென அடித்துக்கொண்டு வீழ்ந்தன. உடுக்கை யோசையைக்கேட்டுப் பேயாடுவானைப்போலக் காற்றின் விசைக்கேற்ப அலைகள் பெரிதாக எழும்பி மோதி மோதிச் சுருண்டு விழுந்தன. கடல் கொந்தளிக்குந்தோறும் பாய்மரத்தோடு கப்பல் சாய்ந்து சாய்ந்து ஆடியது. கரையும், வானும், கடலும் பிரித்தறிய முடியாமல் மாலுமிகள் செயலற்று நின்றுவிட்டனர். உள்ளிருந்தோரனைவரும் "தெய்வம் சீறிச் சினந்தது போலும்" என்று எண்ணிக் கலங்கினர்.

அப்போது சீதத்தன், "மாந்தர்காள்! துன்பம் வந்த டருங் காலத்து நடுங்காது கருதலைச் செய்யுங்கள்; அது தான் துன்பத்தை அரியும் வாளாகும்; அழுது பிழைத் தார் யாருமில்லை; வாழ்நாள் நீட்டமும் நல்வினையும் உடை யராயின் நடுக்கடலின் ஆழ்ந்த எல்லைக்குட் சென்றோரும் பிழைத்து மீள்வர்; தீவினையாரயின் யாண்டிருந்தாலும் உயிர்துறந்தே விடுவர்; வினையின் விளைவால் வந்த இத்துன் பத்திற்கு மனம் நையாது நின்று கனைமலர்ப் பிண்டிநாதன் நலங்கிளர் பாத மூலம் நினையுமின்" என்று கூறினன். இதற் குள் மரக்கலம் கவிழத் தன் கை யகப்பட்டதொரு புணை யினைக் கைப் பற்றி நின்று,

நாவா யிழந்து நடுவாரு மிலியாம் நீந்திப்
போவாய் தமியே பொருளைப் பொருளென்று கொண்டாய்
வீவாய் எனமுன் படையாய் படைத்தாய் வினையென்
பாவாய் எனப்போய்ப் படுவெண் மணற்றிட்டை சேர்ந்தான்.

இவ்வாறு கடலலையால் ஒதுக்கப்பட்டுச் சீதத்தன் ஒரு வன் மட்டும் ஒரு தீவின் கரை சேர்ந்தான். மலைபோன்ற மார்பினையுடையான் அக்கரையகத்தே தன் தீவினையை எண்ணி அவலித்திருந்தான். அப்போது அலவன் ஒன்று அலைகள் உதைத்துத் தள்ளத் தள்ள உருண்டு உருண்டு மீண்டும் கடல் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது; அத னைக் கொல்ல வந்த அன்னம், அலை உதைத்து உதைத்துத் தள்ளுவதைப் பார்த்து இரக்கம் கொண்டு கொல்லாது விட் டுச் சென்றது. இவற்றையெல்லாம் பார்த்திருந்த சீதத்தன் தனக்கும் உய்வுண்டு என்று எண்ணி ஆறுதல்கொண் டான். தீவகத்து வாழ்வார் ஒருவரை எதிர்ப்பட்டு, "அன் புடையீரே! எனது கொடுந் துன்பத்தைக் கேட்பீரோ" என்று நடந்ததை நவின்றான். அதனைக் கேட்டவன் சீதத் தனை நோக்கி, "ஐயனே! கவலுதல் ஒழிவாயாக; யான் விஞ்

சைகள் வல்லேன்; கெட்ட நும்பொருளையும் மாந்தரையும் மீட்டுத் தருதல் கூடும்" என இனிய மொழிகளைக் கூறி ஆற்றுவித்தான்.

பின்னர்த் தத்தனை ஓர் ஆட்டின்மேல் ஏற்றிக்கொண்டு பறந்து சென்று குளிர்ந்த மலைச்சாரல் ஒன்றினை அடைந்தான். தேனொழுகப் பழுத்து விளைந்த தீங்கனிகள் பலவற்றையும் உண்டு உடலும் உள்ளமும் குளிர்ந்தான். தத்தன் மலைவளங்களைக் கண்டு கண்டு மகிழ்ந்திருந்தவனுக்குத் தான் என்பான், "மலைமேலேறிக் காதமொன்று கடந்தால் மன்னவன் வாழும் மாநகர் ஒன்றுண்டு. ஆண்டுச் செல்வோம் வருக" என்று அழைத்தான். வானளாவ உயர்ந்த மதிலையும், ஆழ்ந்த கிடங்குகளையும், யாறுபோலப் பரந்து உயர்ந்த நெடிய வீதிகளையும் உடையது அம் மா நகர். தானும் தத்தனும் அந்நகரைச் சென்று சேர்ந்தனர். தானுடைய மனையகத்தே விருந்துண்டு தங்கிய தத்தனை நோக்கி, "நாய்க! இந்நகரத்து மன்னவன் பெயர் கலுழவேகன் என்பது; அவன் தேவி தாரணி என்பாள்; அவ்விருவர்க்கும் பெண் மகவு ஒன்று பிறந்தது; அப்பெண் மகவினைப்பற்றிய நிமித்தம் பார்த்த நிமித்திகன், 'இம்மகளை மணக்கும் மணவாளன் இராசமா புரத்திலுள்ளவனாகும்' என்று கூறினான்; அந்நங்கையை விரும்பி மன்னர் பலர் வந்துபோகின்றனர்; நிமித்திகன் சொல்லியதை மறக்க முடியாதவனாகி, அரசர்கள் விருப்பத்தினை மறுக்க முடியாதவனாகி மன்னவன் மனம் பொதியவைத்த கருத்துடையவனாயிருக்கின்றான்; இவற்றை நீ யறிவாயாக" என்று உரைத்தான். உரைத்துத் தத்தனை மன்னவன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

வாயிலோன் வரவிசைப்பக் கேட்ட மன்னவன், எதிர் சென்றழைத்துக் கைகூப்பி வணங்கி, இன்னுரை முகமன்

கூறித் தானத்திலிருக்க" என்று சொன்னான். சொல்லிய வன், தத்தனுடைய தந்தை, தாய், தாரம், மக்கள், சுற்றம் முதலிய நலம் வினவி, "ஐய நுமது கேண்மை இன்று நேற்றையதன்று; நுமர் எழுவரளவும் எமர் எழுவரளவும் பிரிவின்றித் தொடர்ந்து நின்ற பெருங் கேண்மையதாகும்; யான் அரசன், நீ வணிகன் எனப் பிரித்து நினைக்கவேண்டா; இவ்வில்லத்தை நினதேயாகக் கொள்ளுதி" என்றெல்லாம் விழுமிய நல்லுரை பகர்ந்தான். வற்றி நின்ற சந்தனமரம் குளிர்ந்த மழை நீரால் தழைத்ததேபோல் ஸ்ரீதத்தன் தளிர்ப்படைந்து, "நமரங்காள்! வேதண்ட மலையில் தென்கோடிக் கூற்றில் காந்தார நாட்டில் விச்சாதரலோக மாநகரியில் நின்று நீங்காத புகழுடைய கலுழவேகன் வேந்தன்; அவன் எங்குடித் தெய்வம் காணுங்கோள். அதனை அறிவீராக" என்று என்னுடையமுன்னோர் கூறியதுண்டு. ஆதலால் மாலையணிந்த மார்பனே எங்குலம் நினக்குமாறின்றி நிற்பதாயிற்று என்று கூறினான்.

மன்னர் பெருந்தகை தன் கடக மணிந்த முன் கையால் தத்தனைப் பற்றிக்கொண்டு உள்ளே சென்று, தன் மனைவி மக்களைக் காட்டுவானாகி, "இங்கின்ற மடநல்லாள் எனது தவப்புதல்வி காந்தருவதத்தை என்பாள்; வீணை வித்தகத்தால் உலகம் விளக்கிய புகழுடையாள்; அழகும் ஆண்டும் வளர வளர்ந்து இளமை கனிந்துள்ளாள்; நின்மகளேயாக இவளைக் கருதி நின்னகர்க்குக் கொண்டு சென்று, இன்னிசை பொருது இவளை வெல்வான் யாவனே யாயினும் அவனுக்கு மண முடிப்பாயாக" என்று கூறினான். தேவி இதனைக் கேட்டுத் தந்தைக்குத் தக்கதே என்று வெறுத்துக்கூறினாள். வெறுப்பின்றி நுகரத்தக்க போகத்தைக் குறையாமற் பெற்று வைத்தும், தனித்து வாழ்கின்ற தொழிலைக்காட்

டினும் சா துயர் வெறென்றில்லை; நங்கையராயினர் தங்கணவர் குறங்கிலே துஞ்சப் பெறுவாராயின் அவ்வின்பத்திற்குந் தேவருலக இன்பமும் சிர் சாலாது; ஒருவனுக்கு உரியளாங் காலம் வாராமையின் இந்நங்கை இதுகாறும் துயரெய்தி நின்றாள்; மன்னர் பலர் விரும்பி வந்தாராயினும் சோதிடர் கூறிய சொல் நோக்கி இதுவரை யாருக்கும் இசையேனாயினேன்; நற்பால்வினைத் தெய்வம் அவளுக்குத் தக்க கணவனைக் கூட்டிவைக்கும் காலம் அணுகிவிட்டமையால் இப் பொறுப்பினை நின்பாலாக்கினேன்" என்று பின்னும் மன்னவன் மொழிந்தான்.

இவ்வாறு சொல்லித் தத்தையின் மன வருத்தம் நீக்கிக் கொடுக்கத்தக்க சிறந்த பொருள்களெல்லாவற்றையும் கொடுத்துத், தத்தையின் தோழியாகிய வீணாபதி என்னும் பேடியை நோக்கி, "உடம்பும் உயிரும்போல ஒருபோதும் பிரியாது இவளோடுறைகின்ற பாவாய்! எம்மைப் பிரிந்த வருத்தந் தோன்றாதவாறு பாதுகாத்து இவளுக்குத் தாயும் தந்தையும் நீயே யாகிச் சிதத்தனது ஆணைகடவாது நிற்பாயாக" என்று கூறினன். தத்தைக்குக் கொடைப் பொருளாக வயிரம் வேய்ந்த பெட்டி ஐந்நூறு, யவன தேசத்துப் பெட்டி, மணியும் பொன்னும் வைக்கப்பட்டன ஈராயிரம், நல்ல கட்டில், தவிசு கண்ணாடி, புகைக் கலசம், ஆயிரம் நானச் செப்பு, இலக்கணம் அமைந்த நல்யாழ் முதலியவும் கொடுத்தான். தோழியோடும் கொடைப் பொருளோடும் தத்தை புறப்பட்டாள். பல்வகைத் தாயாரும் தத்தையைத் தனித் தனி புல்லிக்கொண்டு வருந்தி நின்றனர். பிச்சமும் குடையு மேந்திப் பல்லோர் கவரி வீசக், கிண்கிணி ததும்ப, மேகலை மிழற்ற மெல்ல நடந்து வந்து தத்தை தந்தையைத் தொழுது வணங்கி நின்றாள். மானுடர்க் கென்னருந்

தகையதாப் பெற்ற பெண் ணருங்கலத்தின் பிரிவு மன்னனைப் பேதுறச் செய்தது. அதனை ஆற்றலாது "வலைப்புரியின்ற முத்த மண்மிசையவர்கட் கல்லால், வலம்புரி பயத்தை பெய்தா தனையரே மகளிரென்ன, கலம்புரிந்தனைய காதல் தேவிதன் னவையி னீங்கக், குலபுரித் தனைய குன்றிற் கதி பதி" கூறினான். ஸ்ரீதத்தன் தத்தையோடும் தான் இழந்த பொருள்களோடும் மீண்டும் இராசமாபுரம் வந்து சேர்ந்தான். தத்தையைத் தன் மனையாட்டியிடம் தந்து, நிகழ்ந்த வற்றைச் சொல்லிப் பொன்னும் மணியும் இழைத்த நல்ல மாளிகை ஒன்றில் தத்தையை இருக்கச் செய்தான்.

மன்னவன் அநுமதி பெற்றுவந்து தத்தையின் மண வினைக்காக மிகச் சிறந்ததோர் மண்டபம் இயற்றினான். குடம்போலும் கழுத்தினையுடைய தூணையும், சுவரையும், நிலத்தையும் பொன்னாற் சமைத்து, உத்தரம் முதலியன பவளத்தாலாக்கிப், பளிக்குக் கையாலே கையலகு பரப்பி வெள்ளியினை வேய்ந்து செய்யப்பட்டது அம்மண்டபம். அங்கே தத்தைக்கு ஓரிடம் சமைத்தான். பளிங்காலே சுவர்செய்து, முத்தின் கோவையோடே பூமாலை, பொன் மாலை, மாணிக்கமாலை முதலியனவும் தம்மில் தலை யொத்து வர நாலப் பண்ணி, ஒவியர்கட்கே ஓராலயம்போன்று விளங்கிற்று அவ்விடம். பொன்மாலை முதலியன காற்றசை யுந்தோறும் அசைவதைக் காண்பதே பெருங் காட்சியாகும். கலையும், மானும் முதலிய சித்திரங்கள் எல்லாம் எழுதப் பட்டிருந்தன. மங்கல முரசறைவானை விளித்து, தத்தை மணவினைபற்றி முரசறைய ஏவினார்கள். வள்ளுவனும் இடி போல் முழங்கும் முரசினைக் கடகளிற்றின் பிடர்த்தலையி லேற்றி, அதனை அடித்து, "வளஞ் சிறந்து பிணியொழிந்து வையம் பொலிக! மங்கையர் கற்புநெறி மாறாது வாழ்வா

ராக! மனையறத்தின் மாண்பு பெருகுவதாக! தவநெறியும் சிவநெறியும் தழைக! திருமகளினும் மிக்க பேரழகுடைய தத்தை என்பாள் ஒரு பெண் உளள்; அவள் தந்தை சீதத்தனுவான்; அந்நங்கை தானும் இசைநூலிற் கூறிய கலைகளெல்லாம் வல்லவள்; இனிய நரம்புகளையுடைய யாழ் விச்சையாலே அவளை வெல்லுவான் யாவனேயாயினும் அவனுக் குரியவளாவாள்; இதனை அறிவீராக; வாழ்க மன்னவன்" என்று கூறினன்.

அத்தினபுரம், காம்பிலி, வாரணவாசி, அவந்தி, அயோத்தி முதலிய நகரத்து வேந்தரெல்லாம் வந்து சேர்ந்தனர். தேனை விரும்பி மொய்க்கும் வண்டுக் கூட்டம்போல ஏனைய மாந்தர்களும் வந்து நிறைந்தார்கள். சீதத்தன் மழைபோலப் பெருநிதியை வாரி வழங்கி மகிழ்ந்தான். கங்கை முதலிய தெய்வ நதியினின்றும் கொணர்ந்த தூய குளிர்ந்த மண நீரால் தத்தையை மங்கலம் பெருக நீராட்டி வெண்துகில் உடுத்துப், பல்கலன் பரியன அணிந்து கோலஞ் செய்தனர். முழவம் விம்மவும், வளை துவைப்பவும், முரசு ஆர்ப்பவும் தத்தை புறப்பட்டாள். மாலையசைய, மேலாடை நெகிழக், குள்ளராயினர் கூட்டம் விலாப்புடைக்குள்ளே கைவீசி நடக்க, வில்லும் வாளும் வேலும் முதலிய ஏந்தியோர் ஆயிரத்தெண்மர் சூழ, ஆணுடையணிந்த பெண் சேனை பரந்து செல்லக், கண்டவர்களெல்லாம் காமத்தால் மனம் நையுமாறு தத்தை சென்று மண்டபம் புகுந்தாள். புகுந்து தேவர்குலத்து நங்கைபோல யாழை எடுத்துப் பண்ணை யெழுப்பி நரம்பைத் தெறித்தாள். அவை வணக்கமாக ஒரு பாட்டுப்பாடி முடித்த அளவிலே வீணாபதி என்னும் பேடி நின்று, "வீரராயினர் எல்லோரும் இவள் பாட்டுக் கேற்ப யாழை வாசியுங்கோள்; அல்லது இவள் யாழுக்

கேற்பப் பாட்டுப் பாடுங்கோள்" என்று கூறினன். பின்னர்த் திரை தூக்கப்பட்டுத் தத்தை பாடத்தொடங்கினள். புருவம் எருமலும், கண் ஆடாமலும், மிடறு வீங்காமலும், எயிறு தோன்றாமலும் அவள் பாடிய உயர்வைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

வீரர் ஒவ்வொருவரும் தனித்தனியே சென்று தத்தையை வெல்ல முயன்றனர். அவள் பாடலுக்கேற்ப யாழ் வாசிக்கமாட்டாமலும், யாழுக்கேற்பப் பாடமாட்டாமலும் வீரர் அனைவரும் தோற்றனர். தோல்வியுற்றோர் காற்றுற் கரிந்த தாமரைபோலக் கரிந்த முகத்தையுடைய ராயினர். அதனைக் கண்ட கட்டியங்காரன், தேனுபாலங்கல் மலைத் தீஞ்சுவை யிவளை வெல்வான், வானுபர் மதுகை வாட்டும் வார்சிலைக் காமனே யாகும்" என்று கூறினன். இவ்வாறு ஆறுநாட் கழிந்தன. சீவகன் தன் தோழன் புத்திசேனனை நோக்கித், "தோழனே! நீ சென்று கன்னியிடத்துண்டாய வேட்கையாலன்றிக், கல்வி தோற்றுவித்தற்காக, யாழ்ப் போரிலே யானும் கலந்துகொள்ள விரும்புகின்றேன்; இதனைத் தத்தைக்குக் கூறுக" என, அவனும் கந்துகனுக்கு இதனைச் சொன்னன். கந்துகன் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது நாகமாலை என்பாள் கொண்டுவந்து கொடுத்த ஓலையொன்றில், கட்டியங்காரன் தீயுட் பொன் போல வெம்பி, நஞ்சையுண்ட கடவுள்போல் நம்பியின் மேற் ருய்ச் சீறி நிற்கின்றான்; ஆதலால் சீவகசாமியை ஒரு சேமத் திடத்தே வைக்க" என்று எழுதப்பட்டிருந்தது. அதனைப் புத்திசேனனுக்குக் கூறும்படி கந்துகன் சொல்ல, நாகமாலை நிகழ்ந்தவற்றைச் சொன்னாள். முன்னொருகால் அநங்கமாலை நாடக அரங்கேறியபோது சீவகன்பாற் காதல் கொண்டாள். அதனை அறிந்துவைத்துப் பிணைத்திலிருக்

கும் காக்கை தாமரைப் பூவினைத் தழுவிக் குடைந்தது போலக் கட்டியங்காரன் வலிதிற்சென்று அவள் கற்பினைக் கெடுத்தான்; அதுபோது "சிவசாமி! சிலைவல்லாய்! நினக்கே உரிய என்னை நீவந்து தழுவாயோ" என்று கூறிக் கடல்போலப் புலம்பி யழுதாள். 'அந்நாள் தொட்டுச் சீவக சாமிபாற் கறுவு கொண்டவனாய்க் கட்டியங்காரன் காலம் பார்த்து நிற்கின்றான்' என்ற இவையே முன்னிகழ்ந்தவை.

தாதை சொல்லியனுப்பியவெல்லாம் கேட்ட சீவகன் பல் விளங்க நகைத்து, "என்னைத் தீங்கு சூழ்வார் இஞ் ஞாலத்தில்லையாகும்" என்று சொல்லிப் புறப்பட்டான். கரிய குஞ்சியிலே அகிற் புகையை ஊட்டி, மாலைகளைச் சூடி, ஒரு காதிற் பொன்னோலையையும், ஒரு காதில் குழையினை யும், சுடரவிட்டு, சந்தனம் பூசி வலம்புரியாரத்தோடு விலை வரம்பறிதலில்லா வெண்டுகில் உடுத்து வெளிப்போந்து மண்டபம் சென்றான். மண்டபத்தினுள்ளே நுழைந்த சீவகனைத் தத்தை கண்டாள். இயற்கையழகும் செயற்கை யழகும் பொங்கி மிளிர நின்ற அவனைக் கண்ட அளவிலே தன்னையும் விழுங்கியெழுந்த பெருங் காதலுடையவளாய், "நலமும் இளமையும் நல்வலியும் உடையானும் குலப் பிறப் புடைய இக்காளை என்னிறையென்னும் கதவம் நீக்கிக் காவ லாகிய நெஞ்சத்தையும் கடந்து உள்ளத்தைப் பிணித்து விட்டான்; சிறிதுநேரத்தில் எனது மாலையாலே இறுக அவனைக் கட்டி ஒறுத்தல்வேண்டும்! ஈயின்றியிருந்த தீந் தேனைப்போல யாராலும் உண்ணப்படாத நலனுடையான் இந்நம்பி" என்று கூறிப் புலம்பினாள்.

பின்னர்த் தோழியை அழைத்து, "இவனது அழகால் மயங்கினமாகிக் கலை வன்மையைக் காணாதுவிடுதல் தவறு; ஆதலால் இவனுடைய கலை நுணுக்கத்தைக் காண்பேமோ" என்று கூறினாள். உடனே தோழி கொண்டுவந்து நீட்டிய

யாழ் ஒவ்வொன்றன் குற்றத்தையும் உணர்ந்து கூறினான். நீர் நின்று இளகிய மரத்தாலானதெனவும், அழுகிய மரத்தாலானதெனவும், புன்னுற்ற மரத்தாலானதெனவும், இடி வீழ்ந்த மரத்தாலாயதெனவும், நிலம் மயங்கின இடத்தே முளைத்து வளர்ந்த இம்மரம் கணிகை சிறுவனை ஒத்ததென வும், வெந்ததெனவும், முரிந்ததெனவும் முறையே கூறி முடித்தான். இறுதியாகக் கொண்டுவந்த யாழ் மரம் மறு வற்றதெனக் கூறி, அவ்யாழ் நரம்பின் முறுக்கினை யுடைத்து உள்ளே உரோமம் உடைத்தாதலைக்காட்டி அத் தீமையையும் போக்கிய அளவிலே தத்தை தோற்றவளானாள். யாழினைக் கையேந்தி மெல்லிய விரலாற் றடவி மிடறும் விரவப் பாடத் தொடங்கினான். அவனது இனிய இசைக்கு உருகி மயங்கி விண்ணவரும் மண்ணவரும் வீழ்ந்தனர்; பறவையும் விலங்குகளும் சோர்ந்தன; கல்லும் மரங்களும் கூடக் குழைந்து உருகின; விஞ்சையரும் கின்னரரும் மெய்ம்மறந்து சோர்ந்து வியந்து நின்றனர்; வேந்தரெல் லாம் பாவைபோல் உணர்வழிந்து நின்றனர். தான் பாடுவா ளாய்த் தொடங்கிய தத்தை சீவகனுக்குத் தோற்று நின்றாள். இதற்கு முன்பு பிறரிடத்தில்லாது புதியதான யாழ் வாசினை யைச் சீவகனிடத்தே கண்டதும், மெல் விரல் நரம்பின்மேல் நடவாமையும், மிடறு நடுங்கியதும் தத்தைக்குத் தோல்வி யைத் தந்ததுபோலும். உள்ளத்துப் பொங்கியெழுந்த காதல் அலைப்ப, கையா நடுங்கா நனி நாண மீதூர மலை சுமப் பதுபோல மாலை ஒன்றனை ஏந்திச்சென்ற பெண்ணரசி,

"மெல்லென் சிலம்பரற்ற மேகலைகள் மின்னுமிழ
நல்லபெடையன்னம் நாண அடியொதுங்கி
ஒல்லென் றுயர்தவமே செய்ம்மின் உலகத்தீர்
எல்லீரு மென்பாள்போல் ஏந்தல்மேல்"

வீழ்ந்தாள். சீவகனும் தத்தையை விழுங்குவான்போல நோக்கி நின்று "திருமகளே" என்று செப்பினான். பொங்கி வெதும்பும் காமத் தீயாலும் நாணத்தாலும் அவசமுற்றாள் தத்தை. உடனே இசைவினையிட்டுச் சீவகனே வென்றான் எனக் கூறினர் மாந்தர்.

கட்டியங்காரன் இதனைக் கண்டு நெஞ்சம் புழுங்கிக் கொதித்தான். ஏனைய வேந்தரைத் துணையாகக் கொண்டு சீவகனைக் கொன்றொழிக்க இதுவே காலமெனக் கருதினான். "வேந்தர்காள்! மேருவெனப் புகழாலுயர்ந்த நுங் குடிக்கு மாசு செய்தீர்! வாளமருக் கஞ்சுவீரேல் கானகம் புகுந்து தவஞ்செய்ம்மின்; தத்தையைச் சேர்ந்தோனே நெடிய நில எல்லைக்கு வேந்தனாவான்; நும்மால் எனது நகரத்து வணிகனுக்கு யான் தாழ்வாயினேன்"; என்று கூறி வேந்தர்களோடு போர்க்கோலம் கொண்டு நின்றான். சீவகன் தோழர் பலரும் ஒருங்கு திரண்டு போர்க்கோலம் கொண்டனர். பதுமுகன் என்பான் அரசர்கட்குச் சில சொல்லுவானாய், "தன்னினத்துப் பெடையோடு சிங்க ஏறு நிற்குமாயின் அதனைப் புலிக்கணங்கள் என்செய மாட்டுவன! நீவிரெல்லீரும் இறந்துபட்டால் நும் நிலப் பரப்பெல்லாம் தனக்குரித்தாகும் என எண்ணிக் கட்டியங்காரன் பேதுறவு செய்கின்றான்; அதனை அறிதிராயின் வாளா ஏகுவீர்; இன்றேல் இசையாலன்றி வீரத்தாலும் சீவகன் சிறந்தோனாதலை வெளிப்படுத்தினீராவீர் எனக் கூறினான். இதற்குள் அரசர்கள் சேனை சீவகனைச் சூழ்ந்துகொண்டது. அதுகண்ட சீவகனும் போருக்கெழுந்தான். "பாவியேனால் என் ஐயனுக்கு இத்துன்பம் நேர்ந்ததுபோலும்" என்று காந்தருவதத்தை கலங்கினாள். தோழிமார் தேற்றத் தானும் தேறுதல் கூறிப் போர்முனையில் நின்றான் சீவகன்,

மன்னர்கள் சீவகனை நோக்கி, "வணிக மகனே! முதலொடும் கேடு வருங்காலத்து ஊதியம் ஒழியினும் ஒழிக எனப் போக்கி, முதலைப் போற்றிக் கோடல் வணிகராயினோர் செயலாகும்; நீ அதனை அறியாய்போலும்; காந்தருவதத்தைக்கு ஆசைப்பட்டு நின் உயிரையும் இழக்கின்றாய்" எனக் கூறினர். அதற்கு மறுமொழியாகச் சீவகன்,

தம்முடைப் பண்டம் தன்னைக் கொடுத்தவ ருடைமை கோடல்
எம்முடை யவர்கள் வாழ்க்கை எமக்குமஃ தொக்குமன்றே
அம்முடி அரசிர்க் கெல்லாம் என்கையில் அம்பு தந்து
நும்முடைத் திருவும் தேசம் நோக்குமின் கொள்வல் என்றான்.

தேவதத்தன், நபுலர், விபுலர், புத்திசேனன் முதலியோருடன் சீவகன் ஒருபுறமும், மன்னவர்களுடன் கட்டியங்காரன் மற்றொரு புறமுமாகப் போர் தொடங்கியது. சங்குகள் ஊதின: கொம்புகள் முழங்கின; குதிரைகள் பாய்ந்தன; யானைகள் ஓடின; காலாட்கள் வளைந்தனர். "வீணையால் நுங்களை வென்ற மெல்லியலாளின் தடங்கண் கண்டீர்" எனக் கூறி ஒவ்வோரரசர்க்கும் ஒன்றும் இரண்டுமாகப் பல அம்புகளைச் சீவகன் எய்தான். "பிறர் மனை நயக்கும் புன்மையை வரும் பிறவியினும் ஒழிவீராக" என்று சொல்லுவபோல, அம்புகள் பகை மன்னர்களின் மார்புகளைத் துளைத்துச் சென்றன.

நந்தட்டனுக்கு வீர மந்திரம் இரண்டு கற்பித்துத் தானும் கூடிப் போர்செய்தமையால் மாற்றார் அனைவருஞ் சிதறி ஓடலாயினர். விஞ்சை வேந்தர் சீவகன் ஆண்மையினை வியந்து புகழ்ந்தனர். இராசமாபுரம் சீவகனைக் காணத் தழைத்து நின்றது. போர் தொலைத்துப் புகழோடு சென்ற சீவகன் தத்தையுடன் தனது மனையகம் புக்கான். இளங்கிளைச் சுற்றமாகத் தன்னோடு பொருத அனைவரையும்

பாராட்டி மகிழ்வித்தான். பதுமுகன் மார்பில்பட்ட புண்ணிற்குச் சிலையிட்டு எலி மயிர்ச் சட்டை யணிந்துகொண்டான். போர்ச்செயலாற் பிறந்த பாவம்போக, பொன்னால் உருவம்செய்து தானம்செய்தான் சிவகன்.

நெய் சொரிந்து வேதியர் வேட்ட வேள்வித் தீ முன்னர், இன்னியம் முழங்கச் சீதத்தன் நீரைச் சொரிய முருகனை ஒத்த வீரனான சிவகன் அதனை ஏற்றுத் தத்தையை மணந்தான். மணந்தபின் இருவரும் இனிது வாழுநாள் இளமரக்கா ஒன்றில் இருந்தபோது கலுழவேகனால் அனுப்பப்பட்ட தானென்பான் ஓலையொன்று நீட்டினான். வீணையால் தத்தையைவென்று, வீரத்தால் வேந்தர்களைவென்று, மணம் புணர்ந்தமைக்கு மகிழ்ந்து தத்தையின் தந்தை எழுதியிருந்த பாராட்டினைக்கண்டு சிவகன் மகிழ்ந்தான். தன் மாமனை அவனிருந்த திசைநோக்கி வணங்கித் தானுக்கு விடைகொடுத்தனுப்பினான்.

---

௪. குணமாலையார் இலம்பகம்.

காந்தருவதத்தையோடு கூடிவாழும் நாளில் இளவேனிற் காலம் வந்தது. பசுங்கொடிகளெல்லாம் கொத்துக் கொத்தாகப் பூமலையப் பூத்தன. தேனூர்ந்த வண்டுகள் மகரந்தப் பொடியாடி இரும்பு பொன்னானாற்போல் பொன்னிறமாயின. பூமணத்தையும் தேன்மணத்தையும் வாரிக்கொண்டு புதிய இனிய தென்றற்காற்று மெல்லெனவீசியது. விருந்தெதிர்கொள்ளும் அன்புடையார்போல மரங்களெல்லாம் பழங்களை ஏந்தி நின்றன. குயில் கூவவும், கிளி மிழற்றவும், வண்டுகள் பாடவும், மயிலாடவுமாய் இயற்கை

நல்லாள் இளவேனிலென்னும் காளையை மணந்துகொள்ளும் மணக்காட்சிபோன்றிருந்தது அத்தோற்றம். தாமரையும், ஆம்பலும், கழுநீரும் முதலிய பூங்கொடிகள் படர்ந்து மிடைந்த நறும் பொய்கை புக்குக் குளிர்நீர் குடைந்தும், வெம்மையறியாத சோலைக்குட் புகுந்து பூந்தென்றல் நுகர்ந்தும் இராசமாபுரத்து மாந்தர் மகிழ்வாராயினர்.

அந்நகரத்து வாழும் குபேரமித்திரன் என்னும் வணிகனுக்கும் அவன் மனைவிக்கும் பிறந்த மகளிர் இருவர் இருந்தனர். குணமாலை, சுரமஞ்சரி என்னும் பெயரினர் அவர். அவ்விருவரும் வாசனைச் சுண்ணம் செய்வதில் வல்லவர்கள். குணமாலை மூத்தவள்; சுரமஞ்சரி இளையாள். குணமாலை இடித்த சுண்ணம் சாலச் சிறந்ததெனவும், சுரமஞ்சரி இடித்த சுண்ணம் அத்துணைச் சிறந்ததன்றெனவும் ஊரவர் சொல்லிவந்தனர். ஒருநாள் மாலைப்போதில் சோலைக்குள் ளிருக்கும்போது மாலை என்னும் சேடி சுண்ணத்தைக் கொண்டுவந்து நீட்டினாள். அதனைக்கண்ட சுரமஞ்சரி, "சுண்ணம் என்ற பெயரோடு என்னை வருத்தவந்தன போலும் இவை" எனக் கூறிப் புழுங்கினாள். பக்கத்திருந்த குணமாலை சுரமையைப் பார்த்து, "தங்காய்! தேவருலகமே யன்றி இவ்வுலகிலாவதீ என் சுண்ணத்தை ஒப்பது உளதாயின் நீயே காணுவை" என்று சொன்னாள். சுரமை அதனைக்கேட்டு மனம் நொந்தவளாகி, சுண்ணத்தால் தோல்வியுற்றுத் தாழ்ந்தவளாயினேன்; சோலை வளம் நுகரவும், குளிர்புனலாடவும் என்மனம் விழைந்திலது! எனது சுண்ணத்தின் நிறைமை கூறித் தெளியவைப்பாருளராயின் அவர்க்குக் கோடியளவிற்றாய பொன் தரவும் வல்லேன்; நின்னையாலே ஊயைப் பிறந்த பாவியேன்போலும் யான்" என்று கூறினாள்.

குணமாலை, தன் தோழியையும் சுரமஞ்சரியின் தோழியையும், அவரவர் சுண்ணத்தோடனுப்பி நன்மை தீமை அறிந்து வரச்சொன்னாள். தோழியர் இருவரும் சுண்ணத்தை எவரவர்க்குக் காட்ட அனைவரும் ஒருமுகமாக, "சீவகனே இதனைக் கூர்ந்தறியுமாறு வல்லான் அவனிடத்தே காட்டி யறிமின்" எனக் கூறினர். சீவகனை அணுகிச் சுண்ணத்தை நீட்டித் தோழியர் தங் குறையைக் கூறினர். சீவகனும் குணமாலையின் சுண்ணத்தை உயர்த்தியும், சுரமஞ்சரியினுடையதைத் தாழ்த்தியும் கூறினான். தோழியர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் என்ன எனக் கேட்க, மாரிக்காலத்து இடிக்கப்பட்டது, ஆதலால் சுரமஞ்சரியின் சுண்ணம் சிறந்ததன்றாயிற்றெனவும், கோடைக்காலத்து இடிக்கப்பட்டதாதலால் மாலையின் சுண்ணம் சிறந்ததாயிற்றெனவும் கூறினான். சுரமஞ்சரியின் தோழி கனகபதாகை என்பவள், "ஐயனே! எனது நெஞ்சு கொள்ளுமாறு அதனை மெய்ப்பித்துக் காட்டும்வரை நும்மை அகலவிடேன்; மாந்தரும் தேவருமாயின் நின்சொற் கடவாது நீ கூறியதையே கூறிவிடுவர்; ஆதலால் அவரொழியச் சுண்ணத்திற் பயின்ற பறவைகள் இதனைத் தீதென்று நீக்குமாயின் பொருந்துவேன் யான்" என்று கூறினாள். அதற்கு இணங்கிய சீவகன், "கொடியன்னாய்! இச்சோலையில் வாழ்வார் நால்வருளர்; அவரால் நினக்கு இதனை மெய்ப்பிக்கின்றேன்" என்று கூறிச் சுண்ணத்தை வாரி விண்ணிற் றூவினான்.

தூவி, "மங்கையர் கண்ணும் மனமும்போல எங்கும் ஓடி இடறும் சுரும்புகாள்! வண்டுகாள்! தேனினங்காள்! மதுவுண்டு தேக்கிடும் ஞிமிறுகாள்! யான் தூவிய இச் சுண்ணங்களுள் சால நல்லவற்றை எற் றுண்ணுவீராக" என்று கூறினான். குணமாலையின் சுண்ணத்தை வண்டுகள்

கொண்டுன்ன, சுரமையின் சுண்ணம் நிலத்திலேவந்து வீழ்ந்தன. அதனைக் காட்டிச் சீவகன், "மூத்தனைய முறுவலீர்! இனி அறிந்தீரோ உண்மையை; இதனை நுமது தலைவியர்க்குரைப்பீராக என்று சொல்லிச் சென்றான். நிகழ்ந்தவற்றைத் தோழியர் கூறக்கேட்ட சுரமை அவலம் மிக்கவளானாள். சீவகன்பாற் கொண்ட காதல் ஒருபுறமும், சுண்ணத்தோல்வி ஒருபுறமுமாகத் தன்னை நலிய யாவதும் உரையாடாளாய் இல்லம்சென்று தனியிடத்தே அமர்ந்து தவம் ஆற்றியேனும் சீவகனைப் பெறுவதெனை உறுதிகொண்டாள். மற்றுத் தன் தந்தையை அழைத்து, "ஆடவர் யாரையும் கண்ணினாற் காணினும் உண்ணப்பெறேன்" என்று கூறினாள். அவனும் மன்னவனைக் கண்டு தன் குறை செப்பி அனுமதி பெற்றுவந்து, பெண் பதுமைகளே எங்குமாக்கிய மாளிகை ஒன்று சமைத்து அங்கே சுரமையை இருக்கச் செய்து அவ்வீதி யெல்லையளவும் ஆடவர் வாலாகாதெனை விதித்தான். "இன்பக் காரணமாம் விளையாட்டினுள் துன்பக் காரணமாய்த் துறப்பித்த வினை இருந்தவாறு நன்று" என்று குணமாலையும் வருந்தினாள். பிண்டியினீழற் பெருமான் திருவடிக்கு ஆயிரம் தாமரை மலரிட்டு வணங்கினாள்.

இவ்வாறிங்ஙனமாக நீர் விளையாட்டுக்காலம் வந்தது. மங்கையரும் மைந்தரும் எங்கும் பரந்து நின்று மாலை வீசியும், சுண்ணம் தூவியும் பலவாறு விளையாடினர். கையேந்தி வந்த பைங்கிளியைக் கரையகத்தே வைத்து மங்கை ஒருத்தி குளத்தில் மூழ்கி நீராடினாள். நெடுநேரம் அவள் வாராதிருந்தமை கண்ட பைங்கிளி "பாம்பு பாம்பு" எனக் கூவ அது கேட்ட மங்கை வெருவிக் கரைசேர்ந்தாள். கூந்தல் பரப்பி நின்ற மங்கையைக் கண்டு தோகை மயிலென்றெண்ணிச் சென்று புல்லிய மயிற்பேடை மங்கையாதலைக்

கண்டு நாணி யகன்றது. தான் அணிந்திருந்த பைம்பூண் நீருள் விழ, "அன்னப் பேடே! நின்னைத் தொழுகின்றேன்; வீழ்ந்த எனது கலன்களை எடுத்துத் தாராய்: எனது அன்னை கொடியள்!' என்றிரந்து நின்றாள் ஒருத்தி. இவ் விளையாட்டுக் காலத்தே சுவையுடையதொன்று நடந்தது.

நாய் ஒன்று அந்தணர்க் காக்கிய சோற்றுத் திரளைக் கவ்வி ஓடிற்று. கல்லும் தடியும் கைக்கொண்டு காற்றினும் விரைய ஓடி, அந்நாயை வளைத்துக் கொல்ல முற்பட்டனர் அந்தணர். வேள்விக்காலத்து உணவினை விலக்கியார் யாராயினும் அவர் விலக்கப்பட்ட உயிர்க்கு அடிமையாவர் என்பது வேதவிதி. அதனையும் சிந்தியாராய் அந்தணர் வெருட்ட நாயானது ஒருகுளத்தே பாய்ந்து நீந்தியது. தொந்தி சரியக் குந்தி மிதித்துச் சென்ற அந்தணர் இரைத்து நின்றனர். அப்போது களி மகன் ஒருவன் கன்னிய ரிருவரோடும் கட்குடத்தோடும் தோன்றினான். நறவு பயக்கத் தால் அழல்போலச் சிவந்து சுழலும் கண்ணையுடையானைக் காமுகம் வீக்கிய கச்சையும் கழலும் உடையானைப் நின்று அந்தணரைத் தீச்சொற்களால் நிந்தித்து, "என் நாயினை அடித்துக் கொன்றீரே; உயிர்கொண்டு செல்வீரோ; நாயினை மீட்டுத் தாரீர்; இன்றேல் கைப்போர்க்கு வாரீர்; இதோ கட்குடம் உடைத்தேன்" என்று வாய்வந்தன கூறித் தெழித்தான். அந்தணர் செய்வ தறியாராய் அச்சத்தால் நடுங்கி உடல் முழுதும், வேர்த்தனராய் வெருள வெருள விழித்தனர். சிவகசாமி அவ்விடத்தே சென்று களி மகனைப் போக்கிவிட்டுத் தோழரோடு சென்று நாயினைக் கண்டு வருந்திக் கலங்கினான். "யான் சொல்லும் மந்திரத்தை நினைப்பாயாயின், நீ நற்கதி சேர்வை" என்று நாய்க்குச் சொன்னான்.

நாய் இருகண்களும் நீர் சொரியச் சீவகனை நோக்கி செவியோர்த்து நின்று வால்குழைத் துள்ளம் மகிழ்ந்தது. "நல்லறிவின்றித் தீயனபயின்று கெட்டேனென்று கவலற்க ; ஐந்து மந்திரங்களாகிய அமிர்தம் உண்டனையாயின் நன்னிலை அடைதல் உறுதி ; மனமாசகற்றி மறதியின்றி நினைத்தி" எனக் காதில் அம்மந்திரங்களை ஓதினான். பின்னும் சிறிது நேரத்தில் மலையுச்சியில் ஒரு தேவன் தோன்றினான். அவன் சீவகனைப்பார்த்து, "மலையெனத் திரண்டதோளாய்! நின்னருளால் தேவனாயினேன் யான் : சங்கமலையின் உச்சியில் வாழ்வேன் ; சந்திரோதயம் என்னும் நகரில் சுதஞ்சணன் எனப் பெயர் பெற்றேன் ; சிறிதிருத்தியாயின் இவ்வுலகெல்லாம் நின்னடிக்கீழ்த் தருவேன்" என்றுரைத்தான். "வாளொடு வயவரீண்டி வாரணத்தொழுவின்முற்றி மீளிமை செய்யுங்காலத்து நின்னை நினைப்பேன் ; நாளும் கோளும் நைந்துவீழினும் வீழாத கிழமையுடையாய் பிறவற்றாற் குறையொன்றில்லேன்" என்றுகூறிச் சீவகன் சென்றான்.

இவர்கள் இவ்வாறாக, சந்தனமும், குங்குமமும், மாலையும், சுண்ணமும் கலந்து யாறெல்லாம் நீர் மறையும்படி பரந்தது. எல்லோரும் நீர் விளையாடி முடித்து யானையும் தேரும் ஊர்ந்து நகருக்கெழுந்தனர். அசனிவேகம் என்னும் கடகளிறு மதஞ் செருக்கியது. கடலென முழங்கிக் காற்றெனக் கடுகிக் கூற்றம்போல் வெருவத்தக்கதாகி நகரத்தைக் கலக்கிக்கொண்டு வந்தது. புயற்காற்றில் அகப்பட்ட வங்கம்போல மதயானையால் நகரம் அலைக்கழிக்கப்பட்டது. கையினாற் பற்றியும், மருப்பினால் குத்தியும், காலால் தேய்த்தும் கண்ட பொருளையெல்லாம் நாசஞ்செய்த யானை குணமாலையைக் கண்டு அவள் பக்கம் ஓடிற்று. களிற்றின் வேகத்தைக்கண்டு கலங்கிய தோழி, "எம்மை அழிக்க வருகின்றது

யானை; வீரர்யாரும் ஈண்டிலரோ" என்று கைகூப்பி அலறிக் களிற்றெதிரே நின்றாள்.

"என்னைக் கொன்று முடிப்பதற்குள் யாரேனும் வந்து அவளையேனும் புரத்தல்கூடும்" என எண்ணியே தான் முன் நின்றாள். அவ்வழி வந்த சீவகன் மங்கையின் இடைக்கண்டு,

பெண்ணுயி ரவல நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல்
எண்ணினன் எண்ணி நொய்தா இனமலர் மாலை சுற்றா
வண்ணப்பொன் கடக மேற்றா வார்க்கச்சிற் றானை வீக்கா
அண்ணலங் களிற்றை வையா ஆர்த்துமே லோடி னானே.

தோழியைக் கொன்றுநின்ற யானையின்மீது மலைமேற் பாயும் மின்போலப் பாய்ந்து தாரும் மாலையும் குழலும் பொங்கக் கண்ணி சிதற அதனை அடக்கினான். கூற்றுப்போல முழங்கிக் கையால் மத்தகத்தைப் புடைத்துத் தன்மேல் சிறிவருதலைச் சிந்தியானாய் நங்கையைக் கொண்டு செல்லுங்கள் என்றான். திங்களைப் பற்றச் சென்ற நாகம் அதனை விடுத்துக் கதிரவனைப் பற்ற விரைந்து செல்வதுபோலச் சீவகன்மேற் சென்றது. கஞ்சன் அனுப்பிய யானையை அடர்த்த கண்ணன்போல யானையை அடர்த்துச் சென்றான் சீவகநம்பி.

யானைக்குத் தப்பி இல்லம் சேர்ந்த குணமாலை சீவகனையே நினைந்து வருந்தினாள். சிங்கவேறுபோலப் பாய்ந்த தோற்றமும், அருள்பற்றி எழுந்த அவனது வீரமும் மனக்கண்ணை விட்டகலாவாயின. கடல்நீர்போலப் பெருகிய காதல்நோய் தன்னை அடரவும் நாணத்தால் ஒன்றையும் சொல்லமாட்டாதவளாய் வருந்தினாள்; பந்தும் கழங்கும் ஆடுதலை மறந்தாள்; தோழியரோடு நெருங்கிப் பழகுவதை வெறுத்தாள்; பாலும் உண்ணாதவளாகி எப்போதும் தனித்தே இருத்தலை விரும்பினாள். தானே பாலூட்டி-

வளர்த்த கிள்ளையைப்பார்த்து, "பசுங்கிளியே! நின்னையொழிய எனக்கு உற்றதுணையாயினர் இல்லை; எனது துன்பத்திற்குத் துணையாதியோ" என்றாள். "தையலாய்! மனம் தையவேண்டா; இந்நாட்டகத்து எக்காரியமேனும் யான் முடித்துத் தருவேன்" என்றது கிள்ளை. அதுகேட்டு மகிழ்ந்தவளாகி, சிறந்த செய்யவாய்க் கிளியே! சீவகன் என்பான் எனது உயிரை வௌவிச் சென்றான். அதனை மீட்டுத் தருதி. அவன்பாற் றூதாகச் சென்று சில சொல்லிவருதி" என்றிரந்தாள். கிள்ளையும் பறந்து சென்றது.

சீவகன் குணமாலையின்பாற் கொண்ட காதல் நோயால் வருந்தினன். யானையைக்கண்டு அஞ்சி நடுங்கிய நடுக்கத்தையும், கலங்கி விழித்த விழியையும் மறக்க இயலாதவனானான். பூந்துகில் நெகிழ்ந்து சோரவும், மணிக்குழை மகிழ்ந்து வீழவும் நின்ற அவளைப் புல்லுவதுபோலச் செல்லுவான். உருவெளியாதல் கண்டு மீள்வான். பின்னர் தான் கண்டவாறு உருவம் ஒன்று தீட்டினான். தத்தைவந்து அவ்வுருவத்தைக் கண்டாள். கண்டவள் புலந்துசிறி "யார் வடிவமோ ஈது" என வினவினாள். "ஓர் இயக்கியின் வடிவமாகும்" என்றான் நம்பி. "நன்றே சொன்னாய்! நின்மனத்தை இயக்கியதால் இயக்கியாயினள் போலும்; பூக்கள் தோறும் அமர்ந்து தாதுகுடையும் வண்டுகள்போல ஆடவரும் வரம்பொன்றிலாதாரோ" என்று சினந்து விலகினாள். தூதாகப் புறப்பட்ட பைங்கிளி அங்கு வந்து சேர்ந்தது. வந்த காரியத்தைச் சொல்லி அவன் இசைவு பெற்று ஓலையும் வாங்கிக் கொண்டு மாலைபால் மீண்டது.

குணமாலை கிள்ளையைப் போக்கியும் மனம் அமையாதவளாய், "கிளிதானும் போயதோ அன்றோ, அவர் என்ன சொன்னாரோ? மறுத்தாரேல் சுரமைபோல நோற்றேனும்

அடையல் வேண்டும்" என்றிவ்வாறெல்லாம் எண்ணிப் புலம்பினள். செவிலியும் நற்றாயும் முதலியோர் குண மாலையின் மணவினைபற்றிச் சிந்தித்து அவளுடைய மாமன் மகற்கே கொடுப்பதென முடிவு செய்தனர். அதனை அறிந்த மாலை, "அன்னைமீர்! மணிமதக் களிற்றினை வென்றானுக்கே உரியதென்னுயிர். வேறாகக் கூறும் கூற்றெல்லாம் உயிரைச் சுடாநிற்பன. ஆதலின் உரையாதொழிவீராக" என்றாள். விநயமாலை அதனைத் தன் கேள்வற்குணர்த்தி நால்வரைப் போக்கி சீவகன் கருத்தறிந்து வந்து நன்னாளில் மண முடித்தனர். சீவகனும் குணமாலையும் ஊடியும், கூடியும் குறையா இன்பக் கடலுள் அழுந்தினர்.

அசனிவேகம் என்னும் யானைதான் சீவகனால் அடர்க்கப்பட்டமைக்கு நாணிக் கவளம் கொள்ளாது கையசையாது களித்து நின்றது. பாகர் அறிவிப்ப அதனை அறிந்த வேந்தன் கனன் றெரியும் சிற்றத்தால், "வேடர்களையும் வேந்தர்களையும் வென்றோமென்னும் செருக்கால் நம்மீதும் போர் தொடுக்கக் கருதினன்போலும்; மதயானையைச் செலுத்த வணிக மகனை, இளையர்காள்! விரைவிற் கொணர்மின்; அவனது ஆண்மைக் கூற்றைப் போக்குவேம்" என்று கூறினான். கூற்றத் தூதர்போல இளையரும் சீவகனை அணுகி வந்த காரியத்தைச் சொல்லினர். இதனைக் கேட்டார் பலரும் "கட்டியங்காரனுக்கு முடிவுகாலம் வந்ததுபோலும்" என்று எண்ணினர். நந்தட்டன் மன்னவனோடு மாறுகோடல் அறிய உள்ளாற் செயலாகும். இவனை அனுப்பி வைத்தால் அதற்குள் சினந்தணிந்து விடுதலும் கூடும் என்று இளையர் கூற்றுக் கிணங்கினான். தான் பிணிக்கப் படுதல் தனது ஆண்மைக்குப் பழுதாம் எனச் சீவகன் எண்ணினான். தாயும் தந்தையும் பரிந்து வேண்டுங்

காலத்து, அதனை மறக்க முடியாமையால், மூவுலகமும் எதிர்ந்தாலும் முருக்கும் ஆற்றலை மறைத்துவைத்துப் பிணிக்க இடந் தந்தான்.

நற்றாய் இதனைக் காணப்பொறாது சீவகசாமி நம்பீ! என அழுது புலம்பினாள். எரியுட்பட்ட பூமாலைபோலக் குணமாலை வெந்து துடித்தாள். நகரத்து மாந்தரெல்லாம் சீவகற் குற்றதைக் காணப்பொறாது துடித்தார்கள். கானகம் நடந்த இராமனைக்கண்ட அயோத்திபோல அம்மாநகரும் மிகக் கலங்கி நின்றது. கந்துகன் காவலனைக் கண்டு பணிந்து நின்று, பன்னிருகோடி பொன்னளித்து, "மன்னவ! இதனைக் கேட்க அருள் செய்வாயாக; நின் மதயானை ஒரு பெண்ணைக் கொல்ல வந்தது; எனது நம்பி யானையினின்றும் அப்பெண்ணைக் காத்தான்; இது குற்றமாயின் குணந்தான் யாதோ? துன்புற்றார் துன்பத்தைப் போக்கல் வீரராயினார் கடன் என அறிவின்மையாலே துணிந்த இக்குற்றத்தினைப் பொறுத்துக்கொள்ளுக; ஆனிரை பெயர்த்த காளையை உய்யவைத்தி" என இரந்து வேண்டினான். ஆனிரை பெயர்த்தான் என்ற சொல்லைக்கேட்டதும், சீற்றம் பொங்கியது வேந்தனுக்கு.

> ஆய்களிற் றசனி வேகம் அதன்மருப் பூசி யாகச்
> சீவகன் அகன்ற மார்டம் ஓலைபாத் திசைகள் கேட்பக்
> காய்பவன் கள்வ ரென்ன எழுதவித் திடுவல் இன்னே
> நீபரி வொழிந்து போய்நின் அகம்புகு நினைய லென்றான்.

கந்துகன் செயலற்றுக் கலங்கி வந்தபோது-முனிவன் ஒருவனால் சீவகனை ஒரு இயக்கன் கொண்டுசெல்வான் என்பதை அறிந்து அமைதியடைந்தான். தோழன்மாரனைவரும் சீவகன் பிணிக்கப்பட்டமைக்குப் பெரிதும் வருந்தினர். பதுமுகன் எரிதவழச் சினந்து, "புலியேறு புறத்தேயிருக்

கக் குட்டியைப் பற்றுதலாகுமோ? கட்டியங்காரனென்னும் கழுதை நம்புலியைப் பாய்வதே, கொல்; தாயும் தந்தையும் இருந்தே இக்கொடுமையைச் சூழ்ந்தனரே," என்று புலம்பிக் கூறினான். இதற்குள் ஒற்றன் ஒருவன் ஓடிவந்து, வாளும், வேலும், குந்தமும், சூலமும் ஏந்திய பதினாலாயிரவர் மள்ளர் சீவகனை வளைத்துக்கொண்டார். சீவகன் சிறிதே சிற வீரர்கள் சிதறலாயினர், என்று சொன்னான். பின்னர் அனைவரும் சிந்தித்து "நகரைத் தீயிட்டு மதனனைக் கொன்று விடுவோமாயின் வீரர் ஓடிவிடுவர். நம்பியைக் காத்தல்கூடும் என முடிவு செய்தனர். நபுல விபுலரும், நந்தனும், குணமாலையின் சுற்றத்தாரும், பதுமுகனும் ஒருங்குகூடினர். பதுமுகன் இக்கருத்தினைத் தந்தைக் கறிவித்தான். அவள் சில மந்திரங்களைச் சொல்ல, தீயும் காற்றும்போன்ற வாளும் வேலும் முதலிய வந்தன. தன் விஞ்சை வன்மையால் கணவனைக் காத்தல் கூடுமாயினும், அவனது கல்விக்கும் ஆற்றலுக்கும் பழுதாகுமே என மயங்கினாள்.

சீவகன் வீரர் திரளைக் கண்டு சுதஞ்சணனை நினைத்தான். ஒருவரும் அறியாவண்ணம் அவன் வந்து சீவகனை எடுத்துச்சென்று விண்ணகத்தே மறைந்தான். மதனனும் மற்றையோரும் சீவகனைக் காணாது கலங்கிச் செய்வதறியாது திகைத்தனர். இவ்வுண்மையினைக் கேட்டால் கட்டியங்காரன் நம்மைச் சிறுவான்; ஆதலால் யாவனாயினும் ஒருவன் உயிரையுண்டு அவனுடம்பிற் குருதி தோய்ந்த வாளைக் கட்டியங்காரனுக்குக் காட்டுவோம் என எண்ணி அவ்வாறே செய்தனர்.

அருள்வலி ஆண்மை கல்வி யழகறி விளமை யூக்கம்
திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவரிவ் வுலகில் யாரே சீவகன் ஒக்கும் நீரார்
பெரிதரி திவனைக் கொன்றாய் பெறுகெனச் சிறப்புச் செய்தான்

௫. பதுமையா ரிலம்பகம்

தேவனால் சிறைவிடுக்கப்பட்ட சீவகன் தான் சிறைப்பட்டபோழ்தும், சிறைவிடுக்கப்பட்டபோழ்தும் பழவினைப் பயனென்றெண்ணி வருந்தலும் மகிழ்தலும் இன்றி ஒரு தன்மையனானான். விந்தைநாட்டு வளங்கண்டு மகிழ்ந்த சீவகனுக்கு ஆண்டுள்ளார் தம் மகளிரை மணஞ்செய்து கொடுக்க இசைந்தார்கள். சீவகன் அதனைப் பொருந்தானாயினன்.

மண்மிசைக் கிடந்தன மலையும் கானமும்
நண்ணுதற் கரியன நாடும் பொய்கையும்
கண்மணி குளிர்ப்பன யாவும் காண்பதற்
கெண்ணமொன் றிலதெனக் கிலங்கு பூணினாய்.

வற்றுநீர்க் கூவலு ளுறையும் மீனனார்
வேற்றுநா டதன்சுவை விழைத்தல் மேயினார்
போற்றுநீ போவல்யா னென்று கூறினாற்
ஆற்றின தமைதியங் கறியச் செப்பினான்.

இங்கிருந்து இரண்டு காதம் சென்றால் அரணபாதம் என்னும் மலையொன்றுண்டு. அம்மலையி னுச்சியிலுள்ள அருகதேவர் திருவடிகளை இறைஞ்சி அங்கிருந்து இருபத்தைந்து காதம் நடப்பீராயின் கங்கைக்கரை காண்பீர். அதனை அடுத்துப் பேய் வனம் உள்ளது. மகளிர்போலத் தோன்றி மேல் விழுதலும் தழுவியக்காற் பேயாகி உயிருண்டலும் ஆங்கே நிகழும். பல்லவதேயம் அதனை அடுத்துக் கிடப்பது. இறக்கும் விதியுற்றா ரல்லது பிறர் செல்லாக் கல்நெறி யொன்றுண்டு. சித்திரக்கூடமும் தக்கநாடும் முதலியன அடுத்தடுத்துக் கிடப்பன. வேடுவர் பயிலும் காடு முதலிய கடந்தால் மத்திமதேயத்து மன்னனைக் காணுதல்

நல்லது. இவ்வாறு வழியும் பிறவும் உரைத்து, ஊறின்றி வழிகடத்தற்குரிய மந்திரம் மூன்று சொல்லி வழியனுப்பி னான் சுதஞ்சணன். 'இன்னும் ஒரு திங்களில் தந்தையையும், மாலையையும் காண்பேன்' என்று சொல்லிய சீவகற்கு எதிராகப், 'பன்னிரு மதி கடந்தே செல்லுவை; சென்று நாடும் அரசும் பெற்றுப் பற்றறுத்துப் பேரின்ப வீடடைவை' என்று தேவன் சொன்னான். சீவகன் பிரிந்து வழி நடந்தான்.

மனையொழியத் துணையொழியப் போரேறு தனியே வந்ததே என எண்ணி அருவியாகிய கண்ணீர் பெருக்கி மலைகளெல்லாம் சீவகனைக் கண்டழுதன. நல்லோருடைய அல்லற்பாட்டினைக் கண்டு நகுதல்செய்யும் கயவர்போல முல்லை யரும்புகள் நகை செய்தன. வண்டுகள் அதனைப் பொறாது "பல்லை யுகுத்திடுவம்" என்று சொல்லுவபோல் பாய்ந்து துவைத்தன. இக்காட்சிகளைக் கண்டு சென்ற சீவகனை ஒரு வேடன் அணுகினான். உடம்பும் உடையும் கரியனாய், உடும்பினைப் பற்றிக்கொண்டு, கரடிபோன்றவனாகி, கிழங்கும் தேனும் கையேந்தித் தழையுடை யுடுத்த தன் பெண்ணோடு தோன்றினான் அவன். தான் பக்கத்து மலையில் வாழும் வேட்டுவர் தலைவன் என்பதையும் தானிருக்கின்ற இடத்தையும் அவனே சொன்னான்.

"நீ உண்ணும் உணவென்ன?" என்று சீவகன் கேட்டான். "ஆண் பன்றியையும் முள்ளம்பன்றியையும் போழ்ந்திட்ட நிணத்தை நெய்யிற் புழுக்கித் தேன் கலந்து மாந்துவோம்" என்று வேடன் சொன்னான். சீவகன் அதனைக் கேட்டு, "வேட! ஊனொடு கள்ளுண்ட பாவத்தாலே நீ இழிந்த குலத்திற் பிறந்தனை; ஊனுண்டு உடம்பினைப் பருக்க வைத்து நரகத்தில் வாழ விரும்புகின்றாயோ! அன்றி

வனைக் கைவிட்டு நீங்கித் தேவராய் வாழ விரும்புகின்றாயோ சொல்லுதி" என்று வினவினன். தேவராதலே என் விருப்பம் என்று விரைந்து சொன்னான் வேடன். "வேட்டுவ! இனி நீ நல்லறிவு பெற்றாய்; ஊனை ஒழித்துக் கிழங்கு தேன் முதலிய உண்டு வாழ்தி; முடிவில் பேரின்பம் அடைவை" என்று அவனைத் தெருட்டி மலைமீ தமர்ந்த அருகப் பெருமானைப் புகழ்ந்து துதித்துப் பல்லவதேயம் சார்ந்தான்.

அந்நாட்டுத் தலைநகரை அடுத்துள்ள ஒரு பொழிலிற் றங்கிச் சிறிது இளைப்பாறி இருந்தான். வேந்தனும் ஆண்டு வந்திருந்தான். நாடக மகளிர் வந்து ஆடி மன்னனை மகிழ்வித்தனர். தேசிகப் பாவை என்பாள் நாடகம் ஆடும்போது சீவகனைக் கண்டாள். அவனது பேரழகைக் கண்ணால் முகந்து முகந்து பருகியும் ஆராதவளாயினள். காதல் பெருகத் தாங்கிலாளாய், "எனது நலன் இவனுக்கே உரியது; மன்னவனையோ பிறரையோ என் மனம் நாடுகின்றிலது. பொன் பெருகத் தந்தால் கற்பை உடைத்தல் கூடும் என்பது பொய்யுரையாகும்; எனது நெஞ்சிறை கொண்டான் இவ்வள்ளலே" என்று புலம்பினள்.

மன்னவன் மகள் பதுமை என்பாள் சோலைக்குச் சென்றிருந்தாள். தான் வளர்த்த முல்லை மல்லிகை முதலிய பூஞ்செடிகளெல்லாம் பூத்துப் பொலிவதைக் கண்டு தோழியரோடு விளையாடிக்கொண்டிருந்தாள். குரவ மரம் ஒன்று அழகிய பூக்களை ஏந்தி நின்றது. அதனைத் தன் தோழி எனச் சொல்லிச் சென்று கொய்வதற்காகத் தோளை நீட்டினள். ஆண்டிருந்த பாம்பு ஒன்று அவளைத் தீண்டிற்று. நஞ்சு தலைக்கேற மயங்கி நடுக்கமுற்ற பதுமை 'நான் இறந்தே போய்விடுவேன்' என்று எண்ணினள். தோழிய

ரைப் பார்த்து; " தாயும் தந்தையும் தோழியரு மெல்லாம் நாளும் என்னை நினையுமின் " எனக் கூறிக் கண் செருகக் கீழே விழுந்தாள். நிகழ்ந்தவற்றை யெல்லாம், தோழியர் ஓடிவந்து மன்னவனை வணங்கிக் கூறினர்.

சீவகனை ஆண்டே நிறுத்தி மன்னவன் விரைந்து வந்து நஞ்சு தீர்க்கும் மருந்து பலவற்றையும் கொடுத்தான். ஒன்று னும் நஞ்சு தீராதாக, வேந்தன் மனமுளைந்து வருந்தினன். சோலையின் உப்பா லுள்ளானே ரிளைஞனல் இந்நங்கை பிழைத்தல் கூடும் "எனப் பக்கத்துள்ளார்" கூறினர். சீவக நம்பி அழைக்கப்பட்டான். " அவலித் தழுமாறு நிகழ்ந்த கொடுமை யாதோ " எனச் சீவகன் வினவி நிகழ்ந்த தறிந் தான். வேந்தனும், "நம்பி! இந்நங்கைபால் அருள் செய்தி" என்றான். சுதஞ்சணன் கூறிய மந்திரத்தால் யாவும் உணர்ந்த சீவகன், " காவல! நின் மகள் இறக்கவில்லை; ஆதலின் அழாதே கேள் ; எட்டுக் காரணம்பற்றிப் பாம்பு கள் கடித்தல் உண்டு ; பொறுக்கமுடியாத அளவிற்கு நஞ்சு ஊறிப் பெருகுதல், அச்சம், இரையெனக் கருதுதல், இழை யும் காலத்துக் காண்டல், மனக்களி மிகுத்தல், பிறர் தனக் குச் செய்த பிழையைக் கருதுதல், என்பன அவ்வெட்டா கும்; மேல்வாய்ப் பல்லினும் கீழ்வாய்ப் பல்லினும் ஊறிய நஞ்சைக் கடித்த வாயிலே காணுமாயின் உயிரை உண்டே ஒழியும் ; ஏனைய பற்களில் ஊறிய நஞ்சினைக் காணுமாயின் வருத்தஞ்செய் தொழியும் ; அந்தண நாகம் ஆன் பால்போல நாறும் ; அரச நாகம் நந்தியாவட்டம் நாறும் ; தாழை மடல் போல வணிக நாகம் நாறுநிற்கும்; பழுப்பு நாறும் வேளாள நாகம் ; கடிவாயை விரலாற் றேய்க்கக் கொப்புளங் கொள்ளுமாயின் கவ்வியது மாநாக மெனவும், தெளிந்த மதுப்போல நீர் பாயுமாயின் மண்டலி நாகமெனவும் அறிய

லாம்; நஞ்சையாளைத் தீண்டியது அரசர் சாதியைச் சார்ந்த கன்னி நாகமாகும்; அழுந்திய பற்கள் மூன்று" என்று விரிவாகச் சொல்லியபின்னர்க், குவளைப்பூ ஒன்றை மூன்றுரு ஓதிப் பதுமையின் முடியிலே அழுத்திப் பெயர்ந்து நின்று பின்னும் இரண்டுரு ஓதி முகத்தை நேரே நோக்கினன். நஞ்சு தானுக இறங்க, உறங்கினர் எழுமாறுபோல எழுந்து நின்று குமரனைப்போல நின்ற காளையை விழித்துக் கண்டாள். நாணமும் நிறையும் நீங்கத் தன் உள்ளமெல்லாம் நிறைகொடுத்துக் காணும் உருவெல்லாம் அவனுருவாகவே எண்ணி மயங்கினள். சீவகனது விச்சை வல்லமையை நகரமெல்லாம் புகழ்ந்து மகிழ்ந்தது.

அன்று மாலை பதுமை தான் பழக்கமாக விளையாடும் சோலைக்குள் புகுந்து சீவகனை நினைந்து வருந்தினள். சீவகனும் அங்கே வந்தான். பதுமையைக் கண்டு நீரரமகளோ! இயக்கியோ! வரையரமகளோ! யார்தாமென்று மயங்கினன். மாலைகள் வாடின; கண்கள் இமைத்தன; கால்கள் நிலத்தே தோய்ந்துள்ளன. இது தேவ மகளிர்க்கு நிகழா வாகலின் மானிட மகளேயாம் எனத் துணிந்தான். காதல் வெள்ளத்தில் நாணம் முதலியன புல்போலச் சாய்ந்து விழப் பதுமையும் மயங்கி நின்றாள். சீவகன் மெல்ல அவளை நெருங்கிக் கூந்தலில் மொய்த்த வண்டுகளை ஓட்டுவான்போலக் கையோச்சினன். பதுமை நடுங்கி உடல் சிலிர்த்துத் தன்னை யறியாது நின்று அவனைக் கட்டிக் கலந்தாள். நெஞ்சுகலக்கக் கூடிய பின்னர்ப் பதுமை ஆடையணிகள் குலைந்திருப்பதால் தோழியர் அறிவரே என்று மயங்கினள். சீவகன் அவற்றையெல்லாம் முன்புபோலத் திருத்திக் கூந்தலைக் கோதித் தோழியர் ஐயுறாதவாறுசெய்து, "பாவாய்! உயிரன்னாய்! எனதூர் நின் னூர்க்கு அணித்

தேதான் உள்ளது ; நின்னை யான் ஒருநாளும் பிரிதல் செய்யேன்'' எனத் தேற்றி அனுப்பினான்.

இஃதிவ்வாறாக மன்னவனை அணுகி நின்றான் சீவகன். மதிதரன் என்னும் அமைச்சன் "பதுமை யென்னும் நல்லாளைச் சீவகற்கே கொடுத்தல்'' தக்கது எனக் கூறினான். அரசனும் இணங்கினான். நகர முழுவதும் அலங்கரிக்கப்பட்டு, மணவினைக்குரிய நன்னாளில் இருவர்க்கும் மண முடிந்தது. ஒருநாள் தேசிகப் பாவை சோலையில் தனியே யமர்ந்து வீணையைப் பாடினாள். சீவகன் அவளைக் கண்டு மயங்கி அவளோடு கூடிக் களித்தான். இவ்வாறு இரண்டு திங்கள் கழிந்தன. நள்ளிரவிற் புறப்பட்டுச் சீவகன் ஒருவர்க்குஞ் சொல்லாது வேற்றுநாடு நடந்தான். தன் கையகத்தே பள்ளி கொண்டு கண்வளர்ந்த நம்பி பிரிந்த பின்னர்க் கண்விழித்துப் பார்த்தாள் பதுமை. நாயகனைக் காணாது ஒவ்வொன்றையும் பார்த்துப் புலம்பினாள். மார்பமுழுந்த என்னை அவன் புல்லுங் காலத்துப் பூண்கள் உறுதலால் நோமென அவனைக் கடிந்து கொள்வாய், செல்வக் கிள்ளாய்! இன்று அவன் பிரிவை உரையாது விட்டனை ; நீயும் கொடியையோ என்றாள். மயிலே நின்னைத் தொழுதேன்; என்னுடைய கணவனைக் காட்டாயோ என்றாள். மழை தோய்ந்துயர்ந்த மாடமே! கோடிநுண் துகிலும் குழையும் நல்குவேன் ; நம்பனைத் தேடித் தாராய்'' என்றாள்.

> நிரைவீ ழருவி நிமிர்பொன் சொரியும்
> வரையே! புனலே! வழையே! தழையே!
> விரையார் பொழிலே! விரிவெண் ணிலவே
> உரையி ருயிர்கா வலனுள் வழியே.

இவ்வாறு அரற்றுகின்றாளைத் தோழி நெருங்கி, ஆறுதலாகச் சில சொன்னாள். "பாவாய் கடல்போலப் பெருகிப்

பழுத்து முதிர்ந்த காதலே யாயினும் உருகின பொன்னி லுள்ள நீர்ப்புள்ளிபோலத் தோன்றாது நிற்றலும் உண்டு. மருவியகாலத்து மகிழ்ச்சியில் ஆழ்ந்தார் பிரிவிற்குப் பேதுறு தல் பேதைமைப் பாலது ;

பேதைமை என்னும் வித்திற் பிறந்துபின் வினைக ளென்னும்
வேதனை மரங்கண் ணாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்பு மென்னும் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பைகாய்த்து மரணமே கனிந்து நிற்கும்.

கையால் எறிந்த பந்து மீண்டும் நம்மிடத்தே வந்து சேருமாறுபோல அவன் வருதல் உறுதி" எனத் தோழி கூறத் தெளிந்தாள்.

---

௬. கேமசரியா ரிலம்பகம்

பதுமையைப் பிரிந்த சீவகன் காடும் மலையும் கடந்து போனான். வழியிடத்தே நின்ற மலைச்சுனை ஒன்றில் நீராடிப் பூ ஏந்தி வந்து பிண்டிக் கோமான் திருவடிகளிற் றூவி இனிய தமிழாற் பாடிப் பரவினான்.

செய்தா னிருவினையின் பயத்தைச்சேரும் சென்றென்றி
எய்தா னதன்பயத்தைப் பிறனே துய்த்தல் இயல்பென்றி
கொய்தாமந் தாழ்ந்தொசிந்த குளிர்பூம்பிண்டிக் கோமானே
இஃதே நின்சொல் இயல்பென்றாய் அடியேனின்னைத் தொழுதேனே.

உண்டே தனதியல்பின் உணருங்காலை உயிரென்ற
உண்டாய அவ்வுயிரே பிறிதினில்லை எனவுரைத்தி
வண்டார்த்து காற்காதம் வண்ணமாலை சுமந்தொசிந்த
கொண்டேத்து பூம்பிண்டிக் கோமான் நின்னைத் தொழுதேனே.

காதலா லென்வினையும் கழிபவென்றி அக்காதல்
ஆதலா லென்வினையும் கழியாஎன்றும் அறைதியால்
போதலாய்த் தேன்றளித்துப் பொழிந்துவண்டு நுவண்டுலாம்
கோதைதாழ் பூம்பிண்டிக் கோமானின்னைத் தொழுதேனே.

இங்ஙனம் பரவி அப்பெருமானை வலம் வந்து சித்திர கூடம் வந்தான். காய் கனி கிழங்கு முதலியவற்றை உண்டு வாழ்வாரது தவப் பள்ளியினைக் கண்டான். ஆண்டு வாழ்ந்த மாதவர் வள்ளிக்கிழங்கும் வாழைக்கனியும் தந்து விருந்தோம்பினர். நம்பி நுணுகிய கல்வி கேள்வியுடையான், சீவகன் என்பதை அவன் கண்ணாலும் முகத்தாலும் உணர்ந்து அதனைச் சிறிது உரையாடிக் காண விழைந்தனர். காமநுகர்ச்சியை ஒழியாத நுங்கள் நோன்பு என்ன பயனைத் தரும்? பிறவியை ஒழிக்குமோ வளர்க்குமோ சாற்றுவீ ரென்றான் சீவகன். "யாமெல்லாம் நல்ல நெறிக்கண் நிற்கின்றேம்; ஏனைய தீயநெறிகள் என்பதையும் தெளிய உணர்ந்துள்ளோம்; எமது நெறிக்கண் உள்ள தீங்கினை நீ உணர்வாயாயின், நம்பி! சொல்லுக" என்று மாதவர் கூறினர். காயும் கனியும் உண்டால் பழவினை பரியும் என்று கூறுகின்றீர்: அஃதுண்மையாயின் பறவைகளுக்கும் தீவினை பரிதல் வேண்டுமன்றோ; கிழங்கும் புல்லும் உண்டு ஐவகைத் தீநடுவே நின்று நோற்றலால் வெவ்வினை துணியும் என்கின்றீர்: அஃதுண்மையாயின் கல்லை யுண்டு வெம்பி நிற்கின்ற புறவுகளெல்லாம் தீவினை துணியப் பெறுமன்றோ; நீண்ட சடையோடு நீர்மூழ்கி நிலத்திலிருந்து உடம்பை வாட்டுதலால் மேலான கதி கூடுமென்கின்றீர்: அஃதுண்மையாயின், கயங்கண்ட இடத்தில் மூழ்கித்திரியும் காடிகளும் தீவினை நீங்கப் பெறுதல் வேண்டும்; குருதியாற் கறைபட்ட வெண் டுகிலைக் குருதியால் தூய்மையாக்குதலும் கூடுமோ? நெருப்பைப் பொதியவைத்த துகில்வேகாதிருத்த

னுண்டோ; இல்லை யன்றே! நுமது நெறி மேற்கூறியவற் றையே ஒத்திருக்கின்றது; ஆதலால் அதனைக் கைவிடுமின்; உண்மையறிவால் பொருள்களைப் பொய்யின்றித் தெளிய உணர்ந்து, ஐம்புலன்களையும் பொறிவழி போக்காமற் கெடுத்து வாழ்தலே உய்யும் நெறியாகும்'' என்று கூறித் தெருட்ட மாதவர் தம் மனைவியரைத் துறந்து வீட்டு நெறி நின்றனர்.

சீவகன் பின்னர்த் தக்க நாடு சார்ந்தான். வளம் மிக்க அந்நாட்டின் தலைநகர் கேமமாபுரம் என்னும் பெயருடை யது. கேமசரி எனப் பெண்ணொருத்தி அந்நகரத்தே இருந்தாள். அவள் தாய் நிப்புதி என்பாள்; தந்தை சுபத் திரன் என்பான். அந்நல்லாள் அழகால் திசைமுழுவதும் போக்கிய புகழுடையாள். "யாரைக் கண்டு அவள் நாணி ஒடுங்குகின்றாளோ அம்மகனே அவட்குக் கணவனாவான்'' என நிமித்திகர் சொல்லியிருந்தனர். சுபத்திரன் நாடோ றும் பலர்க்கு விருந்தளித்து வந்தான். விருந்தாக வரு வோரை யெல்லாம் தான் நாணப்படும் காதலன் உளனோ என்பதைக் கேமசரி தூணைச் சார்ந்து நின்று நோக்குவாள். இங்ஙனம் பன்னீராண்டு கழிந்தது. பன்னீராட்டையாகியும் நங் கன்னியை மணப்பான் காணப்பட்டிலனே என்று தாய் வருந்தினாள். சுபத்திரன் அதனை அறிந்து நாளையே ஒரு கட்டழகுடைய காளை வருவான், கவலை வேண்டா எனத் தேற்றினான். கேமசரி கழுநீர்மாலை ஒன்றை வீணையிலே சூட்டிக் கடவுளைப் பாடி முடித்தாள். தாய் நிப்புதி "நல்ல வித்தகனைப் பெறுக இம்மெல்லியல்'' என வாழ்த்தினாள்.

சீவகன் ஒருநாள் அவர் மனையகத்தே விருந்தாகச் சென்று பொருந்தினான். உள்ளே புகுந்த அளவில் இரு வரும் ஒருவரை ஒருவர் மாறிமாறி நோக்கினர். கேமசரி

நாணமுற்று வேட்கை பெருகி நின்று சோர்ந்தாள். நங்கை யழகையும் நம்பியழகையும் ஒத்து நோக்கிய நிப்புதி உள்ளம் பூரித் தகன்றாள். விருந்துண்ட சீவகன் வெற்றிலை பாக்க யின்று முகவாசம் இட்டிருந்தான். உள்ளத்துப் பெருகி எழுந்த காதல் வெள்ளத்தைக் கண்ணிலே நிறுத்திப் பிறாறி யாதவாறு அக்கண்ணையே என்பால் தூதாக்கிய அப்பார்வை ஒத ரீரமுதமும் உலகும் விற்குமே என்று சீவகன் எண்ணி னான். இருவர்க்கும் மணமுடிந்தது. பிரிவின்றிக் கூடி மகிழ்ந்திருந்த காலத்து விளையாட்டாகக் கிளியோட்டச் சென்றனர் காதலர் இருவரும். அங்கே பறந்து திரிந்த வண்டினைப் பார்த்துச் சொல்லுவானாய், "மணிவண்டே! இங்கு நீ மதுவுண்ணும்போது நின்துணை வண்டு இறந்து பாடுமின்றாய் வருத்தமும் இன்றாய் இருக்குமன்றோ; தான் இறந்துபடின் நீயும் இறந்துபடுவாயாதல் கருதி ஆற்றி யிருக்கும் அதனை உலகம் அறியுமோ?" என்று சீவகன் சொன்னான். தன் பிரிவை அவளுக்குணர்த்தவே இதனைச் சொன்னான் என்பதைக் கேமசரி உணரவில்லை. அன்றிரவே சீவகன் கேமசரியை விட்டுப் பிரிந்தான்.

துயில் விழித்துப் பார்த்து நாயகனைக் காணாது கேம சரி நெஞ்சம் துடித்தாள். "ஐயனே! நீ எவ்விடத்துள்ளாய், ஈண்டிலையோ; என்னைத் தனியே விடுத்தேகுதல் நினக் கறமாமோ; மாலை சூடினும் பொறையாற்றாது மருங்குல் நையும் என நயப்புரைத்த நீ இன்று வஞ்சம் பயிலுதியோ. வண்டுகளைப்பார்த்து நீ கூறிய கூற்று நின் பிரிவைக் குறித்த தாதல் அறிந்திலேன் பேதையேன்" என்று புலம்பினாள். இல்லுறை தெய்வம் ஒன்று வந்து, அவள் பிரிவிற் கிரங்கி நின்று,' இனிய கனிகளை நறுந்தேனிற் றோய்த்துக் கவளமாக இளம்பிடிக்குக் கொடுத்து அதனைப் புல்லும் மழகளிறு

மெல்ல நீங்குமாயின் அப்பிடி என் செய்யும்? அனையளே இவளும்" என்று கூறிற்று. தான் இறந்தால் கணவனும் இறந்துபடுவானே என்றுகலங்கி ஒருவாறு ஆற்றியிருந்தாள். நிப்புதி வந்து, "மகளே! காதலால் வரும் இன்பம் நீர்த்துளியைப்போலும் அத்துணைச் சிறியது; பிரிவுத்துன்பமோ கடலினும் காட்டிற் பெரியது; அறிவுடையார் இதன்பொருட்டுக் கலங்கி இருமையும் இழத்தல் செய்யார்; இளமை நீர்க்குமிழியை ஒத்தது; இன்பம் மின்போல மறைந்துவிடுவது; செல்வம் கதிர்கண்ட பனிபோல நீங்குதலுறும். இவற்றுக்காக அழுங்குதல் என்ன பயனைத் தரும்; தம்மிடத்தே தங்கினுரைப் பிரியாது பாதுகாக்கமாட்டார், பிரிவிற்கு வருந்தாதொழிவாக" என்று நல்லுரை பகர்ந்தாள்.

சீவகன் தனியே வழிநடந்து சென்று எதிருற்றொருவனுக்குத் தன் அணிகலன்களையெல்லாம் நல்கினான். பெற்றுக்கொண்டவன் சீவகனை ஊரும் பேரும் மனை மக்கள் சுற்றம் முதலியவும் வினவினன். சீவகனும் இவ்வுடம்பே எனது ஊர், இதனை எடுக்கவே போந்தேன்; மனைவியர்தாம் நால்வருளர்; அந்நால்வரும் ஈன்றான் ஒரு மகனும் உளன்' என்றுரைத்தான். வழிப்போக்கன் இதன் கருத்தறியானாய்ப் பேதைமை காட்டி நக்கான். நக்கவனைத் தெருட்டி, "தானம், சீலம், தவம், அறிவர் சிறப்பு என்ற இந்நான்காலும் நல்வினையைப் பெருக்கி இன்ப வீடடைதலே மக்கட் பிறவியின் பயன்" என்று கூறினான். கள்ளும், ஊனும், காமமும் பின்னே தீங்கு விளைப்பன; அவற்றைக் கைவிட்டு நோன்பியற்றுதல் வேண்டும்; மனைவி, மக்கள் சுற்றம் என்பன மாயையின் விளைவாகும்; இதற்கு ஒரு கதை சொல்லுவேன் கேள். இறக்கும் நிலையில் மொழிய வந்து நின்ற ஒருவன் பொருட்டிரளின் அளவைக் கையாற் காட்டி அதனைப்

பிறர்க் கீயுமாறு வேண்டினான்; அவன் மனைவி அதனை அறிந்து வைத்தும் பொருளைப் பிறர்க்குக் கொடுக்க மனம் இல்லாதவளாய், "ஐயா விளாம்பழம் கேட்கின்றீரே; விக்குள் வருங்காலத்து இதனை உண்ணக் கூடாதே" என்று சொன்னாள்; பின்னும் ஒருமுறை அவன் கைகாட்டினான்; எல்லாவற்றுக்கும் எற்றவாறு பொய்யாகக் கட்டுரை கூறிப் பொருட்பற்றே பற்றாகக் கொண்டு நின்றாள் அம்மனையாட்டி; அவ்வாறின்றி நீவிரெல்லாம் பகுத்துண்டலையே விரும்புவீராக; உடம்பை வளர்த்துக் கழுகுக்கிரையாக்காமல் உணர்வை வளர்த்து உயிருக்கு நல்கைதி தேடுவீரோ" என்று பின்னும் கூறிவிட்டுச் சென்றான்.

எ. கனகமாலையா ரிலம்பகம்

காட்டுவழியே நடந்த சீவகன் ஒரு பொழிலைக் கண்டு அங்குச் சென்றிளைப்பாறினான். வானத்திலிருந்து வந்தாள் போல ஒரு மங்கை ஆண்டுத் தோன்றினாள். தோன்றியவள், உடையைச் சிறிதே நெகிழச்செய்து, துகிலின் விளிம்பை ஒரு கையால் தாங்கி, மற்றொருகையால் மலரொன்றைக் கிள்ளித் தெறித்துக் கடைக்கண்ணால் நோக்கி, மணப்புகையைக் காற்றுவாக்கில் செல்லவிட்டு நகை முகத்தோடு நின்றாள். அணிகல அரவமும் நறுமண வாடையும் கண்டு சீவகன் திரும்பிப் பார்த்து நங்கை நின்றாளைக் கண்டான். தன்னைக் காணவே கொடிபோல் நடுங்கி நின்ற அவளைச் சூழ யாருமின்மையை உணர்ந்து, தனியே வந்தாள் ஓர் இயக்கி போலும் என எண்ணினான். புன்முறுவல் தோற்றியும், வாள் விழி போக்கியும், பலகால் பெருமூச்செறிந்தும் தன்

காமவேட்கையைத் தெரிவித்தாள் அவள். குறிப்பினை உணர்ந்த சீவகன், "கணவரைப் பிரிந்து கண்டுழியெல்லாம் ஆடவரை விரும்பும் நெறி கெட்ட மகளிரை உடைத்து இஞ் ஞாலம்" என்று சிந்தித்து நின்றான். தன் குறிப்பினை உணர்ந்தும் அவ்வுணர்வுடையான் இணக்கமின்றி யிருத்தலைக் கண்ட நங்கை தானே வந்து, "மூங்கிலை ஒத்த தோளினார்க்குக் கேள்வனே! விளையாடாநின்ற என்னை ஒரு விஞ்சையன் எடுத்து வந்து இங்கே யிட்டுச் சென்றான்; அநங்கமாவீணை என்னும் பெயருடையேன்; தாயிலாக் குழவிபோலத் தனியே துயருழந்த யான் நின்னைக் கண்டு துறக்கம் பெற்றவளானேன்; எனது எண்ணம் நிறைவேற நீ அருள் செய்யாயாயின் தீயினுள்ளே அமிர்தத்தைப் பெய்து விடுமாறுபோல் எனது உயிரை வேட்கைத் தீயினுள் பெய்து கெடுப்பேன்" என்று அவலித்துக் கூறினாள். சீவகன், "பேதாய்! தோளையும் மார்பையும் கண்ணையும் பார்த்து வேட்கை தலைக்கேற நிற்கின்றனை; மலமும் குருதியும், தசையும், என்பும் முதலிய இழித்தொதுக்கத்தக்க பொருள்களாலாக்கப்பட்ட இவ்வுடம்பினிடத்துக் காதலும் ஒரு கேடா! உருவத்தால் மனஞ் சென்றதென்பை யாயின் தோலாற் செய்த பாவை யொன்று திருந்த எழுதிவைக்கப் பட்டிருக்குமாயின் அதன்கட் காதல் சேறல் உண்டோ; இறைச்சியின் திரளை வேட்கைத்தீ எழுமாறு நூல் செய்தோர் புனைந்து வைத்தனர்; அதுகண்டு மயங்கா தொழிவாயாக" என்று உணர்வுண்டாகக் கூறிச் சிறிதகன்று நின்றான்.

அந்நங்கையின் கணவனான பவதத்தன் அவளைத் தேடி வந்தான். சீவகனைக் கண்டு வினவினான். "நீர் யார்? நுமக் குற்றதென்?" எனச் சீவகன் கேட்க, "பவதத்தன் என்பேன் யான்; பரந்துபட்ட நூற் கேள்வியுடையேன்; மனையாளைக்

கெடுத்துத்தேடி வந்தேன்" என்று மறுமொழி கொடுத்தான். "ஐய! கல்வியின் விழுப்பம் உணர்ந்திலிர் போலும்; மெய்ப் பொருளாய் நின்று நெஞ்சு மெலிந்தகாலத்து நல்லதுணை யாய் நிற்கும் கல்வியைப் பெற்ற நீர் இன்று கலங்கிக் கரைவ தென்னே?" என்றான் சீவகன். பின்னும் சொல்லுவானாய், "எவ்வளவுதான் அன்பு பாராட்டினாலும் மங்கையர் மனம் பிறரையே நாடும் இயல்புடையது; மனவலி யின்றிக் குடிப் பிறப்புக் கெடும் என்பதையும் பாராது, ஆயிரம் மனத்தை யுடையது பெண் பிறவி; இந்திரன் மகளேயாயினும் பத்துப் பொருளை அகங்கையி லிட்டக்கால் மனம் மாறிவிடுவள்" என்று சீவகன் கூறினான். பவதத்தன், "ஐயனே! நீ சொல் லுவ உண்மையாகலாம்; என்னுடைய மனையாள் அத்தகையா ளல்லள்; காமனே வரினும் கண்ணெடுத்தும் பாராள். சிறந்த கற்புநிறை யுடையாள்" என்று மொழிந்தான். முன்னே நிகழ்ந்தவற்றை மனத்தால் நினைத்துச் சீவகன் நகை கொண்டான். மங்கையர் மனமும் ஆடவர் மனமும் எத்தகையது என்று அவன் உணர்ந்தான். பின்னர் மற் றொருசார் நின்றானை அவ்வணிகனோடு அனுப்பிவிட்டு அச் சோலையில் உள்ள பொய்கைக் கரையை அணுகினான்.

நீருக்குள் தன்னிழலைக் கண்ட பெடையன்னம் சேவ லோடு ஊடி நின்றது. "செய்தவறில்லேன்; சினவாதி" என்று இரந்து வேண்டி ஊடல் தீர்த்துக் கூடியது சேவல். இவற்றைக் கண்ட சீவகன், தத்தையைத் தான் நோக்கும் போது அவள் மார்பை நோக்கிக் குனிந்து நின்றதையும், தான் பலவுஞ் சொல்லிப் பிழையின்மையைத் தெரிவித்த போது மீண்டும் பழைய ஒன்றனையே சொல்லி நின்றதை யும் எண்ணிக் கலங்கினான். தன் பிரிவிற்கு வருந்தித் தத்தை என்னிலை யானாளோ என்று மயங்கினான். பின்னர்ப் பொய்கை

யின் இனிய காட்சியால் யாவற்றையும் மறந்து மகிழ்ந்திருந்தான் சீவகன். கனியடிக்க வந்த காவலகுமாரன் பலமுறையும் அம்பெய்தும் கனி வீழாதாயிற்று. சீவகன் ஓரம்பால் அக்கனியினை வீழச் செய்தான். விற்றொழிலால் இராமனிலும் வல்லான் இவன், என உணர்ந்த அரசிளங்குமாரன் சீவகனைத் தன் தந்தைபால் அழைத்துச் சென்றான். வழி வந்த இளைப்பினைப் போக்கி விசயன் தந்தை தடமித்தனுக்கு இவனது சிறப்புக்களைச் சொன்னான். வேந்தன், "நல்லோனே? விசயன் விற்றிறலொன்றும் அறியாதவன்; என்னுடைய புதல்வர் ஏனைய நால்வரும் கல்வி கேள்வியின்றியே வளர்கின்றனர். அக்குறைகளைப் போக்குமாறு நின்னை வேண்டினேன்?" என்று சொன்னான். சீவகனும் இணங்கி அவ்வாறே செய்துவந்தான்.

ஒருநாள் மாலைக்காலத்தில் சீவகன் கைவன்மை தோன்றமாலையும்பந்தும் கட்டிப் பனிநீரும்புழுகும் முதலிய தெளித்து வைத்துக்கொண் டிருந்தான். கனகமாலையின் தோழி தொழில் செய்யும் குறளி ஒருத்தி வந்து, "எம் தலைவிக்கு நனியும் ஏற்றன இவை" என்று வேண்டிப் பெற்றுத் தலைவிக்குக் கொடுத்தாள். அதனை ஏற்ற பூங்குழலாள், "மனமகிழ மகளிர் ஆடும்நாடகம் காணாதார் வாழ்க்கை கல்லாத வேடர் வாழ்க்கையினை ஒத்ததாகும்; கணவன் தோளில் துஞ்சப்பெறாத மகளிர் வாழ்வு மணமில்லாத மலர் போன்றது" என்று பலவும் எழுதியிருந்தவற்றை வாசித்துக் கண்டாள்; சீவகன்மேற் பெருகிய வேட்கையளாய் மெலிவுற்றாள். மாலைக்காலமும், மதிவெண்ணிலவும், கூவும் குயிலும் இரவும் எல்லாம் அவளுயிரை உண்ண வரும் கூற்றுத்தொகைபோ லிருந்தன. தானும் ஒரு முடங்கல்வரைவாளாய் அதனைத் தோழியினிடம் தந்து சீவகற் கனுப்பி

னாள். கனகமாலை படும் துன்பத்தையும் எடுத்துச் சொன்னாள்.

மன்னகுமரர் கலைகளெல்லாம் கற்று வல்லவராயினர். கணைவிடுத்தலும் விலக்கலும், அமர் கடத்தலும், தன்னை மறைத்தலும் முதலிய சிலைத் தொழிலை உணர்ந்தார்கள். காலுக்குள் மறைதலும், கைக்குள்ளே திரிதலும், வால் வழியே மறிதலும், தந்தத்திஞடு தத்துதலும் முதலிய யானைப் போரைக் கற்றூர்கள். தேர் செலுத்திப் போர் செய்யுமாறும், பயின்று தேர்ந்தனர். மன்னவன் முன்னர் மைந்தர் தம் போர்த்தொழில் வன்மையெல்லாம் தோன்றக் காட்டினர். "விசயனும் முருகனும் முதலியோர் வீரச் சிறப்பெல்லாம் ஒருங்கு வந்து சேர்ந்தனபோலும்?" என எண்ணி வியந்தனர் நகரமாந்தர். அரசனும் தன்னுடைய மக்களின் ஆக்கப்பாட்டினை மகிழ்ந்து நோக்கிச் "சீவகனைக் கொணர்மின்; அவனைச் சிறை செய்வேன்" என்ருன். காவலன் குறிப்புணராதார் "புதியனய் வந்தான் கல்வியில் வல்லனய குற்றத்தால் சிறைப்படுவான்போலும்" என்று மயங்கினர். மன்னவன், "களிறனைய தோன்ருல்! மண்ணும் வானும் வந்து கைகூடும் உயர் நெறியினைத் தந்தனை; இந்திரபதம் பெற்ருரிற் பெருந்திரு உடையனுனேன்; காளாய்! இதற்குக் கைம்மாறென்றும் காணேன்; என்மகள் நின் பாலாவாள்; இதனை எற்றுக் கொள்ளுதி" என்று மொழிந்தான். சீவகன் இணங்க, நன்னுளில் சிறப்பாக மணவினை முடிந்தது.

இவன் இவ்வாருகக்,காந்தருவதத்தை சீவகனைப் பிரிந்த நாள் தொட்டு வருந்திஞள். மதிமுகம் என்னும் வித்தை ஒன்ருல் சீவகன் செயலெல்லாம் தெரிந்துகொண் டிருந்தாள் தத்தை. தன்னையுள்ளானுப்ச் சென்ற இடங்கள்

தோறும் மணவாளப்பிள்ளையாகி எதிருற்ற மகளிரை யெல்லாம் மணந்து திரிகின்ற செயலை உணர்ந்திருந்தாள். "கவலையின்றி அவர் துறந்து செல்லவும் நாம் கைவளை நெகிழவும் கண்ணீர் சோரவும் வருத்தத்தைப் பெருக்குகின்றோம்; இஃதென்ன பேதைமை" என்று சிந்தித்திருந்தாள் அவள். நந்தட்டன் அவளைச் சென்று காண விரும்பி ஐந்துவில் தூரத்தே நின்று வணங்கினன். "அழகனே! வருக எனக் கூற மூன்று வில் தூரத்தே அணுகி அவள் திருவடியை நோக்கி நின்று, "புண்ணிய நம்பி சீவகன் இறந்தானேல் எரிகின்ற தழலுள் மூழ்குதல் அல்லது வருந்தி நோற்றல் செய்தல் கற்புடை மகளிர்கடன்; இவ்வாறு அணிகலன்கள் சுமந்திருந்த மகளிரை யான் கேட்டறியேனே" என்று சொன்னான். அண்ணல்பாற் கொண்ட அன்பினால் துன்பமுற்று நின்றானைக் கண்டு, "வேலேந்திய குருசிலோ நம்மை நினையானாய் மங்கல அணிகளோடு மண இன்பம் துய்த்து நிற்ப, யாம் வாடுவதெற்றுக்கு," என்று சொன்னாள். சொல்லித் தனது மையால் நந்தட்டன் முகத்தைத் தடவ சீவகன் இருக்குமிடத்தையும், கனகமாலையைப் புணர்ந்துகொண்டிருப்பதையும் கண்டான். பின்னும் வணங்கி, என் ஐயனை நாடிச் செல்கின்றேன். நின் அருள் ஈதல் வேண்டும் என்று வேண்டினான். தத்தைதன் விச்சை வன்மையால் நந்தட்டனை ஏமமாபுரத்து மன்னவன் கோயிலுட் சேரச் செய்தாள்.

தனியே வந்து நின்றானை விசயன் கண்டு யார் என வினவ, நந்தட்டன் மறுமொழி கொடாது நின்றான். வசுந்தரி என்ற தோழி ஒருத்தி பூவும் நீரும் சந்தனமும் எடுத்துச் சென்றாள். நந்தட்டன் சீவகனைப் போன்ற தோற்றம் உடையனாதலால், சீவகனே இவ்வாறு வந்து கிடக்கின்றான் என

எண்ணிக் கனகமாலையிடம் விரையச் சென்றாள். சென்று, "மாலாய்! ஆண்டொருவரைக் கண்டேன்! சிவககாமியே இவ்வாறு வீழ்ந்து கிடக்குமாறு நீ செய்த தென்னை" என அறிய ஈண்டு வந்தேன்; இங்கேயும் அவருள்ளாராதலால் இஃதென்ன மாயமோ என்றாள். வந்திருப்போன் நந்தட்டனாதல் வேண்டுமெனச் சிவகன் உணர்ந்தான். விரைந்து சென்று மகிழ்ச்சி தழைத்த முகத்தோடு அவனை அடைந்தான். தருமனைப் பிரிந்து கண்ட தனஞ்சயன் போலத் தம்பியும் தனது கைகூப்பித் தொழுது வீழ்ந்தான். வீழ்ந்தவனை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு மும்முறை தழுவிப் பிரிவு வருத்தமெல்லாம் தீர்ந்தான்.

என்னுறு நிலைமை யோரா தெரியுறு தளிரின் வாடிப்
பொன்னுறு மேனி கன்றிப் போயினீர் பொறியி லாதேன்
முன்னுற இதனை ஓரேன் மூரிப்பே ரோக்க லெல்லாம்
பின்னுறு பரிவு செய்தேன் பேதையேன் கவலல் என்றான்.

ஆக்கமும் கேடு முற்றீர் அடிகளே அல்லீர் மேலைப்
பூக்கம ழலங்கன் மாலைப் புட்கொடி யாற்கும் உண்டே
வீக்குவார் முலையி னார்போல் வெய்துயிர்த் தருகி னைய
நோக்கினீ ரென்னை என்றான் நுதியழற் குட்டம் ஒப்பான்.

தாமரை போன்ற கண்களிலிருந்து நீர் பெருக அழுகின்ற தம்பியின் கண்ணீரைத் துடைத்து, வருந்தாதே என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு கனகமாலையின் கோயில் சென்றான். குமரன் யாரோ என்னுங் குறிப்பினால் கொழுநனைக் கனகமாலை நோக்க, 'கற்புடையாய்! நின் மைத்துனனாகும்' என்றான். "இத்தகைய இளங்கிளையாய சுற்றத்தாரை யான் எழுபிறப்பும் பெறுவேனாக" என்று சொல்லி அவற்கு விருந்து செய்தாள். பின்னர் ஓரிடத்தே சிவகன் இருந்து தான் பிரிந்த பின்னர் நகரத்துற்ற தெல்லாம் வினவிக் கேட்டான். "ஐயனே! நீ இறந்தனை என்பது

கேட்டுச் சீற்றத்தாற் கொதித்தெழுந்து நாங்களெல்லாம் கட்டியங்காரனை வதைக்கப் புறப்பட்டபோது ஒருவன் பாடிய பாட்டால் நீர் பிழைத்தவா றுணர்ந்து சிறிதமைதி யுற்றேம். யான் குணமாலையி னில்லம் சென்றேன். எனக்கு விருந்திட்டு நின்று, 'அடிகளையின்றித் தனியே உண்ணும் மனவன்மை உடையிரானீர்; இது தக்கதாமோ' என்று கசிந்துருகினள். சீவகனைத் தேடிக் கண்டு திருவடி தொழுதல், இன்றேல் இவ்வுயிரை மாய்த்துக்கோடல் என்ற இவ்விரண்டி லொன்று செய்வதாய்த் துணிந்து புறப்பட்டேன்; தத்தை யினில்லம் சேர்ந்து கருத்தினைத் தெரிவிக்க, அவள் என்னை ஈண்டு வந்து சேரச் செய்தாள்" என்று கூறி "அடிகேள்! நீர் வந்தவாறு கூறுவீராக" என்று கேட்டான். சீவகனும் நடந்தவற்றைச் சொன்னான். சீவகனது வென்றிச் சிறப்பும், மணச் சிறப்பும் முதலிய எல்லாம் குரவராயினோர் கேட்கப் பெற்றிலரே என்று நந்தட்டன் இரங்கினான். ஐய! பொருளைப் பெறுதலும், பகைவரைக் கோறலும் எளிது. நண்பர், பெண்டிர், மக்கள் முதலியோரை யாண்டிருந்தும் பெறுதல் கூடும். உடன்பிறப்பைமட்டும் புதியதாக ஆக்கிக் கோடல் இயலாததொன்று; எம்பியாகிய நின்னைப் பெற்ற எனக்குக் குறை யொன்றும் இல்லை" என்று தேற்றினான்.

சீவகன் தோழன்மார் நால்வகைச் சேனைகளோடும் புறப்பட்டு ஏமமாபுரத்திற்கு வழிக்கொண்டனர். நெடுந்தூரம் கடந்த பின்னர் மாதவர் பள்ளி யொன்றில் தங்கினர். குளிர்ந்த பூஞ்சோலையைக் கண்டு, அதனுள்ளே சென்று, பொழில்வளம் நுகர்ந்து இளைப்பாறினர். ஆண்டுச் செந்நிறந் தோய்ந்த துகிலோடு மைந்தனைப் பிரிந்த வருத்தமும், மன்னனை இழந்த துன்பமும் மனத்தை வாட்டக் கண் கலுழ்ந்து வாமனடியில் மலர்களைச் சூடி வழுத்தித் தவமாதர்

ஒருவர் மறைய நின்றார். அவரைக் கண்டு வந்த காரியம் யாதென்று தோழன்மார் வினவினர். "எங்குலமும் எம் வரவும் சொல்லுதல் எளிதன்று; நுங்கள் வரவைச் சொல்லு வீர்'' என்றார் அம்மாதர். தங்கள் வரலாற்றைச் சொல்லிச் சிவகனுக்கு நேர்ந்ததைச் சொல்லுவாராய்க் "கட்டியங் காரன் சிவகனைக் கயிற்றாற் பிணித்துக் கொல்ல" என்று சொல்லி முடிப்பதற்குள் கேட்ட மாதர் நெஞ்சம் பதறித் துடித்து வீழ்ந்தார். இடிவீழ்ந்த நாகம்போல நடுங்கி வீழ்ந்த தவ மாதரைச் சந்தனமும் குளிர் புனலும் தெளித்து மயக்கத்தை மாற்றத், தெளிந்தவர் மீண்டும் வாய்விட்டு அரற் றினர். "எம்மானே! மயிலூர்க்துபோய்ப் புறங்காட்டுள் வீழ்ந்தேற்குத் துணையாகிப் பிறந்த நீ மறைந்தனையோ! பெற்ற கடனொழிய வளர்த்த நின் தாய் சுநந்தை வருத்தங் காண்பாயோ! மன்னவன் கூறிய கனவின் பயனை நம்பி உயிர் தாங்கி நின்றேன். என்குறையைக் கேளாது மறைந் தனையே! கோவாகி நீ குடியோம்பி நின்று போ அம்மா என்று சொல்லப் பிரிந்து செல்ல வேண்டிய நான் நின்பிரி வைக் கேட்டேனே! அந்தோ மகனே! நீ தீதின்றி யிருத்தலை வந்தார் வாய்க் கேட்டு மகிழ்ந்திருந்தேன்; இனி நின்னைக் காணேனே'' என்று புலம்பினாள். பாங்காராயினா ரெல் லாம் வெய்துயிர்த்துக் கண்ணீர் பெருக்கி, இன்னதென உணராராய் ஒருவரை ஒருவர் முகம் நோக்கி மருண்டனர்.

சிவகன் தெய்வத்தாற் பிழைத்ததைக் கூறித் தவ மாதர் விசையை என்பதையும் உணர்ந்தனர். விசையை அதனைக் கேட்டு மகிழ்ந்து, "பரணி நாளிற் பிறந்தார் பகையை மதியார் என்று கூறுவதுண்டு. அவ்வாறே எமது காவலன் பகையை மதியானாய், அமைச்சர் சொல்லையும் கொள்ளானாய், இரணியன் போலக் கேடுற்றழிந்தான்;

புகழ் கெட்ட விசையை யென்ற யான் பட்ட வெல்லாம் எம் முடைய நம்பிக்குச் சொல்லி அவனை யான் காணத் தம்மின்" என்று கூறினள். மற்று, பாம்பின் செலவும், மகளிர் நெஞ்சும், பகைவர் நெஞ்சம் ஒரு நெறிப்பட்டன அல்ல. ஆதலால் இவற்றைச் சீவகற் கல்லது பிறர் யார்க்கும் கூறுதொழிமின்" என்றும் கூறினள். ஒரு திங்கள் எல்லைக்குள் சொல்லியவாறு செய்வதாகக் கூறித் தோழர் சென்றனர்.

ஏமமாபுரத்தின் புறத்தே வந்து தங்கிச் சீவகனை எவ்வாறு காண்பதெனச் சிந்தித்தனர். ஆனிரையைக் கவர்வோமாயின் மன்னவர்க்குத் துணையாய் ஆனிரையை மீட்கச் சீவகனும் வருவான். அதன் வழியே காணலாம், என எண்ணினர். புத்திசேனன் என்பான் "ஐயன்மீர்! எண்ணித் துணியத் தக்கது இக்கருமம். நம்ஐயன் ஈண்டில்லையாயின் ஆனிரை மீட்குங்காலத்து யாம் வாளா திரும்பும்படி நேரும்; அது பழி தருவதாயிருக்கும்; அன்றிப் போர் செய்து கொன்று குவித்தலும் காரணமின்றித் தீது பெருக்கியதாகும் ஆதலால் முன்னதாகச் சீவகன் இருத்தலை ஒற்றர் மூலம் அறிந்த பின்னராயின் இது செய்யத்தக்க"தென்றான். ஒற்றிக்காணச்சென்ற மூவர் ஓடிவந்து "மதம் பிடித்து யாருக்கும் அடங்காது பிளிறிக்கொண் டுலாவி நகரைக் கலக்கிய களிற்றினை அடக்கினன் சீவகன்; அவன் ஏவியவாறு பணிசெய்து நின்றது அவ்வேழம்; நகரமாந்தர் இதனைக் கண்டு தேவருலகத்துள்ளான் போலும் இப்பெருமகன் என வியந்து கை விரித்தனர்; இவற்றை யெங் கண்ணாரக் கண்டனம்" என்று கூறினர்.

உடனே எண்ணியவாறு ஆனிரையைக் கவர்ந்தனர். கோவலர் ஓடி முறையிட வாயிலரான் மன்னவனும் உணர்ந்தான். நந்தட்டனோடு உரையாடிக்கொண்டிருந்த சீவகற்கும் இது தெரிந்தது. போர்க்கோலம் கொண்டெழுந்து நின்று

"மன்னவ னிரைகொண்ட வலியாரை மடக்கி மன்னவனு டைய பொன்னவிர் கழலைப் பற்றி வணங்கச் செய்யேனேல் எனது பெயர் புகழ் உலகில் எவ்விடத்தும் சோராதொழிவ தாக" என்று கூறிச் சென்றான். சிவகனைக் கண்டதும் ஏனை யோரை விலக்கிப் பதுமுகன் சிலைவளைத்து நாணேற்றிப் பகழி தொடுத்தான். "மன்னவன் மகனாகிய நின்னைக் காணவந்த அடியரேம்'' என்று சொல்லுவதுபோலப் பகழி பின் முன்னாகச் சென்று அவன் திருவடியிலே வீழ்ந் தது. அதனைக் கண்டு பகையகத் திருப்பான் பதுமுகனே என்றறிந்து தூய துகிலினை வீசித் தன்படையினை விலக்கிச் சென்றான். தோழரெல்லாம் தொழுது வீழ்ந்தனர். கண்ணா லும், தோளாலும் இனிய சொல்லாலும் அவரவர்களை முறையே தழுவி ஆறுதல் செய்தான்.

எல்லோரையும் அழைத்துக்கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தான். சிவகன் நரமித்தனை வணங்கிய பின்னர் அவரெல்லாம் தனக்குத் தோழன்மார் என்பதையும் அறிவித்தான். கனகமாலைக்கும் அவ்வாறே அறிவித்தான். இவர்கட்கும் கனகமாலை விருந்து செய்தாள். "ஆனிரை கொண்ட கள்வ ரல்லரோ இவர்கள். இவர்களை நன்கு ஓறுத் தல் வேண்டும்'' என்று மைத்துனக் கேண்மைக்கேற்ப நகை யாடி விருந்தூட்டினாள் நங்கை.

இவை யெல்லாம் முடிந்தபின்னர், நந்தட்டன் மூலம் தத்தை அனுப்பிய ஓலையைப் பொறி நீக்கிப் பார்த்தான் சிவகன். அடிகள் அருளிக் காண்க. தத்தைசிற்றடிச்சி மலரடிக் கீழ் வீழ்ந்தேன்! எம் மன்னன் எமக்கு ஒருவாற்றானும் குறை யின்றாக எப்பொருளும் தந்தனுப்பினான்; நரன் என்பான் ஈண்டு வந்தானை மறைபவைத்துப், பிணிபட்டுச் சென்ற வற்றை மறைத்து எமமாபுரத்தே இருப்பதாகச் சொல்லியனு

ப்பியுள்ளேன்; நமக்கு நேர்ந்த இப்பழி என்னுடைய தந்தை நாட்டினும் பரந்து தோன்றுதலை அஞ்சி "இவற்றை யன்றிப் பிற சொல்லாதி" எனச் சூளுறவு வாங்கி யனுப்பினேன்; பழி நீங்கிப் புகழ் பரத்தற்குரியவற்றைச் செய்யாது மங்கையரைக் காணும் இடமெல்லாம் மணஞ்செய்து வாழ்தல் என்ன பயனைத் தரும்; அன்றியும் எங்கை குணமாலை நுமது பிரிவால் இரவும் பகலும் அறியாளாய்க் கையாறு கொண்டுள்ளாள்; நாளைவரும் நாளைவரும் என்று சொல்லித் தேற்றியானும் செயலழிந்தேன். எஞ்ஞான்றும் எங் நெஞ்சகத்துள் நீராதலால் நினைத்தலில்லேன்; மீண்டும் நும் திருவடிகளைப் போற்றினேன்" என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்தது. அதனைப் படித்துத் தலைபனைத்து நின்ற சீவகனை நோக்கி மன்னவன் தேவி விசையை தாம் கண்டவற்றைச் சொன்னார். கேட்டவளவில் கண்ணீர் பெருகி மார்பை நனைப்பச் சீவகன் அடிகளிருந்த திசை நோக்கித் தொழுது காண வேண்டும் எனப் புறப்பட்டான். நடமித்தன்பாற் சொல்லிக் கனகமாலைக்கும் பிரிவு சொல்லிக்கொண்டு அனைவரும் புறப்பட்டுப் போயினர்.

---

௮. விமலையா ரிலம்பகம்

போம்போது நந்தட்டன் பதுமுகனை நோக்கி, "வீர! மாசேறி மறைந்து கிடந்த பெரிய மணி ஒன்றனை உலகறிய வெளியாக்கினை! நின் கண்ணி வாழ்வதாக; இனிப் பகைவரை அறுத்து முடியினை அண்ணற்குத் தருதல் கடன்; தொழுத கையினுள்ளும், மணிபதித்த முடியினுள்ளும், அழுதகண்ணீர் அணிகலம் முதலியவற்றினுள்ளும் படை

மறைந்திருக்கு மாதலால் பகைவரை எப்பொருட்டும் தேறித் தெளிதல் கூடாது; மகளிரைக் கூடுவான்தானும் பூண்களைந்து முதியோரால் வஞ்சமில்லார் என்பதை ஆராய்ந்து நீராட்டிய பின்னர்க் கூடுதல் வேண்டும்! பூமாலை முதலியவற்றில் ஐயம் உண்டாயின் பறவைகளின் கண்ணி லும், சேவலின் முகத்திலும் உறுத்தி வேறின்மை கண்ட பின் இடுக; தண்ணீரிலும், சோற்றிலும் தீங்கு வாராமற் பாதுகாத்தற்குக் கருங்குரங்கிற்கு இட்டு ஆய்க; அஞ்சனக் கோலுக்குப் பற்றாத நாகம் மலைபோன்ற யானையும் புலம்பி வீழுமாறு செய்தலைக் காண்கின்றோம்; ஆதலால் பகையைச் சிறிதென் றெள்ளுதல் தகாது; பல்லிபோல் விடாது சூழ்ந் தும், தாய்போல வேண்டுவன செய்தும், மாதவர்போலத் தவம் சீலம் முதலியவற்றைத் தந்தும், ஆமைபோலப் பொறியடங்க நின்றும், பகைவர்போல மிகுதிக்கண் மேற் சென்றிடித்தும், மனையாள்போல இனிய அடிசில்களைத் தேடிக் கொடுத்தும் சீவகனைக் காத்தல்வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே சென்றான்.

யாவரும் விசையை வாழும் தவப் பள்ளியினையுடைய மலைச்சாரலை அடைந்தார்கள். மயிலினின் றிழியும் முருகனைப் போல மாவினின் றிழிந்தான் சீவகன். பதுமுகன் சென்று சீவகன் வந்தான், என்று விசையைக்குச் சொன்னான். “என் ஐயன் எங்குள்ளான்'' என விழிபரப்பிக் கேட்டாள் விசையை. ‘அடியனேன் ஈண்டுள்ளேன்’ எனச் சொல்லிக் கைகூப்பித் தொழுது திருவடிக்கண் வீழ்ந்தான் சீவகன். சிறுவனைக் கண்ட ஞான்றே நீர் பெருக்கின கண்கள்; பால் சுரந்தன மார்பம்; “என் களிறே வருக” என்று தழுவி நின்றாள். பெற்ற நாள்தொட்டுக் காணாது கண்ட பெருங்காதல் கரையின் றிப் பொங்கியதால், பருவமும் சிந்தியாளாய் மார்பாரத்

தழுவிக்கொண்டு, நல்வினை செய்திலாதேன் ஏந்தி வளர்க்காத வருத்தம் இன்று தீர்ந்தேன்" என்றாள். மற்றும்:

வாட்டிறற் குருசில் தன்னை வானம ரகத்தன் நீத்துக்
காட்டகத் தும்மை நீத்த கயத்தியேற் காண வந்தீர்
சேட்டிளம் பரிதி மார்பிற் சீவக சாமி யீரே
ஊட்டரக் குண்ட செந்தா மரையடி நோவ வென்றாள்.

சீவகன் தானும் கலங்குவானாய், "அன்னையீரே! எனது வெற்றி கெடவும், நட்பாயினோர் நையவும், ஈன்றவராகிய நீரெல்லாம் வருத்தத்தே தங்கவும் தீவினையேன் உளனாயினேன்; பட்டொழிதலும் இன்றித் தழைத்துத் தளிர்த்தலும் இன்றி, இடையின் வெட்டின மரம் நிற்குமாறுபோல யானும் உயிர் கொண்டு திரிகின்றேன்; இனியும் துன்பத் தழுங்க வேண்டா; எனக்கு அருள் செய்வீராக" என்று கூறிப் புலம்பினான். விசையை, "சீவக! நினக்குத்தாய் யானல்லேன்; தந்தை சச்சந்தனும் அல்லன்; பெற்ற கடன் எமக்கொழிய நல்வினைப் பயத்தால் நின்னை வளர்த்துப் புரந்த சுநந்தையும் கந்துகனுமே நினக்குத் தாய் தந்தையர்; இந்நின்ற நந்தட்டனே என்னுடைய மகனாவான்" என்றுசொல்லி வருக என அவனை அழைத்து அணைத்துக்கொண்டு முகக் திருத்தி இனியன கூறி மகிழ்வித்தாள். இவ்வாறு ஆறு நாட்கள் கழிந்தன.

ஒருநாள் சீவகன் முதலிய காரியக்காரரோடு தனியே யிருந்து விசையை சில செய்திகளைப்பற்றிச் சிந்தித்தாள். "நம்பி! வலிமிக்க மன்னவர் மகளை மணந்துகொண்டது நல்லதொரு காரியம்; முள்ளைக்கொண்டு முள்ளைக் களையுமாறுபோலப் பகைவரைக் கொண்டே பகையறுத்தலும், பகைவர்க்குத் துணையாயினாரைப் பிரித்து நம்பால் நட்பாக்கிக் கோடலும், நீதி நிலைக்கவும், அறம் தழைக்கவும், பொருள் பெருகவும் நாட்டைக் காத்தலும் அரசர் செய்ய

வேண்டிய காரியங்களாகும்; பொருளாற் படைபெருகப் படையால் நில எல்லை பெருகப் பின்னும் பெரும் பொருளாத லுண்டு; இவையெல்லாம் நீ உணராதன அல்லவே; நம் ஆணைவழி நிற்கும் நாடின்றிக் கைப்பொருளும் ஒன்றின்றி இருக்கின்றோம்; நெறிகாட்டித் துணை செய்யும் தக்க அமைச் சரும் இல்லையே; என் செயக் கருதியுள்ளாய் அதனைச் சொல்லுதி'' என்று விசையை வினவினாள்.

சீவகன், "சிங்க ஏறு நரியொடு பொருதல் இல்லை; யான் கட்டியங்காரனோடு பொருதலும் இல்லை; கட்டியங் காரன் பாம்பாயின் நம்பிநந்தன் கலுழனாவான்; அதுபற் றிக் கவல வேண்டா'' என்று கூறினான். "அத்துணை வல் லமை உள்ளானோ'' என் மைந்தன் எனச் சொல்லி அன் பாற் குளிர நோக்கி அவனது மலைபோன்ற தோள்கள் நிலத் தைப் பாதுகாத்தல் செய்வன'' என்று மகிழ்ந்தாள். பின் னர்ப், பகற்காலத்தே எண்ணிறந்த கூகையினைக் காக்கை தானே கொன்றதன்றோ; களர்நிலத்துச் சிங்கவேறு நரிவலைப் பட்டதன்றோ; காலமும் இடமும் பிழைபற எண்ணித் துணிந்து கருமம் இயற்றுவீராக'' என்று சொன்னாள். பதுமுகன், "தாயே! எம் சீவகசாமி ஞாயிறாக, பகைவர் இருளும் பனியுமாகி விடுவர்; வலியாற் குறைவின்றி உள் ளோம்; நுமது அருளிப்பாட்டை நோக்குகின்றோம்'' என்று சொன்னான். வெற்றி பெறுகுமாறு தாயும் வேண்டச் சீவ கன், தான் இராசமாபுரம் சென்று கந்துகன் முதலியோர்க் குத் தனதுண்மை காட்டி, மறுநாள் வருவதாகச் சொல்லி விசையைக்குக் காவலாக ஒரு படையை அனுப்பிவிட்டுப் புறப்பட்டான்.

சேனையோடு இராசமாபுரத்தின் பாங்கருள்ள ஒரு சோலையில் தங்கியிருந்தனர். சீவகன் வேற்றுருக்கொண்டு

நகர்காணச் சென்றான். ஒரு பாவை பூங்குழலிற் கோதை யும் மாலையும் பொங்க, முத்துவடங்கள் கொங்கையைப் புடைப்ப, குழையும் ஓலையும் மின்போல ஒளிவிட, மேகலை யும் சிலம்பும் புலம்பப் பந்தாடினாள். ஐந்து பந்துகளைக் கையிற்கொண்டு முறைமை குலையாமல் வரிசையாக வரும் படி ஆடினாள் அவள். மாலையின் மறைந்த பந்து கையில் வரும்படியும், குழற்புறத்தவாகியது முகத்தே வரும்படியும், உச்சியிற்போன பந்து கீழே யாம்படியும், மயிலைப்போலப் பொங்கி ஆடிய தோற்றம் காண்பார் உள்ளத்தைப் பிணிப் பதா யிருந்தது. நெற்றியிலிட்ட சுட்டி வடிவினதாகிய சந்தனமும், மார்பிற் பூசியிருந்த குங்குமமும் முதலியவை பந்தாடிய வியர்வையினாற் கரைந்துருகி வானவில் வீழ் வதுபோல வீழ்ந்தன. அங்ஙனம் ஆடியபோது ஒரு பந்து பாய்ந்து தெருவகத்தே வந்து வீழ்ந்தது. துகில் நெகிழ்த லால் மேகலை தோன்ற, மாலை மார்பிடத்தே புரள வீழ்ந்த பந்தின் மேலே வேட்கை செலுத்திப் பூங்கொடிபோல் நின்று நோக்கினாள். வீதிவழியே நடந்துசென்ற சீவகனை அவ்விடத்தே கண்டாள். அவனது தோற்றம் தன் உள் ளத்தைக் கவர இமையாது விழிபரப்பிக் காண்பாளாய் நாணமும் நிறையும் மெல்ல மறையக் காதல் பொங்கிப் பெருக நின்றாள். நிறையுள்ள துணையும் காதல் சிறிதும் இல்லையாய்க் காதல் உள்ள துணையும் நிறை சிறிதும் இல் லையாகின்றது. காதலை மறைப்போமென எண்ணினாலும் பசப்புத்தானே பறை சாற்றுகின்றது. இங்ஙனங் கூறி நெஞ்சு கலங்கி நிறையழிய நின்றாளைக் கண்ட சீவகனும் வேட்கை நோய் தலைக்கேறப்பட்டான். மூளாத்தீப்போல் வேட்கை உள்ளே கனற்றப் புழுங்குகின்றவன், “கடல்போ லகன்ற என் அறிவை யெல்லாம் சூறையாடி உள்ளமழித்த அவள் கண்ணீர்மையும் பெண்ணீர்மையும் என்னை வருத்

தவே தோன்றியபோலும்; கருங்குழலும், செவ்வாயும், கண் மலரும் காதும், பூணணிந்த மார்பும் எல்லாம் உயிரைக் கொல்ல எழுந்த கூற்றங்களாகும்; குண்டலமும் தோடும் அசையச், செவ்வாயில் வெண்பற்கள் விளங்கக் கூந்தல் தாழக் கழுத்தைச் சாய்த்துப் பார்த்த பார்வை எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுகிறதே; இவளை ஒரு கணப்பொழுதேனும் கூடியன்றி வாழமாட்டேன் போலும் என்று புலம்பினான்.

சாகரதத்தன் என்னும் வணிகன் அன்றுமட்டும் ஆறு கோடி பொன்னுக்குத் தன் பொருளை விற்றான். அவன் மகளே பந்தாடிய பாவை; விமலை என்ற பெயருடையாள். நெடுநாள் தன்பொருள் விலைபெறாது இருந்தமைக்கு வருந்தி வணிகன் நிமித்திகரைக் கேட்க, "நின் மகட்குரிய காதலன் அவளைக் காணும்நாளில் நின் பொருளெல்லாம் விலைபோகும்" எனக் கூறியிருந்தனர். இன்று தன்பொருள் விற்றமையால் மருகன் வந்துவிட்டான்என எண்ணினான். சீவகனை வணிகன் அழைத்துச் சென்று வரலாற்றினைச் சொல்லித் தன் மகள் விமலையை மணமுடித்து வைத்தான். அவளோடு கூடி மகிழ்ந்திருந்து தன் தோழரைக் கண்டு வரவேண்டுமென்று சொல்லிச் சீவகன் பிரிந்தான்.

---

௯. சுரமஞ்சரியாரிலம்பகம்

சோலையுள்ளிருந்த தோழன்மாரைச் சீவகன் கண்டு விமலையின் மணப்பேற்றினைச் சொன்னான். "தாய் தந்தையர் விரும்பித் தக்கார்க்கு மணமுடித்தபின் அம்மணாளர்பால் நீங்காத அன்புடையவராய் ஒழுகுதலே குடிப்பிறந்த மகளிர் செயல்; அங்ஙனமன்றி நல்லார் பொல்லாரை அறியாது

கண்டார்க்கு நெஞ்சழியும் மகளிர் நட்பு விழுமியதாமோ" என்று நகையாடற்பொருட்டுப் புத்திசேனன் கூறினான். சீவகன், "அஃதன்று உண்மை; அழகு மிக்காரைக் கொடாதே தம்மில்லத்திலேயே வைத்திருத்தல் பாவமும் பழியும் தருவதாகும்; ஆதலால் அவராலேயே விரும்பப் பட்டார்க்குக் கொடுத்துத் தம் பாரங்கழித்து இளைப்புத் தீர்த்துவிடுதல் குடிப்பிறந்து பழி நாணுவார்க்குரிய செய லாகும்; அவ்வாறே இம்மணவினை முடிந்தது" என்று மறுமொழி தந்தான்.

தோழர் சீவகனை விளித்து, "நம்பி! புக்க ஊரெல்லாம் புதுமணம் செய்து வருகின்றனை; ஆயினும் இந்நகரத்து ஒரு மடந்தை உள்ளாள்; ஆடவரைக் காணவும் ஒருப்படா ளாய்க் காமனே எனினும் கண்ணால் நோக்காளாய் ஆடவர் பெயரைக் கேட்கவே உயிர் போமென்று சொல்லுகின்றாள் அவள்; நின் வல்லபத்தால் அவளை மணந்துகொள்வை யாயின் நின்னிற் சிறந்தார் இம்மாநிலத்தில் இல்லையாதல் தெளித்தனையாவாய்" எனப் புகன்றனர். "நீர் கூறிய சா மையை மயக்கமுறுத்தாதே விடுவேனாயின் அன்பில்லா மங்கையரைக் கூடிய தீயனாக யான்" என வஞ்சினங் கூறிப் புத்திசேனனை மறுநாள் காமன் படிவத்தின்பின் மறைந் திருக்கச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். சீவகன், பலராலும் புகழ்ந்து சொல்லப்பட்ட அம்மடந்தையின் வடிவு இத் தன்மைத்தா யிருக்குமோ என்று தானாக ஒரு வடிவத்தை உருவகஞ்செய்து பார்த்தான். முதிய அந்தணன் வடிவத் தோடு அவளது காவல்மாடஞ் செல்லக் கருதினான்.

பாம்பு உரித்த தோல்போலச் சுருக்கமும் பளபளப்பும் உடையதாயிருந்தது மேனி. நாணேற்றிய வில்போல வளைந்த யாக்கையின்மேல் பின்னிக் கிடந்தன முப்புரி நூல்கள்.

நரைத்த உடம்பிடத்தே நுண்ணிதாய்க் கிழிந்த ஆடை யுடுத்திருந்தான். கைத்தண்டுன்றிக் குடையேந்தித் தளர்ந்த நடையோடும் வளைந்து பார்க்கும் பார்வையோடும் மூப்பின் மிகுதியாற் கண்டார் அஞ்சுமாறு நடந்து சென்றான். பொய் வடிவத்தோடு ஒரு பொருளைப் பற்றவேண்டுமென்ற வேட்கையோடு செல்வதால் பேயுமாயினான் சிவகன். இவ்வாறு சென்று சுரமை வாழுமிடத்தின் வாயிற்கடை சேர்ந்தான். கண்டாரெல்லாம் கையினாற் றொழுது "பைய நடந்து செல்லுதி முதியோனே" என்று கூறினர்.

சுரமையின் தோழியரான மகளிர் இவனைக் கண்டு "இங்கே நீர் வந்தது நுமக்கு ஏதப்பாடு தருவதொன்று. ஆதலால் இவ்விடத்தைக் கடந்து செல்லுதிர்" என்றனர். சிலர் இவனை அச்சுறுத்தி அகற்ற முயன்றனர். மற்றுஞ் சிலர், "முதியவரான இவ்வேதியரின் மனம் நோவ ஒன்றும் உரையன்மின்; அது பாவமாகும்! தலைவியின் கருத்தறிந்த பின்னர்த் தக்கது செய்வோம்" என்றனர். சுரமையிடம் சென்று, "மெல்லியலாய்! ஒரு பார்ப்பார் ஈண்டு வந்துளார்; அவர் தானும் மிகவும் பெரிதாய மூப்போடே வந்துள்ளாராதலின் யாதுஞ் செயலின்றி வந்தேம்; அவரை அகற்றிக் காண்போமெனின் அதற்குள் இறந்துபடுவார் போலே தளர்கின்றார்; இனி நாங்கள் செய்யத்தக்கதொன்று சொல்லு" என்றனர் தோழிமார். மயில்போலக் கிழிறங்கி வந்து சுரமை வேதியரைப் பார்த்து,

வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட
அந்தில்அதி லுயபயன் என்னைமொழி கென்றான்
முந்திநலி கின்றமுது மூப்பொழியும் என்றான்.

நறவிரிய சாயகுழ லாள்பெரிது நக்குப்
பிறருமுள ரோபெருநர் பேணிமொழி கென்னத்
துறைபறிந்து சேர்ந்துதொழு தாடூரில் லென்றாற்கு
அறிதிர்ப்பிற நீவிரென ஐயமில என்றான்.

இவற்றைக்கேட்டுச் செத்த மரம் பெருமழைபால் உயிர் பெறும் என்கின்ற இவர் பித்தர்போலும் என்று சுரமை கருதினாள். முது பார்ப்பான், "கோல்வளையீர்! மூப்பின் மிகுதியேயன்றிப் பசியின் மிகுதியும் என்னைக் கொடுமை செய்கின்றது; எனது பசி தீரச் சமைத்த உணவினைத் தாரீரோ" என்று கேட்டான்.

கேட்டவளை உள்ளழைத்துச் சென்று நறும்புனலாற் குளிர ஆட்டி வெண்டுகிலளித்துப் பொன்னூல் யாத்துப் பவித்திரமுந் தந்து தவிசின்மேலே இருத்தினாள். அறுசுவை அடிசிலைப் பொற்றட்டிலேந்தி ஊட்ட, இதுவரை யாண்டுங் காணாத சுவை மிக்க பொருள்களை இன்று பெற்றேனென்று வியந்து சொல்லி உண்டான். கரக நீரால் வாய் கழுவிக்கொண்டு வெற்றிலை பாக்கு முதலியவற்றை மணம் பெருகக் கவுளகத்தே அடக்கி நின்றான். இளைப்புத் தீர்ந்து கண் மலர இருந்தானைப் பார்த்து, "முதியோய்! நீர் வல்லதென்னோ" என்று வினவினாள். மறைந்த வேடங் கொண்டு தான் வந்திருத்தலைக் கருதி "மறை வல்லேன்" என்றான் அவன். வேதம் உணர்ந்ததைக் கூறினானாகச் சுரமை கருதி, "எதுவரையும் மறை பயின்றீர்" என்று கேட்க "எண்ணியது முடியும்வரை" என்றான். வேதம் முழுவதும் பயின்றவன் என்றெண்ணிச் சில சொல்லுமாறு வேண்டினாள். "அவையிற்றை மறந்துவிட்டேன்" என்று சொல்லிப் பேச்சை முடித்தான்.

இதற்குள் தன்னையறியாதே சிறி துறங்கி விழித்ததைக் கண்டு சுரமை நகைத்தாள். "கால்நோகக் கண் மயங்க

முதுமையினாலே துயின்றேன். இதிலென்ன புதுமை?" என்றான் முதியோன். தமக்குரிய அமளியிலே முதியோனைக் கிடத்தி உறங்கவைத்து மகளிர் வீணையைப் பாடினர். உள்ளே கிடந்தான் வந்தகாரியம் முடித்தலைக் கருதி இனிய பாட்டொன்றைப் பாடினான். கேட்ட மகளிர் "இவ்வாறு பாடவல்லான் சீவகனே" என்றனர். மகளிரெல்லாம் இடைவருந்த ஓடிச் சென்று பாடினானைக் கண்டார். மீண்டும் ஒரு பாட்டுப் பாடச்சொல்லி இசைக்கு மயங்கி நின்றனர். சுரமையும் பூங்கொடிபோல் நுடங்கிவந்து தோழியின் புறத்தே மறைந்து நின்று நகுதலைச் செய்தாள். "இவ்விடத்து இளமையுள்ளான் ஒருவனைக் கண்டீராயின் என் செய்வீர்" என்று முதியன் வினவ "எம்முடைய தோழி அவ்வளவிலே துன்புறுவாள். அவள் உயிரைப்போக்கும் கொடியதொரு காரியமாகும் அது" என்று கூறினர். மற்றும், 'தன் எண்ணத்தைச் சீவகன் பழித்த நாள் முதலாக ஆடவரை வெறுத்து நிற்கின்றாள் இந்நங்கை" என்று சொல்லினர். "அன்னவோ! இவட்குத் தீங்கு சூழ்ந்த சீவகன் மாய்ந்தான்போலும்" என்று முதியவன் கூற, மாதரா ரனைவரும் ஒருங்கு சீவகனை வாழ்த்தி அவன் உளனாதலையும் தத்தைபால் தாமறிந்த வகையையும் சொன்னார்.

மறுநாள் காமன் கோட்டம் சென்று இட முழந்தாளை நிலத்தே யூன்றி வலப்புறமாகத் தலைசாய்த்து நிலந்தோய வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று கையிரண்டுங் கூப்பித் தொழுது, "தாமரைக் கண்ணும் தமனியக் குழையும் மின்னக் காமனாரே! ஒரு வரம் வேண்டுதலையுடையேன்; அஃது யாதெனில் சீவக நம்பியை எனக்குரியனாகத் தருதல்; அங்ஙனம் தரின் பகழியும், சிலையும், தேரும், ஊரும் பொலி

யத் தருவேன்" என்று வேண்டினாள். உள்ளே மறைந்திருந்த புத்திசேனன் என்பான், "தேனொழுகும் மாலையாய்! நீ வேண்டியவாறே பெற்றாய். இங்கு நில்லாது போவாயாக" என்று தெய்வம் கூறுமாப்போலே கூறினான். தெய்வம் வரந் தந்ததை எண்ணி மகிழ்ச்சி பொங்க வருகின்றவள் சீவகன் வழியிலே நிற்கக் கண்டாள். இருவருள்ளமும் ஒன்றுபடக் கூடினர். கூடிக் கலைந்தபின் அணி முதலியவற்றைத் திருத்திச் சுரமஞ்சரியைச் செல்லவிட்டு நாளையே நின்னை மணப்பேன் என்று சொல்லிப் புறப்பட்டான். தன் சுற்றத்தாரை, மணம் பேசி வருவதற்காகச் சுரமஞ்சரியின் தாய்தந்தையர்பாற் சீவகன் போக்கினான். சுரமஞ்சரியின் பெற்றோர் இணங்கவும் மறுக்கவும் மாட்டாராய்ச் சூடுற்ற தேனை வாய்க் கொண்டார் உமிழவும் விழுங்கவும் மாட்டாராய் மயங்குமாறுபோல மயங்கினர். சுரமஞ்சரி தோழியர் மூலம் அறத்தொடு நின்று தன் கருத்தினை அறிவிக்க அவர்களும் மகிழ்ந்து மணமுடித்தனர். வடியும் கூடியும் மணமக்கள் இருவரும் மகிழ்ச்சியோடு இன்பம் துய்த்திருந்தனர்.

சுநந்தை சீவகன் வரவு நோக்கி வருந்திக்கொண்டிருந்தாள். யானையும் குதிரையும் வருந்தோறும், தேரோசை கேட்குந்தோறும் சீவகனே வருகின்றானென்று எண்ணி வெளியே வந்து பார்த்துப் பார்த்து அவனைக் காணாது கலங்கி நின்றாள். தாயையும், மனைவிமாரையும் காண விரும்பினனாகிச் சீவகன் சுரமஞ்சரியை விட்டுப் பிரிந்து சென்றான். சீவகனைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தனர். பெயரைச் சொன்னால் ஒற்றரால் தீங்கு வருமென் றெண்ணி, நம்பியோ நம்பியோ என்று அழுத கண்ணீரோடு அவனைச் சூழ்ந்துகொண்டு அவலந்தீர ஆற்றினர். கட்டியங்காரன் மகிழ்ச்சிக்குக் காரணம் இன்னதென உணர்ந்தால் சீவகனைக்

கொல்ல வழி தேடுவானென்றஞ்சித் தந்தை யிறந்த நாள் இன்று" என்று கூறி மகிழ்ந்தனர். பிரிவு வருத்தந் தீரத் தந்தையோடமர்ந்து சில பேச்சுப் பேசினான். எங்கை குண மாலையைச் சென்று காண்மின் என்று தந்தை சொன்னாள்.

சீவகனும் குணமாலை இல்லம் சேர்ந்தான். தீவினை யுடைய என்னைத் தீண்டாதீர் அடிகேள்! கணவர் கொலைப் பட நேர்ந்த நங்கை யான் பாவியேன்' என்று குணமாலை சீவகனை விலக்கினாள். "மாதராய்! கவலையுறாதே! நின் நல்வினை வலியினால்தான் யானுய்ந்தேன்" என்று கூறி அவள் அவலம் போக்கிக் குதிரை வாணிகனாக வேடம் பூண்டு இராசமாபுரத்தை நீங்கிச் சென்றான்.

க௦. மண்மக விலம்பகம்

சீவகனும் அவன் தோழன்மாரும் விதைய நாடு செல்லப் புறப்பட்டனர். சாறு வழியக் கரும்பினை அரைக்கும் ஆலை போலத் தேன் வழியக் குவளையை மென்றுகொண்டு வரும் எருமை தாமரையின் குடைபோன்ற இளைய இலைகளிலே பாலைச் சொரிய அன்னமும் நாரையும் அப்பாலால் தம் பார்ப்புக்களை வளர்க்கும் மருத நிலத்தையும், முத்துக்களை உமிழ்க்கி வெண்ணிறத்தோடு திரியும் சலஞ்சலங்களை நோக்கிப் பெடையன்ன மென்று கருதிச் சென்று தழுவி அன்மை கண்டு அன்னச் சேவல் நாணி ஒதுங்கும் நெய்தல் நிலத்தை யும், கொன்றை மரத்தின் நிழலில் பாம்பு உமிழ்ந்த மணிகள் ஒளிவிட ஆண் மானும் பெண் மானும் துயில்கொள்ள முல்லை மலரை ஊதி வண்டுகள் ஆரவாரிக்கும் முல்லை நிலத்

தையும், கங்கைநீர் பிறைக்கோட்டிலே வீழ ஒற்றைச் சடையை விரித்து நின்று ஏற்கும் இறைவனைப்போல அருவி நீர் மருப்பிலே வீழக் களிறு நின்றாடும் சாரலில் பெண்களைப் போலும் சாயலுள்ள மயில்கள் தங்கும் குறிஞ்சி நிலத்தை யும், வெம்மை மிகுதியால் நீரின்றி வறந்து பூக்களை உதிர்த்து நிற்கும் கடம்பின் கிளைகளிலிருந்து வலைப் போலும் சிவந்த கொண்டையினையுடைய ஆண் பருந்து பெண் பருந்தினை அழைக்க, நெருப்பை மிதித்துச் சென்றாலொத்த பாலை நிலத்தையும் கடந்து சென்றனர்.

தேன் கசியப் பழுத்து வீழ்ந்த பலாச்சுளையினையும், வாழைப் பழத்தினையும், சூல் நிறைந்த தன் பெண் ஞெண் டிற்குக் கொடுத்து வேட்கை நோயைத் தணித்து ஆண் ஞெண்டுகள் வழியினைத் திருத்தும் விதைய நாட்டிற்குச் சென்று தங்கள் வரவினை வேந்தற்குச் சொல்லிவிட்டனர். மன்னவனேவலால் நகர மாந்தரனைவரும் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைத்தனர். வாழையும் கமுகும் நட்டு மாடங்கள்தோறும் மணப்புகை எந்தினர். செவ்வாய் திறந்து தேனூற வாழ்த்தி மங்கையர்களெல்லாம் பூக்கள் தூவித் தொழுதனர். சீவகனைக் காணவேண்டும் என்னும் பரபரப்பால் மாடங்களின்மீதும் தெருக்களிலும் மங்கையர் கூட்டம் கூட்டமாகத் தொக்கு நின்றனர். ஆடவரும் பெண்டிரும் நெருங்கிச் செல்லுதலால் கோதையும் மாலையும் பின்னி வீழ்ந்தன. இவ்வாறு வாழ்த்தொலி பெருகக் கொடி நுடங்கும் வீதி வழியே நடந்து சென்று மன்னவன் கோயிலைச் சார்ந்தான் சீவகன். கோயிலிலுள்ள மங்கைய ரெல்லாம் சீவகனைக் கண்டு இத்தகைய ஒரு மகனைப் பெற் றது நமது நல்வினைப் பேறே என்று மகிழ்ந்தார். அந்நாட்டு மன்னவன் மகள் இலக்கணை என்பாள் சீவகனைக் கண்டாள் ;

சீவகனும் அவளைக் கண்டான். நெஞ்சு கலந்து இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர்.

சீவகன் மாடத்தினின் றிழிந்து வந்து மாமனாக விளங் கிய மன்னவ னடியில் வீழ்ந்து வணங்கினான். அவனும் மருமகனை விடாது தன் நெடிய தோளால் தழுவிக் கண் பெருக்கிய நீரால் மார்பு நனைய நின்றான். தன்னுடைய தங்கை துன்பமும், மைத்துனன் அழிவும், இளங்குரிசில் காடுமுந்து நலிவதும் அவனுக்கு ஆறாத் துயரத்தைத் தந்தன. தன்னை யும் அறியாது கண்ணீர் பெருக்கிக் கலங்கி மன்னவன் நிற்க, ஆண்டு நின்றா ரெல்லாம் தாமும் வருந்திக் கலங்கினர். பகை யறியாத அக்கோயில் சச்சந்தன் கேட்டிற்குக் கலுழ்ந்து அழுகுரல் மயங்க நின்றதைக் கண்டு தானே வந்து அந்நிலையைப் போக்கிச் செய்வது சிந்திக்கச் சொன் னான். சீவகன் மாமனுடன் சென்று அமைச்சரோ டிருந்து ஆகவேண்டுவனவற்றைச் சிந்திக்கலானான்.

கோவிந்தன் என்பான் விதையவேந்தனும் விசயை சோதரனும் ஆவான். “சச்சந்தன் இறந்த பின் அவனது நாட்டைப் பெறவேண்டும் என்ற ஆர்வம் கோவிந்தனுக்கு இருத்தல் இயல்பு; ஆதலால் கோவிந்தனைச் சூழ்ச்சியால் கொன்றுவிட்டோமாயின் நமக்குப் பகையாவார் ஒருவரும் இரார்” என்று கட்டியங்காரன் எண்ணினான். சச்சந்தனைக் கொன்ற பழியை விதைய வேந்தனும் அறிவானோ என்று மயங் கினான். மயங்கி ஓர் ஓலை விடுத்து “அரசனை யான் கொன் றேன் என்னும் ஒரு பழி உலக முழுவதும் பரந்து நின்றது; விதையத்து வேந்தனும் இதனை மெய்யென்று கொண்டான் போலும்; இனி நடந்ததைக் கூறுவேன். அசனிவேகம் பாகரை யெல்லாம் கொன்று திரிய, அதனை அடக்கச் சென்று பாய்ந்த சமயத்தில் கீழே வீழ்த்திக் கொன்றது அவ்வேழம்;

என் நெஞ்சைப் பிளந்து காட்டித் தெளித்தாலும் இவ்வுண்மையைத் தெளிவாரில்லை. உலகம் கூறுவதை மெய்யென்று கொள்ளாதே. தானே நேரில் வந்து காணின் என் பழி நீங்கும். இந்நில உரிமையும் அவனுடையதாதலால் இதனைப் பெற வருக" என்று எழுதி அனுப்பியிருந்தான். சீவகனுக்கு இவ்வோலையை வாசித்துக் காட்டி வஞ்சத்தால் நம்மைக் கொல்லக் கருதினானை நாமும் வஞ்சத்தாற் கொல்ல வேண்டும்" என்று கூறினான் கோவிந்தன். எயிறிலங்க நகைத்துக் "கூற்றுவனைக் கையால் விளிக்கின்றான்போலும்" என்றான் சீவகன்.

வேந்தன் கட்டியங்காரனோடு பகையொழிந்து நட்புப் பூண்டான்; நெல்லும் பொன்னும் யாவர்க்கும் வழங்குவீராக" என்று முரசறைந்து தெரிவிக்கப்பட்டது. மற்றை நாளிலே கடல்போன்ற தன் சேனைகளையெல்லாம் திரளச் செய்தான். மழகளிறும் மதகளிறும் இளங்களிறுகளுமாகப் பதினாயிரத்தறுநூறு யானைகள்; நம்பிரான் என்னும் உயர்ந்த சாதிக் குதிரைகள் பன்னீராயிரம்; பொற்சேணமிட்ட மயிர்ப் புரவிகள் அறுபதினாயிரம்; கவரி யணிந்து பறக்கும் கதியினையுடைய குதிரைகள் அறுபதினாயிரம்; இவற்றையெல்லாம் ஏறிச் செலுத்துவார் எண்ணிறந்தார்; வீரர் தொகை நான்கு நூறாயிரம். இப்படைகளெல்லாம் ஒருசேரப் புறப்பட்டு நில னெளியப் படர்ந்து, பெரு முழக்கத்தோடு இராசமாபுரத்தின் புறத்தே சென்றிறுத்தன. சீவகன் ஆண்டே தங்கி யிருந்தான்.

கட்டியங்காரன் தேவிமார் தீய கனவுகள் கண்டு, வலக்கண் ஓயாது துடிக்க, மேனி ஒளி குன்ற வருவதறியாது கலங்கினர். பகற் காலத்திலேயே கோட்டான்கள் குழறின. முரசங்கள் ஒலி யவிந்தன. வானிலிருந்து குருதித் தாரை

சொரிய மண்ணும் விண்ணும் அதிர்ச்சியுற்றன. இவற்றை யெல்லாம் கட்டியங்காரன் உணர்ந்தானில்லை. "சீவகனைக் கொன்றேன், கோவிந்தனையும் கொன்று முடித்தவனுனேன்; எனது சூழ்ச்சி பலியாது விட்டதில்லை; இனிக்கவலையின்றி அரசாள்வேன்" என்று தனக்குள்ளே எண்ணி மகிழ்ந்தான். இருநூறு யானைகளையும், ஆயிரம் பாய்மாக்களையும், நூறு தேர்களையும் விடுத்துக் கோவிந்தனைக் கட்டியங்காரன் எதிர் கொள்ள, வாரிமணாளன் என்னும் யானையையும், பவனவேக மென்னும் புரவியையும், விசய மென்னும் தேரையும் போக் கிக் கோவிந்தன் அவனைக் காண இருவரும் குலாவி நட்புடை யார்போல வாழ்ந்தனர்.

எண்ணிய கருமம் முடிப்பதற்குக் கோவிந்தன் ஒரு வழி கண்டான். "எய்தற்கரிய திரிபன்றி என்னும் பொறியை எய்தான் யாவனே யாயினும் தன் மகள் இலக் கணையை மணக்க உரியான்" என முரசறைந்து தெரிவித் தான். ஏனைய நாட்டு மன்னரும் இச்செய்தியை அறிய ஓலை போக்கினுன். மன்னவர் பலரும் வந்து கூடினர். கட்டியங்காரனும் தன் மக்கள்மாரோடு வந்திருந்தான். வளைந்த பற்களையும் பிளந்த வாயினையும் உடையதாகப் பொன்னுற் செய்யப்பட்டு, ஒரு சக்கரத்தினுள்ளே சுழன்று திரியும் பன்றியை எய்து கீழே வீழ்த்த மன்னவ ரெல்லாம் முயன்றனர். வினிதை நகரத்து வேந்தன் நனி முயன்று ஓர் அம்பெய்தான்; அவ்வம்பு பன்றியின் நெற்றியிலே பட்டுத் தெறித்து விழாநின்றது. அத்தினபுரத்து மன்ன னம்பு பன்றியை அசைத்த வளவிலே தங்கிற்று. காம்பிலி நகரக் காவலன் சக்கரத்தை ஏறும்போதே வழுக்கிக் கீழே வீழ்ந்தான்; மன்னவ ரெல்லாம் அதுகண்டு நகைத்தனர். அவந்தியர்கோன் சிலையை வளைத்தானுக ஊடிய மடந்தை

போல அச்சிலே வளையாமையால் அதனை முறித்திட்டு அம்பினைமட்டு மேந்தி நாணத்தால் தலை குனிந்து மணமகன் போல நின்றான். கட்டியங்காரனும் திரிபன்றியை எய்ய இயலாதவனானான். இவ்வாறு ஆறு நாள் கழிந்தன.

வேந்தராயினர் ஒருவரும் எய்யாராகச் சீவகனை யானையின் மீதேற்றிக் கொணர்ந்து பொறியை எய்து வீழ்த்துமாறு சொன்னான் கோவிந்தன். இயந்திரத்தால் முடுக்கப்பட்டு விசும்பில் திரிகின்ற பன்றிகள் மூன்றையும் பல அம்புகளால் சிதறச் செய்வதைவிட அவை மூன்றும் ஒருங்கு சேரும் காலம் பார்த்து ஒரே அம்பினால் வீழ்த்துதல் தக்கதென் றெண்ணிச் சிறிது நோக்கி நின்றான் சீவகன். அக் கருத்தினை அறியாராய் மன்னவர் பலரும் "இவ்வாறு விழித்து நிற்பவன் பன்றியை எய்யமாட்டுவனோ; இவனை எவியது பேதைமை யன்றோ" என்று சொல்லித் தம்முள் சிற்றத்தைக்கொண்டனர். சக்கரத்தின்மேல் குதித்தேறி நின்று, வில்லை வளைத்து நாணேற்றி ஓரம்பெய்தானாகக் கட்டியங்காரன் நல்வினையும் பன்றிப் பொறியும் அற்று வீழ்ந்தன. சேனைகளெல்லாம் "ஓய்"யென ஆரவாரித்தன. "குரு குலத்தார் போரேறு சீவகன்" என்பதைக் கோவிந்தன் அவையிலுள்ளார்க்குக் கூறினான். அப்போது வானிடத்தே ஒருவன் தோன்றி, "சீவகன் என்னும் சிங்கம் கட்டியங்காரன் என்னும் யானையின் உயிரை விழுங்கும்" என்று கூறினான். கட்டியங்காரன் சீறினான். மதனனும் கனன்றான். போர் மூண்டது.

சீவக! எனதாற்றலை நீயறியாய்; நின் தந்தையறிவான்; விஞ்சையர் படை கொண்டுவந்தாய் என நானஞ்சுவேனோ? உன்னையும், வஞ்சத்தால் என்னைக் கொல்லிய சூழ்ந்த கோவிந்தனையும் பெருமைகெடக் கொல்லுகின்றேன்" என்று கூறிக்

கட்டியங்காரன் கொதித்தான். களிறு பூட்டிய தேர்கள் நான்கரைக் கச்சமும், குதிரைகள் எழுநூறுயிரமும், காலாட் படை எழு தேவகோடியும், குதிரை பூட்டிய தேர்கள், யானையும் தேரும் தனித்தனி ஐந்தரைக் கச்சம் என்னும் இவை கட்டியங்காரனுடைய சேனையின் பரப்பாகும். இவற்றோடு கட்டியங்காரன் போருக்கெழச் சிவகனும் வெகுண்டான். வெகுண்ட அளவில் குலமகளிர் தம் கணவன்மாராகிய வீரரை இழத்தலால் கோலம் இன்றி இருக்கவும், புரவியும் களிறும் வீழ்ந்துபடவும், வேந்தர்களை இழந்து நிலமகள் புலம்பவும் நேர்வதாயிற்று. இனிப் போர்த்திறத்தைச் சிறிது காண்போம்.

இடிபோல முரசங்களெல்லாம் முழங்கின; சங்குகளும் கொம்புகளும் ஆரவாரித்தன; பம்பைகள் ஒலித்தன; சிறு சின்னமும் ஈடின்றி எழுந்தன. இவ்வோசைகளின் மிகுதியால் கடல் முழக்கத்தை ஒத்து நின்றது போர்க்களம். குதிரையும் குதிரையும் பாய்ந்தன; தேரும் தேரும் எதிர்த்தன; யானையும் யானையும் மோதின; வீரரும் வீரரும் உடன்றனர். பெண்களின் மார்பா லுழப்பட்ட மார்பினையுடைய வீரரெல்லாம் யானையைக் கொன்று அதன் மருப்பாலே உழப்பட்டுக் குருதியுள் மூழ்கினர். மனைவிமார் சூடிய மாலை யினைய, தங் குஞ்சியைக் குருதி நீர் இழுத்தோடத், தாமெல்லாம் நிணமாலைக் குடரைச் சூடிப் பேய்க்கு விருந்தாயினர் சில வீரர். துணிக்கப்பட்ட யானையின் நெடுங்கைகள் குடையின்மேலே வீழ்ந்துகிடப்பன விண்ணூர்ந்து செல்லும் மதியம் கருங்கோளால் கௌவப்பட்டுக் கீழே வீழ்ந்துகிடப்பதை ஒத்தன. இக்கொடுமைகளைக்

கன்றூற் காணவும் பொருளாய் நிலமகள் குருதிப் பெருக்காகிய கம்பலத்தால் தன் உடலை மறைத்துக் கொண்டாள்.

தோழன்மாரும், தம்பியரும், கோவிந்தன்சேனை வீரரும் சிவகற்காகப் போர் செய்தனர். விசயன் என்பான் மதனனை வாளாற் கொன்று வீழ்த்தினன். மன்மதனையும் அவனே கொன்றான். கண்ணுதற் கடவுள்போலச் சிறிப் புத்திசேனன் பொருது மகத மன்னனைப் புறங்கண்டான். சிறிதத்தன் என்பான் கலிங்கவேந்தனைக் கொல்ல அவனும் ஞாயிறு போலக் கீழே வீழ்ந்திறந்தான். உலோகமாபாலன் காம்பிலி மன்னனையும் அவன் களிற்றையும் வீழ்த்தான். நபுல விபுலரும் போர் செய்தனர். "என்னோடு பொருவார் உள்ளீரோ" என்று வினவிச் சென்றான் விபுலன்.

வீரின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் கிடராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியானயி லுழவன்.

இவ்வாறு பலரும் பொரவே கட்டியங்காரன் மைந்தருள்ளிட்டா ரனைவரும் இறந்தனர்.

தாமரை வடிவாகப் படை வகுத்துக்கொண்டு கட்டியங்காரன் வந்தான். சிங்கக் குருளைகள்போலத் தன் மைந்தர்கள் எல்லாம் கனல விழித்துக் குருதிப் புனலூடு கிடக்கக்கண்டு நெஞ்சங் குமுறினன். குமுறி அசனிவேகத்தின்மேலே யிருந்த கட்டியங்காரன் "வீரனே! நல்வினையுடையாரைக் கொல்லும் இயல்பிற்றாய நஞ்சும் கொல்லுவதில்லை; அஃதின்றித் தீவினையுடையாராயின் சாவின்மையைச் செய்யும் அமுதமும் கொன்றொழியும்; இருவினையின் இயல்பு இதுவாகும்: இதனால் அறிவுடையார் கொல்லுதலை

யும் கொல்லப்படுதலையும் தமதாகக் கருதார்; நூற்றுவராய என் மைந்தர் கொல்லப்பட்டமையின் ஞாயிறு தன் தன்மை திரிந்து தட்பமுடைத்தாதலும், நீ ஒருவனே அவரைக் கொன்றொழித்தமையின் மதியம் தன் தன்மை திரிந்து வெப்பமுடைத்தாதலும் உலகத்துண்டாம்; நெய்யும் திரியும் தீர்ந்தபொழுதே சுடரும் தேம்பி மறைந்து விடுதல்போல நல்வினை யற்றபோதே அற்றொழியும் செல்வத்தைப் பற்றி வைக்கவல்லார் இவ்வுலகத் தில்லையன்றோ?" என்றான். சிவ கன் அதனைக் கேட்டு "அஞ்சினாய் போலும் நீ" என்றான். "வெல்வது விதியினாலாகும் வீரத்தாலன்று; ஆதலால் அஞ்சுதல் எற்றுக்கு? என்னைப் பாய வேல் வருங்காலத்து விழித் திமைத்தலுஞ் செய்யேன்" என்றான் கட்டியங் காரன்.

இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சின்
புல்லாளனாக மறந்தோற்பின் எனப் புகைந்து
வில்வா ளழுவம் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்
கொல்யானை யுந்திக் குடைமேலுமோர் கோல் தொடுத்தான்.

இருவரும் பொரவே கட்டியங்காரன் மாய்ந்தான். வெற்றி மகிழ்ச்சியால் சேனைகளெல்லாம் பொங்கி ஆரவாரித் தன. மண்மகளும் குருதிக் கண்ணீர் பெருக அழுது அவ னிடத்துக்கொண்ட பற்றினை விட்டாள். விசயை கண்ணும் மனமும் குளிர்ந்தன.

கக. பூமகள் இலம்பகம்

பகைவரைத் தேய்த்த சீவகன் முருகனைப் போலத் தனது அரண்மனை சென்று புக்கான். தாதையைக் கொன்ற நியோனைத் தானே கொன்று தன் குடிக்கு நேர்ந்த மாசு துடைத்த காவல குமாரனை மாதரும் மைந்தரும் காதல் பெருகக் கண் மலர்ந்துநின்று கண்டனர். கட்டியங்காரன் மனைவிமாருள் ஒருத்தி, தன் மைந்தரும் கணவனும் இறந்து பட்டது கேட்ட அளவில் தானும் இறந்தொழிந்தாள். அவ ளால் முயங்கப்பட்ட ஏனைய மகளிரெல்லாம் சீவகனைக் காண அஞ்சி நடுங்கினர். அச்சந் துடைத்து அவர்கட் கருள் செய்து பொருள் பெருகக் கொடுத்து வேண்டுமிடத்தே செல்க எனப் பணித்தான் சீவகன். போருழந்த சேனைக ளெல்லாம் அலைதொழிந்தமையால் நெட்டுயிர்ப்புவிட்டு இளைப்பாறின. புண்ணுற்றூறிது புண்வாயிற் காற்றெழுதலா லுண்டாம் ஒலியும், கணவரை இழந்த மகளிரது அழுகை ஒலியும், வெற்றி முரசின் ஓவாத முழக்கொலியும் முதலிய பல்வகை ஒலிகளையும் கேளாச் சீவகன் துயில் கொண்டான்.

ஒரு பக்கத்தே மகளிரெல்லாம் துயரக் கடலுள் அழுந் திக் கரை காணாராய்க் கலங்க, ஒரு பக்கத்தே மகளிரெல்லாம் கரையற்ற இன்பக் கடலில் மூழ்கியிருப்பக் கீழ்த்திசைக்கண் ஞாயிறு முளைத்தது. கடு, நெல்லி, தான்றி இவற்றின் காய்கள் ஊறின நீரிலே கருப்பூரத்தைக் கரைத்து மடநல்லார் ஏந்திநிற்கச் சீவகன் துயில் நீத்துத் தாமரைபோன்ற கண் களைக் கழுவிக்கொண்டு முனிவனைத் தொழுது நின்றான். பின்னர்த் தன்னைப் புனைந்துகொண்டு சிங்கஞ் சுமந்த மணி யணையின்மீது சென்றமர்ந்தான். துணையாகப் பொருத

வேந்தரெல்லாம் புடைசூழ வந்தார்கள். தோழரும், தம்பியும், மாமனும், கந்துகனும் மற்றுமுள்ளவர்களும் வந்து கோயிலுள் சூழ்ந்தனர். நன்முகூர்த்தத்தில் முடிசூட்ட எண்ணினர். வானிலிருந்து ஒருவன் கீழிறங்கிவந்தான். அவன் சுதஞ்சணனுவான். அத்தேவனே நல்லோரையில் சீவகனைத் தொழுது முடிகவித்துச் சென்றான். பொன்னங்குடை மேலே நிழற்ற, கடற்றிரைபோல இருமருங்கும் கவரி வீச, மன்னரெல்லாம் தடக்கை கூப்பித் தொழுதுநிற்பத் தீஞ்சொல் மடவார் வாழ்த்துக்கூற, நகர்வலம் வந்து ஞாயிறு போல அரசுகட்டி லேறி வீற்றிருந்தான். பதினாறாண்டு கடமை நீக்கி, இறைவன் கோயிலுக்கும், செந்தீ வளர்க்கும் நான்மறையாளர்க்கும், சோதிட நூலோர்க்கும் இறையிலி நிலங்களை முன்போல விடச்செய்தும், கட்டியங்காரனால் தம் நிலத்தை இழந்தார்க்கு இழந்தவற்றின் இரட்டி தந்தும் குடிகளையெல்லாம் மகிழ்வித்தான். பகையும், நோயும், பசியும் கெட்டேயொழிய ஒருவனும் ஒருத்தியும் வாழும் வாழ்க்கையிற்போல மகிழ்ச்சியும் புகழும் பெருகலாயிற்று நாடு.

கஉ. இலக்கணையா ரிலம்பகம்

சீவக னேவலாலே அவன் தம்பியர் சென்று சீவகனால் மணம் புணரப்பட்ட மகளிரையெல்லாம் அழைத்து வந்தனர். பிரிவினால் துன்புற்று நின்றார் அத்துன்பத்தினின்றும் நீங்கி மகிழ்ச்சி மிக்கவராகித் தம் காதலனைக் கண்டு களித்தனர். மகிழ்ச்சிக் கண்ணீர் துளிக்கத் தன்னைக்கண்டு வணங்கினாரை எடுத்துப் புல்லிச் சீவகனும் தலையளி செய்தான். வேனிலுழந்து கரிந்த முல்லை மேகத்தின் தண்டுளி

களை ஏற்றுத் தழைத்தனபோலத் தேவிமாரும் இன்பத்தாற் றழைத்து நின்றனர். கோவிந்தராசன் தன் மகள் இலக்கணைக்கு மணஞ்செய்தற்கு நன்னாள் பார்த்தான். நூற்றெட்டு மதக்களிறுகளைப் பண்ணி முரசங்களை ஏற்றி அடித்து, மன்னவன் மணவினை நடக்கும் ஏழு நாளளவும் நகரத்தை நன்கு அலங்கரித்து, நல்லன உண்டும், உடுத்தும் பூண்டும் ஒருவாற்றானும் கவலையின்றி இருக்குமாறு சொன்னான்.

நகர மாந்தர் மணவிழாவினைச் சிறக்கக் கொண்டாடினர். தெருக்களெல்லாம் பந்தரிட்டுப் பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்பினர். வாழையும் கமுகும் நட்டு மாலைகளை நாலவிட்டனர்; ஆடலும் பாடலும் அரங்குதோறியற்றிக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்; கன்னலும் நெய்யும் பெய்த பாலமிர்தத்தினை ஊட்டினர்; பூந்துகிலும் மணிக்கலங்களும் வாரி வழங்கினர்; நிறைகுடமும் கண்ணாடியும் எங்கும் எடுத்தனர். இவற்றால் மகிழ்ச்சி பெருக மங்கலந் தழைய நின்றது நகரம். நல்ல ஓரையுடன் மன்னவன் வந்து இருக்கையேற அறுகும் அரிசியும் இட்டு, மந்திரத்தை உருவேற்றிய பொற்கருவியை இட்டனர். மயிலியற் சாயல் மாதரார் பலரும் பொற்குடங்களில் நீரை நிறைய முகந்து யானைகளின் மீதேற்றி மேலே குடைகள் நிழற்ற, வாச்சியம் பலவும் இயம்பக் கொண்டுவந்தனர். வெள்ளி மணையில் வேந்தன் வீற்றிருக்க மகளிர் அறுகம் புல்லை நெய்யில் தோய்த்து, “வைரக் கோட்டினையுடைய இமயமென்னும் பொன்னெடுங் குன்றுபோல ஞாலத்தே நிலவி, உலகமெல்லாம் நின் பொன்னடிக்கீழ் வைக இலக்கணையோடே மன்னுவாயாக” என்று வாழ்த்தி நெய்யேற்றினர். எற்றிக் களிற்றினுச்சியிற் கொணர்ந்த தூய நீரைச் சொரிந்து குளிர ஆட்டி

வேண்டு மணிகளை ஏந்திப் புனைந்தனர். நீலமணிபோன்ற ஒளியினையுடைய குஞ்சியை ஆற்றி அகிற்புகை யூட்டி மணமேற்றினர். சந்தனமும் பூவும் அணிந்து கோலஞ் செய்து முடித்தபின் நீருற்ற அச்சுதத்தைத் தெளித்துப் புகையெடுத்து, விளக்கையும் ஆடியையும் காட்டினர்.

இலக்கணையையும் இவ்வாறே மணையிலேற்றி நெய்யைத் தோய்த்து நீராட்டி அழகு செய்து கொண்டுவந்தனர். ஆயிரம் பொற்றூண்கள் நிறுத்தித் தூமக்குடம் ஆயிரம் சமைத்து வைத்த குளிர்ந்த பந்தரிலே மாலை பொலிய மணித்தூண்கள் ஒரு நூறுடு விளங்கிய வேள்விச்சாலைக் குள் மணமக்கள் புகுந்தனர். வீட்டு நெறியினைப் பயிலும் அந்தணராயினர், தீயை நிறுத்துகிற இடத்தே சதுரமாகப் பரப்பிய மணல், தருப்பை, சமிதை இம்மூன்றினாலும் வேதிகை இயற்றி, இரு மணி யகலுள் நீரும், ஒரு மணி யகலுள் நெய்யும், பொன்னகலுள்ளே தூபமும் பெய்து வைக்குமிடங்களிலே வைத்தனர். நெற்பொரியினை நிறை யப் பொற்கலத்தே பெய்து, பாலு நெய்யுங் கலந்து செம் பொன் மூழியில் வைத்துப் பிரம முடியாகத் தருப்பையால் முடிந்து சமிதைகளிரண்டும் வைத்தனர். நெய்யிலே தருப் பையை நறுக்கியிட்டுத் தூய்மையாக்கி, சமிதை பதினறையும் நெய்யையும் சொரிந்த அளவில், கடன்ஞால மேங்கும் திரு விளையாட அழற் கடவுள் பொங்கி வலஞ்சுழித் தெழுந்தது. திண்பிணி முழவும், சங்கும், முரசும் முழங்க வேலேந்திய வேந்தர்களின் எத்தொலியும், வீடுணர்ந்த முனிவர்களின் வாழ்த்தொலியும் பெருக அழற்கடவுள் சான்றாக மன்னர் மன்னன் பொற்காகஞ் சொரிந்த நீரைக் கையேற்றான். கோவிந்தன் என்னும் செம்பொன் மலையிற் பிறந்து சீவகன் என்னும் செந்நீர்ப் பவளக் கடலுள்ளே

பாய்வதற்காகப் பூங்கொடிபோல் நடந்துவந்து வேள்விச் சாலையாகிய மடுவினுட் டாழ்ந்த ஆறுபோல இலக்கணை நின்றாள். அவளுடைய தளிர்போலும் மெல்லிய இடக் கையைப் பற்றிக்கொண்டு தீயை வலம் வந்து மணக்கட்டி லேறினன் சீவகன். அருந்ததி காட்டுதல் முதலிய மண வினைகளெல்லாம் முடிந்தன. சீவகற்கும் இலக்கணைக்கும் மயிர்வினைக் கல்யாணம் முடிந்தது. கடிமணப்பள்ளியில் இருவரும் வாடியும் கூடியும் களித்தனர்.

வேந்தரும் வீரரும் புடைசூழ நால்வகைச் சேனை களோடு சூளாமணி யென்னும் பட்டத்து யானையின் மீதேறித் திருவுலாச் செய்தான். ஆடவரும், பெண்டிரும், இளைஞரும், முதியோரும் ஆகிய அனைவரும் அவனது திருவுலாக் காட்சியிற் றிளைத்தனர்.

> இந்நகரப் புறங்காட்டி லிவன்பிறந்த வாறும்
> தன்னகரில் வாணிகரில் தான்வளர்ந்த வாறும்
> மைந்நகரில் வேந்தர்தொழப் போந்ததுவுங் கண்டால்
> என்னைதவஞ் செய்யா திகழ்ந்திருப்ப தென்பார்.
> நஞ்சு குடித்தாலு நவையின்று தவமின்றால்
> அஞ்சி யொளித்தாலும் அரணில்லை தவமூலந்தால்
> குஞ்சரத்தின் கோட்டிடையும் உய்வர் தவமிக்கார்
> அஞ்சலில ரென்றுமற னேகளைகண் என்பார்.

இவ்வாறு பலருங்கூடத் திருவுலாச் செய்து ஒரு சோலைக்கண் சேனைகளையெல்லாம் நிறுத்தித் தான்மட்டும் தனியே சென்று அருகதேவன் திருக்கோயிலை வலம்வந்து முடிதோய வீழ்ந்து புண்ணிய முதல்வனை வணங்கித் தொழுதான். தொழுது சென்று நாளோலக்கம் வீற்றிருந்து தான் கடமைப்பட்டுள்ளார்க்கெல்லாம் ஏற்றவாறு சிறப்புச் செய்தான்.

கந்துக்கடனுக்கு அரசுரிமையைக் கொடுத்துச் சுநந்தையைத் தேவியாக்கினன். நந்தட்டனை இளவரசாக்கி, நபுல விபுலர்க்கு மன்னவ குலத்து மகளிரை மணமுடித்து மகிழச் செய்தான். தோழர்கட்குப் பட்டமும் மோதிரமும் வழங்கினன். தன்னை அன்போடு வளர்த்தெடுத்த செவிலித் தாயரை அழைத்து அவர் சுற்றத்திற்குச் சிறப்புச் செய்து மிக்க வருவாயினையுடைய ஐந்தைந்து ஊர்களைக் கொடுத்தான். சுதஞ்சணனுக்குக் கோயிலெடுத்து அவன் வடிவத்தைப் பொன்னாற் சமைத்து நாடகமாக அவன் சரிதத்தை நடத்திப் பரவவைத்தான். இளமைக் காலத்தில் தான் விளையாடிக்கொண்டிருந்த ஆலமரத்தைக் கண்டு மகிழ்ந்து அதற்கும் ஒரு பொன் மேடையிட்டு மாலையணிந்து ஐந்தூர் இறையிலியாகத் தந்தான்.

தான் மணந்துகொண்ட எண்மரையும் அரசியராக்கினான். முதன் மனைவியாகிய தத்தையை ஏனைய எழுவரும் வணங்க அவளும் மகிழ்வோடு புல்லி அளி செய்தாள். நாடு வளங்கொழிப்ப மக்கள் துன்பமறியாத இன்ப வாழ்க்கையராயினர். தேசிகப்பாவை தன்னைச் சீவகன் மறந்தொழிந்தான் போலும் என எண்ணி அநங்கமாலையின் தோழியாக வந்திருந்தாள்; வாமலேகை என்று தன் பெயரைச் சொல்லிக்கொண்டாள். கட்டியங்காரன் தன்னை வலிதிற் கற்பழித்த காலத்தும் சீவகன் பெயரைச் சொல்லித் தன்னைக் காத்துக்கொண்டதையும், அன்றுதொட்டு யாரையும் கனவிலும் கருதலின்றிக் காதலால் நைந்து நிற்பதையும் அநங்கமாலை ஓலையில் எழுதி வாமலேகையிடம் கொடுத்துச் சீவகற்கனுப்பினள். ஓலையினை வாங்கிப் பார்த்த சீவகன் கொண்டுவந்தவள் தேசிகப்பாவை என்பதை உணர்ந்து அவளோடு கூடி மகிழவைத்தான். பதுமை நகரத்திற் போல இங்கும் தேசிகப்பாவை நாடகம் ஆடி மன்னனை மகிழச் செய்தாள்.

கங. முத்தி யிலம்பகம்

காய் கனி கிழங்கு முதலிய தந்து தன்னோடு கூடப் போந்த பேருதவிக்குக் கைம்மாறாக விசையை தன் பூசனைப் பயனையெல்லாம் அத்தவமாதருக் கீந்தாள். இடு காட்டுள் யாருமின்றித் தனியே துயருழந்தஞான்று தோன்றித் துணைநின்ற தெய்வத்திற்கு அவ்விடத்திலேயே கோயிலெடுத்து விழாக் கொண்டாடச் செய்தாள். சீவகன் பிறந்த இடத்தை அறச்சாலையாக்கி நாடோறும் வந்தாரெல்லாம் நெய்யும் பாலும் வெள்ளமாகப் பெருக இன்னமுதுண்டு மகிழுமாறு செய்தாள். சுநந்தை விசையையைக் கண்டு தொழுதாள். "பீடார் பெருஞ்சிறுவற் பயந்தீர் வம்மின்" என்று புல்லி இனிய மொழிகள் பல கூறி மகிழ்வித்தாள். சீவகன் தேவியர் எண்மரும் வந்து தவக்கோலத்தில் நின்ற விசையையைத்தொழுதனர். அவர்களை எடுத்துப் புல்லி, "உலகாளும் செம்மலோரைப் பயந்தெடுத்து இறைவனை உணர்ந்து தெளிவீராக" என்று வாழ்த்தினள் விசையை. பின்னர்ச் சீவகனைக் கண்குளிரப் பார்த்து, "என் கோமானே, ஈண்டு வருக" என அழைத்து, "சீவக சாமி! நின் தந்தைதானும் ஆராத காம நுகர்ச்சியால் மறைக்கப்பட்டு அரவு கவ்விய திங்கள்போலப் புகழ்கெட வாழ்வானாயினன். அமைச்சருள் அறிவுடையார் பலரும் அறிந்து சொல்லிய காலத்தும், பாகன்வழி நில்லாக் களிறுபோல நெறியை ஒருவுவானாயினன்; நாடு நகரங் காத்தலை நெகிழவே சுற்றமெல்லாம் பற்றின்றி மெலிந்து நலிவதாயிற்று; முடிவில் அரசையும் இழந்து நின்னைப் பெறவேண்டி என்னை மயிற்பொறியில் அனுப்பிவைத்தான். வெளிறு முன்வித்திப் பின்னர் வச்சிரம் விளைத்தலாகா தென்பதை

அவன் காட்டிச் சென்றான்; ஆதலால் நம்பி, அத்தகைய தீய நெறியினை நீ உணர்ந்து போற்றுவாயாக; யான் துறவற நெறியைச் சேர்வேன்" என்று கூறினாள்.

தாயின் பிரிவைக் கேட்கப் பொறாத மனத்தனாய்ச் சீவகன் மயங்கி வீழ்ந்துவிட்டான். பனிநீரைத் தெளித்துச் சாந்தாற்றியாலே வீசி மயக்கத்தைப் போக்கவே, உணர்வு வந்து சீவகன் எழுந்து "அன்னையீர்! நீவிர் அருளியது யாதோ; அதனை அறியகில்லேன்; இப்போது அருளிச் செய்யும்" என்று கேட்டான். மீண்டும் விசையை, "நமது வாணாள் இத்துணை என்று ஒருவரேனும் வரையறுத்துக் கண்டாரில்லை; இறவாது வாழ்தே இருக்க வழிகண்டார் போல வாளா உறங்கி இறக்குஞான்று கண் புதைத் திரங்குதல் மடவோர் செயல்; மேகங்கள் கடுவளியினால் ஒருங்கு சேர்க்கப்படுதலும் சிதறடிக்கப்படுதலும்போல வினையினால் உறவு சேர்க்கப்படுதலும் பிரிக்கப்படுதலும் நிகழ்கின்றது; ஆதலால் வாழ்நாள் முடியுமுன்னே சுற்றம் முதலிய பற்றின்றி, தவமும் தானமும் நிகழ்த்தி நல்ல நெறியில் நின்று நோன்புகளை நோற்று வீடடைதல் உணர்வோர் செயலாகும். முல்லை முகைபோன்ற பாலடிசிலை நல்ல கருணையோடு மெல்லியல் மகளிர் கையேந்தி ஊட்ட உண்டார், 'அடகேனும் இடுதிர்' என்று ஓடெடுத்து நிற்றலைக் காண்பீர் செல்வத்தை நம்புதிரோ! மைபோலத் திரண்ட வார்குழல்மேலே மல்லிகை மாலையைச் சூடிக் கையகத்தே வேலேந்தி மங்கையர் மருளச் சென்ற காளையரும் மூத்து நரைத்துத் தண்டூன்றிக் கண்டார் நகைக்க நடத்தலைக் காண்பீர் இளமையை நம்புதிரோ! இவற்றையெல்லாம் நம்பாது நல்லறமே செய்வீராயின் உறுதி தேடினீராவீர்," என்று நல்லுரை பலவும் பகர்ந்தாள்.

இவற்றைக் கேட்டுநின்ற சுநந்தை தானும் துறவறஞ் செல்ல உறுதிகொண்டாள். சீவகனும் அவன் தேவிமாரும் மழைபோலக் கண்ணீர் வார அழுதனர். சச்சந்தன் இறந்த நாளினுங்காட்டில் நகரமும் புலம்பிற்று. ஆயிரம் மகளிர் புடைசூழச் சுநந்தையும் தானுமாகப் பம்மை கோயில் நண்ணித் தம்மைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுமாறு விசையை வேண்டினாள். அவ்வடிகள் துறவு நெறியை அருளத் துறவு பூண்டனர். கலன்களை யெல்லாம் சிதறி மயிர் களைந்து வெண்டுகி லுடுத்து மெய்ந்நூற் பொருளை யுணர்ந்து புகழுரைக்கு மகிழ்ச்சியும், இகழுரைக்கு இரக்கமு மின்றி என்னான்றும் ஒரு தன்மையராயினர். சீவகன் சென்று அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து, "அடிகளீரோ! இக்கோலத்தை யான் கண்டு வழிபட்டு மகிழ்வதற் கேனும் சின்னாள் ஈண்டுத் தங்கியருள வேண்டும்" என்றான். மாதவ மகளிரெல்லாம், விசையை நம்பிக்கேற்ற இன்னுரை தருமாறு சொற்றனர். சிலநாள் தங்கினர். சீவகன் மீட்டும் சுநந்தையை நோக்கி, "என்னை வளர்த்தெடுத்த தாயீரே! நீர் ஒன்றும் இல்லீர்போல் யானிருக்கவே துறத்தல் கொடிது; அன்புடைய நீவிர் என்கட் சுடுதுயர் செய்தீர்; இது நன்றாமோ?" என்று அழுது கூறினான். "திருமகளனைய விசையை துறவுநெறி நிற்க யான் அரசினை உவந்து நிற்பேனாயின் பழியன்றோ நிலைக்கும்; இப்பழியை எவ்வாறு யான் போக்கிக்கொள்ளுவேன்; ஆதலால் நீ கலங்காது ஆள்வினையை மேற்கொள்ளுதி நம்பி" என்று சுநந்தை சொன்னாள்.

இறைவனை இன்பத்தே மயக்க அமைச்சர் எண்ணினர். நீரைச் சாந்துடனே கலந்து வாவி நிறையப் பூரித்து, கொய்ய தெப்பங்களை நிறைத்து மாலை, சாந்தம், மணிச்

சிவிறி, சுண்ணம் முதலிய விளையாட்டுப் பொருள்களையும் அமைத்து மன்னவனை மனைவிமாருடன் நீர் விளையாடச் செய்தனர். குளிர்நீர் மூழ்கியும், மாலை யெறிந்தும், சுண்ணம் தூவியும் விளையாடி முடித்தனர். மன்னவனும் மகிழ்ச்சியில் திளைத்தான். முதுவேனில் முதலிய பருவங்கள் மாறும்போதெல்லாம் ஏற்றவாறு வளம் பெருக்கிக் கொண்டு அவ்வக்காலத்தில் நுகரத்தக்க இன்பமெல்லாம் நுகர்ந்தான். மனைவியரெல்லாம் கருவுற்று மக்கட் பயந்தனர். சச்சந்தன், சுதஞ்சனன், தரணி, 'கந்துக்கடன், விசயன், தத்தன், பரதன், கோவிந்தன் எனத் தன் மக்கள் எண்மர்க்கும் பெயரிட்டுக் கலைகள் பலவற்றையும் பயிற்றுவித்தான். இக்காலத்து வேந்தன் முப்பதாண்டு நிறையப் பெற்றிருந்தான்.

ஒருநாள் வேந்தன் சோலைவளம் நுகரச் சென்றான். வானவர் மகளிர்போல வார்கயிற் றூசலாடியும், தேன் பொழியும் மணமலர்களுள் நல்லவற்றைக் கொய்து நின்றும், மலையுச்சி யேறி நின்று கூவியும் மன்னவனைப் பிரிந்து தேவியரெல்லாம் விளையாடினர். அருவி நீராடி மதஞ் சோர நின்ற மழகளிற்றினை அணுகிப் பிடியொன்று தளிராலே வீசி வண்டோச்சி நிற்பதைக்கண்ட மங்கையர் தாமும் அரசனைக் காணத் தழைத்தனர். அங்ஙனம் விரும்பிவந்த மகளிர் மலராகத் தான் வண்டாக இருந்து இன்பம் நுகர்ந்தான் சீவகன். நுகர்ந்தவன் பிரிந்து சென்று ஒரு தேன் சொரியும் வருக்கை நீழலைச் சேர்ந்தான். ஆண்டுக் கடுவன் ஒன்று களவொழுக்கத்தை விழைந்து ஒரு மந்தியை அழைத்து அதனோடு கூடிச் சென்றது. சென்றபின் கடுவனின் காதல் மந்தி, கடுவன் செய்த முன்னைய செயலைக் குறித்து ஊடி நின்று, "பரத்தையரைத் தோய்ந்த

நின் மார்பு தூய தன்றாயிற்று; தெளிந்த சுனையிலே குளிர மூழ்கி வம்மின்" என்று கூறிற்று. கடுவன், "காதலி! நீ சொல்லியவற்றை யான் நினைத்ததும் இல்லை; அன்றியும் நித்தலும் பாலும் தேனும் உண்பான் வேம்பினையும் காஞ்சிரங்காயினையும் உண்ண விரும்புவனே? நீயே சொல்லுதி" என்று வேண்டிற்று. மந்தி மறுமொழி கொடாது தனித்து நோக்கிற்று. கடுவன் மீண்டும் அதனை நோக்கி "இங்ஙனம் மையை நோக்கி என் செய்யக் கருதினை; என் உயிர் இனி நில்லாது; நீயே சிறிது பொழுதில் அதனைக் காண்பாய்" என்று கூற மந்திதானும் ஊடல் நீங்கித் தானே கடுவனைத் தழுவிக்கொண்டு தன்னையே பழித்துக்கொண்டது. தன் கண்ணாரக் குற்றத்தைக் கண்டுவைத்தும், இல்லை என்று கடுவன் சொல்லிய சொல்லைத்தேறி ஊடல் நீங்கியதுமன்றிப் பலவின் பழத்தைக் கீறிச் சுளைகளைக் கையால் எடுத்துக் கடுவனுக்கு மந்தி கொடுத்தது.

இவ்வாறு காதல் கனிந்து விளையாடிய கடுவனையும் மந்தியையும் சிலதனொருவன் வெருட்டி ஓட்டிவிட்டு அச் சுளைகளைக் கவர்ந்துண்டான். இதனைக்கண்ட மன்னவன், தன் மனையாள் பிறரோடு கூடியிருத்தலைக் கண்டான்போல அரச போகத்திலும் வாழ்க்கையிலும் வெறுப்புத் தோன்றி நின்றான். அரசினை இழந்த கட்டியங்காரன் கைப்பழம் இழந்த மந்தியை ஒத்தான்; கட்டியங்காரனை அலைத்து அரசினைப்பற்றிய யான் வேடனை ஒத்தேன்; இன்றைய அரச போகமே பழமாகும்" என்று மெய்யுணர்வு தோன்ற மன்னன் சிந்தித்தான். "மெலியவர் செல்வத்தை வலியவர் வௌவி யுண்ணும் கலியின தியல்பைக்கண்ட நாம் மன மடங்க நோற்றுத் துறக்கம் நண்ணுதலே சால்புடைத்து; நல்வினைப் பயத்தாற் கிடைத்த மனைவியரும் மக்களும்

தீவினையாற் பிரிக்கப்பட்டுவிடுவர்; வேட்கைத் தன்மை என்னும் நாவாலே காமமாகிய கள்ளையுண்டு மயங்கினேற்குத் தேவராயினர் கைவிளக்காகிய துறவுள்ளத்தால் அவ்விருளீங்கச் செய்தார்போலும்" என்று தன் மனத்தை உலகியலினின்றும் மீட்டான். மனைவியரெல்லாம் பழமைபோலக் கூடுதல் விருப்பாற் குறிப்புச் செய்தனர். சீவகன் அவற்றுக் கிணங்காது வைர உள்ளம் படைத்தவனானான். காலம் வரவே நீராடி இன்னடிசில் அயின்று வாச வெள்ளை யடக்கி அறிவர் கோயிலை நாடிச் சென்றான்.

நற்றவஞ் செய்த வீரர் வாழ்ந்த இடத்திற் சென்று அவர்களை வணங்கிச் சாரணரைக் கண்டு தனக்குத் துறவு நெறியை அருளிச் செய்யுமாறு வேண்டினான். சாரணனும் யாக்கைய தருமையும், அழிவும், துன்பமும் முதலவாகத் தெரிந்துகொண்டு பின்வருமாறு அருள்செய்தான். "மன்னனே! வடகடலில் இட்டதொரு நுகத்தைத் தென்கடலில் இட்டதொரு முளைசார்ந்து அந்நுகத்துளை யுள்ளும் சென்று பொருந்துவதுபோல அவ்வளவு அரியது மக்கள் யாக்கையைப் பெறுதல்; வளமுள்ள நாட்டில் பிறத்தலும், சான்றோர் குலத்தில் பிறத்தலும், வாமனர் நெறியினைச் சேறலும் அவ்வாறே மிகவும் அரியவாகும்; இத்துணை அருமையும் கடந்து மக்கட் பிறவி பெற்றாரும், கருவிலே அழிவாரும், குழவிப் பருவத் தழிவாரும், இளமைப் பருவத் தழிவாரும், முதுமைக் கணழிவாரும் எனப் பாம்பின் வாய்த் தேரைபோல நிலையாமையின் வாயிலே வாழுகின்றனர்; இறவாது யாக்கையோடு நிலைத்து நின்றார் ஒருவரும் இல்லை; உலகமெல்லாம் ஒருகுடைக்கீழாண்ட மன்னர் மன்னரும் மாண்டே போயினரன்றோ! திரை குவித்த மணல்போலப் பலவாயின அவர் ஊரும் பெயருங்கூட இன்று

அறிவா ரில்லையே! இதனால் உலகம் நிலையாதது என்பதை உணர்வாயாக.

நரக கதித் துன்பம்

தீவினை செய்தார் நிரயத் தழுந்திப் படுந்துன்பத்தினை மன்னவனே கேட்பாயாக: தசைகளைப் போழ்ந்து நெருப்பிலே காய்ச்சி விருப்போடு தின்றவர்கள், மகளிரெறிந்த பந்துபோலப் பொங்கிப் பொங்கி நெருப்பிலே வீழ்ந்து வேகாநிற்பர்; உடம்பினைப் பற்றிய வேடரெல்லாம் வைரம் போன்ற பற்களையுடைய செந்நாயால் கடியுண்டு அலறிப் பதைப்பர்; வாளைமீனைச் சுவைத்துச் சுவைத்துண்டார்கள், தறியிலே கட்டிவைக்கப்பட்டு உருக்கிய செப்புப் பாளத்தைக் கொடிற்றாலே எடுத்து வாயில் வார்க்கப் பதைத்தெரிகின்றவர் ஓடவும் வழியின்றித் துன்புறுவர்; தன் மனையாள் வருந்திப் புலம்பத் தான் பிறர் மனைதேடிச் சென்ற தீயராயினார் ஒள்ளழலிலே உருகவெந்த செப்புப் பாவையினைத் தழுவி உடம்பெல்லாம் பற்றியெரியப் பதறிப் படுவர்காண்; இவ்வாறு துன்புறுவோர் நீர்வேட்கையால் நலிந்து கூவல் செய்வாராயின் ஆண்டுச் சீயும் உதிரமும் குழம்பாயிருத்தலைக் கண்டு புலர்ந்து நிற்பர்; வெயிலால் வாடி நிழலுண்டைத் தெனப் பந்தர்ச் சேர்வாராயின் ஆண்டும் வெந்துகு நெருப்பாற் கரிந்து நிற்பர்; தீவினைத் தேர்களூர்ந்து நரகத்துச் சென்றார் படுவ இவை.

விலங்கு கதித் துன்பம்

மலையகத்தே புலியேறு முழங்க உழைமான் நடுங்கும் நடுக்கம் நின் பகைவர் நினக்கு நடுங்கும் நடுக்கத்தை ஒத்தது காண்; நாயோடு வளைத்துத் தன்மேல் கணையழுந்துமாறு

வேடன் வில் வளைப்பக் கண்டு மயிலேறு படுந்துன்பம் சிறிதோ! மறிகள் தம்மை அறுத்து உதிரத்தைத் தூவித் தேவர்க்குப் பலிகொடுக்குங்கால் படுந்துன்பம் நரகத்தினும் நான்மடங்கு கொடியது. உடும்பு, வரால், வாளை இவற்றை உயிரோடு பற்றிக் கொடுவாய்க் குயத்திட்டு வாய்பிளந்து அழுமாறு அறுக்கும் கொடுமை சொல்லும் தரத்ததோ! பெரும்பாரம் ஏற்றிய சகட்டினைச் சிறிதே நீருடைய யாற்றிடு மணலுள்ளே மூக்கை நிலத்தேயூன்றி முழந்தாளையிட்டு மண்டிபோட்டு இழுத்துத் தம் வலியெல்லாம் குன்றி எலும்பு நொறுங்கியனபோலப் புல்லும் உண்ணுவாய்ப் பகடுகள் படும் உழப்புக் காணத்தக்க தன்று; யாண்டும் தமக்கு அரணின்றி வலிய விலங்குகளாலும், மக்களாலும் விலங்குகளெல்லாம் படுந்துன்பம் இன்னும் சாலப் பல. மாதவரை வைது கொடிய செய்தாரும், கிடைத்தவற்றைப் பகுத்துண்ணுதாரும், விலைமகளிரும் முதலியோர் விலங்குகளாய்ப் பிறப்பர்.''

மக்கட் கதித் துன்பம்

"வேந்தனே! அழகும் இளமையும் கனிந்துள்ளேமென்று தம்மைத் தாமே நினைந்திறுமாக்கும் மாந்தர்கள், தாயின் கருவினுள் புழுவாயிருந்து பெருகிய மலப் பிண்டத்தோடு நீர்தானின்றறுத அள்ளலையுடைத்தாகிய சுர்த்திடத்தேயிருந்து தாம் வந்ததை நினையாது போயினர்! மகளிரிடத்துள்ள அவாப் பெருகுதலினாலே அவரைப் பெறுதற்காகப் பொருளைக் களவாடிக் களவு கண்டார் யானைக் கிடுதலால் துன்புறுகின்றனர். ஒரு சாரார் பொருள் வேட்கையால் வங்கம் நடத்திப் போயினர் நடுக்கடலிலே கலங் கவிழக் கண் கலுழ்ந்து படுந் துன்பம் சொல்லற்கரியது; மன்னவர் சிறித் தண்டம் விளைத்தாலும் பிற நேர்ந்தாலும்

இவ்வாறே துன்பம்; விரும்பிய பெருமையாலும், அன்புடையாரைப் பிரிதலாலும், இளமை கழிந்து மூப்பு வருதலாலும், கல்வியறிவின்றி எள்ளப்படுதலாலும் மாந்தர்கட்கு விளைவது துன்பமேயாயிற்றுக் காண்.''

தேவ கதித் துன்பம்

அழகும் இளமையும் குன்றாத மகளிரொடு தாம் விரும்பியவாறு போகம் நுகர்ந்தும், கற்பக நீழலில் துயின்றும் தேவராயினர் தாமே அதன்கண் வெறுப்புத் தோன்றப் பெறுவர். அன்றியும், தேவராயிருந்தும், ஒருவர் ஒருவரால் சிற்றஞ் செய்யப்பட்டும், ஒருவர்க்கு ஏவலாகிப் பணி கேட்டும் மனம் நொந்து புண்ணுறுவர்; ஆதலால் இக்கூறிய நால் வகை யாக்கைகளாலும் வருவது துன்பமே என உணர்வாயாக. இவ்வாறு அறிந்தவற்றைப் பொய்யின்றிக் கண்டு தெளிதல் நற்காட்சியாகும்; அருகப் பெருமானை ஏத்தித் தெளியும் பொருள்கள் ஐந்தும், ஆறும், ஒன்பதும் என்று சொல்லுவர்; வினைப்பயனை நுகர்தல் எவ்வுயிர்க்கும் ஒக்கும் என எண்ணிப் பெரியோரை வியத்தலின்றியும், சிறியோரை இகழ்தலின்றியும் ஒப்ப நோக்குவார் இறைவனுடைய பரமாகமத்தைத் தெளிந்தோராவர்; சினத்தையும் செருக்கையும் போக்கி, அறிவர்க்குச் செய்யும் சிறப்புக்களை விரும்பிச் செய்து, வீட்டுணர்வு தலைநிற்ப வெறுப்பின்றி யொழுகி, அறத்தினைப் பலர்க்குங் கூறித் தன்புற்றூரைத் தாங்கி இச்சமயத்தார்க்கெல்லாம் இனியராயிருத்தலே தெளிவென்று சொல்லப்படுவது; இவ்வாறு நின்றார் நாற்கதியுட் பிறந்திறந் துழலார்.

சீலம்

மயக்கத்தினைச் செய்யும் ஐம்பொறியையும் வாட்டிப் புறத்தே இயன நிகழாமற் பாதுகாத்து, நோன்பியற்றலே

சிலம் எனப்படுவது ; பிறர்மனை விழைதல் முதலிய குற்றங் கடிந்து புறஞ்சொல் நாளி ஒழுக்கத்தில் நிற்பர் நல்லோர்.

தானம்

பொய்யும், கொலையும், களவும், காமமும், அவாவும் என்னும் இக்குற்றங்களைப் போக்கி, வாய்ச்சியின் வாயி னுலே மயிர்தோறும் செத்தினும், பூச்செண்டுகளைத் தூவி வாழ்த்தினுலும் ஒப்ப நினைத்துப் பெரியோரைக் காலின் அடங்கி வழிபட்டு நால்வகை யமிர்தத்தையும் கொடுத்தல் கடன். தலையாய தானஞ் செய்தார் போக பூமியிலே பிறந்து நாற்பத்தொன்பது நாளுக்குள்ளே உறுப்பும் குணமும் கலை யும் நிரம்பப் பெற்றவர்களாகித் தமக்கொத்த மகளிரோடு கூடி இன்பந் துய்த்து நிற்பர்! துறவிகளல்லாத வேற் றோர்க்குத் தானஞ் செய்தோர் மக்களுடம்பும் விலங்கு முகமுமாய்க் கடல் நடுவண் தீவுகளிற் பிறந்துழல்வர். சிலம் என்னும் நெறியினை நின்ருர் கற்பத்தில் அமரராவார். காட் சியி னமிர்த முண்டார் உலகங் காக்கு மன்னராவார்.

வீடு பேறு

உண்மைப் பொருளை இதுவென ஞானத்தால் உணர்ந்து, அப்பொருளைக் காட்சியாற் றெளிந்து, அங்ஙு னந் தெளிந்த இரண்டனையும் மனத்தைவிட்டு நீங்காமல் ஒழுக்கத்தால் காத்து இருவினை மாமரத்தினைச் சுட் டெரித்து உயிர்க் கிழவனைத் தனியே பிரித்தல் வீடெனப் படும். அவ்வாறு பிரிந்த இடத்துப் பெற்ற பயனை அநந்த சதுட்டயம் என்பர். கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம் என்ற இவையெல் லாம் விண்ணிலுள்ளார் தொழும்படி வந்து சேருதலால்

அம்மேலுலகம் அறியப்பட்டதொன்றே" என்று சாரணர் கூறி முடித்தனர்.

"பெரியோய்! எனது பழம் பிறப்பு வரலாற்றினைக் கூறியருளுக," எனச் சீவகன் வேண்டினன். சாரணரும் அதற்கிணங்கித் "தாதகி நாட்டு மன்னவன் பவணமா தேவற்கும் அவன் மனைவி சயமதிக்கும் பிறந்த அசோதரனாக நீ யிருந்தாய்; நின் மனைவியர் விளையாடுவதற்காக அன்னப் பார்ப்பு ஒன்றைப் பிடித்துத் தந்தனை; நின் தந்தை அது கண்டு "பறவைகளையும் விலங்குகளையும் தங்கிளையினின்றும் பிரித்தல் தகாது" என்றுகூற அச்சொல்லே சொல்லாக நீ சென்று தவஞ்செய்து இந்திரனாய் அரசுபுரிந்து இங்கே தோன்றினை; அன்னப் பார்ப்பினைக் கிளையினின்றும் பிரித்துச் சிறைப்படுத்தியதால் நீயும் அத்தகைய துன்பத்தை யடைந்தாய்" என்று கூறினர். சீவகன் அவர்கள் திருவடிகளை வணங்கியபின் அவ்விருவரும் விசும்பாறாகச் சென்று மறைந்தனர்.

பின்னர் நந்தட்டனை அழைத்து "இளையோய்! அரசாட்சியை ஏற்பாயாக; யான் துறவு பூணவேண்டும்" என்றான். தானும் துறவுள்ளம் உடையனாய் நந்தட்டன் அதற்கு இணங்காதவ னானான். ஆதலால் தத்தை பயந்த தனியிளங் குமரன் சச்சந்தனை அழைத்து "நம்பி! கடல் சூழ்ந்த இவ்வுலகெல்லாம் நின் குடைக்கீழே தங்க, நெறி மாறாது நின்று இவ்வுலகத்தை அறம் பெருகக் காத்தியாயின் அதனால் விளையாத பேரின்பம் இல்லை; இறை கொள்ளுங்கால் குடி வருந்தாது கோல்கோடாது நின்று கொள்ளுவாயாக; நெல்லாலும், நீராலும் மக்கள் வாழுதல் இல்லை; மன்னவனாற்றான் மக்கள் வாழ்கின்றனர் என்ற உண்மையை உணர்வாயாக; காவலாணையை நடாத்தும் முறைமை

யறிந்து நடத்திப் பகைவரைத் தேய்த்து வாழ்வாயாக; குடி பழி தூற்றப்பெறாது, பொய் யொருவி அமைச்சர் வழி நின்று காவல் செய்க" என்று நல்லறிவு கொளுத்தி இளவர சாக்கினான். பின்னர் அவனுக்கே முடிசூட்டி நந்தட்டன் புதல் வர்களைக் குறுநில மன்னர்களாக்கி அவரவர்க்கு வேண்டுவ வெல்லாம் நல்கினான்.

மனைவியரை அழைத்துத் தான் துறவறஞ் செல்வ தைக் கூறினான். கேட்ட மாதரா ரெல்லாம் வீரக் கழ லணிந்த சேவடியில் வீழ்ந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக அழுதனர். தாமரை போன்ற அவ்வடிகளைப் பற்றிக் கொண்டு "அடிச்சியரேம் நுங்கட்குச் செய்த பிழை யுண்டோ; புதியீர்போல நின்று நொதுமலர்போல நோக்கி எம்மை இறக்கக் காண்பீரோ! நெஞ்சம் வலியீராயினீர்; இங்ஙனம் நீரே எம்மைக் கைவிடுவீராயின் காப்பார்தான் யாரோ" என்று புலம்பினர். அந்தப்புர மெல்லாம் அழுகை யொலி மயங்கிக் கிடந்தது. நகரமெல்லாம் சீவகன் துறவு கேட்டுப் பதறிநின்றது. ஆடலும் பாடலும் முதலிய ஒன்று மின்றி நகரம் புற்கென்று பொலிவிழந்து நின்றது. தேவி யர் சீவகனுரையால் தேறித் தெளிந்து தாமும் பற்றுவிட் டுத் துறவறத்தை விழைந்ததாகக் கூறினர். அவர்களை விசையைபாற் சேர்த்துத் தவஞ்செய்யுமாறு பணித்துத் தான் சென்றான்,

தேவர்கள் சீவகனைச் சிவிகையி லேற்றிச் சமவசரண மென்னும் சைனக் கோயிலை அடைந்தனர். மயிர்களையும் கலன்களையும் களைந்து சீவகன் துறவுக் கோலத்தில் நின்று பெருமானைத் துதித்துவந்தான். சுதஞ்சணன் வந்து சீவக னைக் கண்டு சென்றான். தம்பியரும் தோழன்மாரும் எல் லாம் தூய நோன்பியற்றி முனிவராயினர். மகத நாட்டு

மன்னவன் சீவகனை அவனது பேரொளியாற் கண்டு வியந்து முனிவரால் சீவகன் பெருமையை உணர்ந்தான். தேவியரும் பெருமானைத் துதித்து அவனருளால் மெய்ந்நூற் பொருளை உணர்ந்து வீடு பெற்றனர். சீவகன் முத்திபெறுங் காலம் வந்தது. விண்ணவரும் மண்ணவரும் தொழப் பரிநிர்வாணம் என்னும் கல்யாணம் அவனுக்கு நடந்தது. கேவல ஞான மென்னும் பூங்கொடியைப் பிரியாது சீவகன் இன்பக் கடலுள் மூழ்கினன்.

பிரிதலும் பிணியும் மூப்பும் சாதலும் பிறப்பும் இல்லா
அரிவையைப் புல்லி யம்பொன் அணிகிளர் மாடத் தின்றேன்
சொரிமது மாலை சாந்தம் குங்குமஞ் சுண்ணம் தேம்பாய்
விரிபுகை விளக்கு விண்ணோ ரேந்தமற் றுறைபு மன்றே.